# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 32 கதிர் 352 ஐப்பசி 27ஆம் நாள் திங்கட்கிழமை 13 நவம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

# எமது அடிப்படைக் கோரிக்கைகளில் இருந்து நாம் மாறவேகூடாது அவர்கள் ஏதாவது தந்தால் ஏற்கவும்கூடாது; எதிர்க்கவும் கூடாது

*இப்படிச் சொல்கிறார் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன்*

யாழ்ப்பாணம், நவ. 13

குற்றத்தால் குறுகுறுக்கும் உங்கள் நெஞ்சங்கள் முன்வந்து எமக்குத் தருவனவற்றை நாம் எதிர்க்கவும் மாட்டோம்; ஏற்கவும் மாட்டோம். தொடர்ந்து எமது அடிப்படைக் கோரிக்கைகளை அவை கிடைக்கும் வரையில் நாங்கள் முன்வைத்துக்கொண்டே இருப்போம். அவற்றுக்காகப் போராடவும் தயங்க மாட்டோம். இத்தகைய அடிப்படையில்தான் எமது சிந்தனை அமைய வேண்டும். எமது அரசியல் அறிக்கைகளில் இருக்கும் அடிப்படை அரசியல் கோரிக்கைகளில் இருந்து நாம் எப்போதுமே மாறப்போவதில்லை என்பதை வலுவாக அரசுக்கு எடுத்துக்கூறவேண்டிய கடப்பாடு எமது தலைவர்களுக்கு உண்டு. இதை எமது தலைவர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். தமிழ் மக்கள் பேரவையின் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேச்சுக்களின்போது நாம் எமது கோரிக்கைகளை வலுவுடனும் திடமுடனும் எடுத்துக்கூற வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. எம் உரிமைகள், உரித்துக்களைப் பறித்துக் கொண்ட பெரும்பான்மையினர் தாம் நினைத் » 25

## புளொட் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 13

தமிழ் மக்கள் பேரவையின் நேற்றைய கூட்டத்தில் புளொட் அமைப்பின் பிரதிநிதிகள் எவரும் பங்கேற்கவில்லை. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்கே இந்தக் கூட்டம் கூட்டப்படுவதாலேயே தமது அமைப்பின் சார்பில் யாரும் பங்கேற்கவில்லை என்று புளொட் அமைப்பின் முக்கிய தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் » 04

## கட்சி நலன் கருதியே தனித்துப் போட்டி!

*சுரேஷின் செயல் குறித்து முதலமைச்சர் மறைமுகமாகச் சாடல்*



யாழ்ப்பாணம், நவ. 13

சகல கட்சிகளையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கீழ் ஒன்றுபடுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில் சில கட்சிகளின் தனித்துவமான கட்சி எதிர்பார்ப்புக்கள் அல்லது கட்சியின் நல உரித்துக்கள் பற்றிய அவர்கள் » 25

# க.குமார் - சுரேஷ் சேர்ந்து புதிய தேர்தல் கூட்டு

*தமிழ் மக்கள் பேரவையும் இதற்கு உடந்தையாம்*

யாழ்ப்பாணம், நவம்பர் 13

தமிழ் அரசுக் கட்சியின் சின்னத்தில் இனிமேல் தேர்தலில் போட்டியிடமாட்டோம் என்று அறிவித்த ஈபிஆர்எல்எவ் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இணைந்து உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வதற்காக புதிய முன்னணி ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

தாம் இந்த முன்னணியில் போட்டியிடுவதை இரண்டு கட்சிகளின் தலைவர்களும் நேற்று உறுதிப்படுத்தினர். இதில் பொது அமைப்புக்கள் சிலவற்றையும் உள்ளடக்குவது குறித்து ஆராயப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.



தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நேற்று நடைபெற்றது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சுரேஷ்பிரேமச்சந்திரனும் தமது முன்னணி குறித்து அறிவித்தனர்.

பேரவையின் நேற்றைய கூட்டத்தில் அதன் இணைத் தலைவர்களில் ஒருவரான » 04

## வேட்பாளர் தெரிவுக்காக குழு நியமித்தது பேரவை

யாழ்ப்பாணம், நவ. 13

தமிழ் மக்கள் பேரவையால் களமிறக்கப்படும் புதிய அரசியல் முன்னணிக்கான வேட்பாளர் தெரிவு, ஆசனப் பங்கீடு என்பவற்றை முன்னெடுப்பதற்காகத் தமிழ் மக்கள் பேரவையால் வழிநடத்தல் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவே கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன் முன்னணியின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விடயங்களைக் கையாளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம், யாழ்ப்பா » 04

## தொடருந்து மோதி ஒருவர் உயிரிழப்பு

*மீசாலையில் துயரம்*

யாழ்ப்பாணம், நவ.13

மீசாலை, புத்தூர் சந்திப் பகுதியில் நேற்று தொடருந்து மோதி ஒருவர் உயிரிழந்தார். மீசாலை மேற்கைச் சேர்ந்த தெய்வேந்திரன் ஞானயுகன் (வயது 37) என்ப » 04

# புதிய தேர்தல் முன்னணிக்கு பேரவை இணங்கி வராது

*முதலமைச்சர் அடித்துச் சொல்கிறார்*

கஜேந்திரகுமார் - சுரேஷ் பிரேமச்சந்தி ரன் இணைந்து உருவாக்கியிருக்கும் தேர்தல் கூட்டுக்கும் தமிழ் மக்கள் பேரவைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும், பேரவை இதற்குப் இணங்காது என்றும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களுள் ஒருவரும், வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ் வரன் தெரிவித்தார்.

"தமிழ் மக்கள் பேரவை » 04

## புதிய முன்னணிக்கு த.ம.பேரவை மறைமுக ஆதரவு

யாழ்ப்பாணம், நவ. 13

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் ஈபிஆர்எல்எவ் கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இணைந்து உருவாக்கியிருக்கும் புதிய தேர்தல் கூட்டுக்கு தமிழ் மக்கள் பேரவை தனது ஆதரவை மறைமுகமாகத் தெரிவித்துள்ளது.

"நின்றுநிலைபெறக்கூடிய நிர்வாகங்களை » 04

see more news in newuthayan.com

# புதிய அரசமைப்பு ஊடாக ஈழத்தை வழங்க முயற்சி

*அரசுக்குத் தக்க பாடம் புகட்ட அழைக்கிறார் மகிந்த*

அநுராதபுரம், நவ. 13

பிரபாகரனால் 30 ஆண்டுகள் போர் நடத்திப் பெறமுடியாமல்போன ஈழத்தை புதிய அரசமைப்பின் ஊடாக வழங்குவதற்கு அரசு முயற்சிக்கின்றது. இதற்கு மக்கள் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. உள்ளூராட்சிசபைத் தேர்தலில் கூட்டரசுக்கு மக்கள் தக்கபாடம் புகட்டவேண்டும். மக்கள் வெள்ளம் எமது பக்கம் திரண்டுள்ளது. கோவணத்துடன் ஓடுவதற்கு அரசு தயாராக இருக்கவேண்டும். » 25

## ஈபிஆர்எல்எவ் மாற்று அணிக்கு கூட்டமைப்புக்குள் வர அழைப்பு

*ரெலோ செயலர் சிறிகாந்தா விடுத்தார்*

யாழ்ப்பாணம், நவ. 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து கொள்ளுமாறு ரெலோ அமைப்பின் செயலர் ந.சிறிகாந்தாவிடம் இருந்து அழைப்புக் கிடைக்கப் பெற்றதாக, ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா அணி என்று » 04

# முஸ்லிம்களையும் அரவணைத்தபடியே தமிழ் பேசும் மக்களாகப் பயணிப்போம்!

*தமிழ் அரசுக் கட்சியினரை அழைக்கிறார் சம்பந்தன்*

» 25

## போதைப்பொருள் விற்றவர் கைது

புத்தளம்,நவ.13
புத்தளம் முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹான்ஸ் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மதுரங்குளிரஹ்மத் கிராமத்தில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே, முந்தல் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து ஹான்ஸ் போதைப்பொருள் அடங்கிய சிறியளவிலான 600 பைக்கற்றுக்களும், 27 ஆயிரத்து 500 ரூபாய் பணமும் கையடக்கத் தொலைபேசிகள் இரண்டு மற்றும் தன்னியக்க பணப்பரிமாற்ற அட்டை ஒன்றும் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்ட நபர் தும்பலசூரியப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் அவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

# பெருந்தொகை கஞ்சா வவுனியாவில் மீட்பு

## இருவர் கைது

வவுனி பா, நவ.13
வவுனி பாவில் நேற்று 93 கிலோ 278 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி வந்த சொகுசுப் பேருந்தில் கொண்டுவரப்பட்ட கஞ்சாவே கைப்பற்றப்பட்டுள்ளது.

கானகராயன்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் வெல்கமவின் வழிநடத்தலில் கனகராயன்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமிந்த பிந்து தலைமையிலான குழுவினர் பேருந்தை வழிமறித்து சோதனை நடத்தினர். அதில் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர்களையும் கைது செய்துள்ள பொலிஸார் இருவரையும் வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-402)



## வாகன விபத்தில் மாணவன் சாவு

கொழும்பு,நவ.13
கொழும்பு ராஜகிரிய பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் மாணவன் ஒருவர் உயிரிழந்தார். 7 பேர் காயமடைந்தனர்.

பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ராஜகிரியவிலிருந்து மாதின்னாகொட நோக்கிச் சென்ற கெப் ரக வாகனம் மதிலுடன் மோதியதில் இந்த விபத்து நடந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ரி4)

## கொடுக்கல் வாங்கலால் ஏற்பட்டது முரண்பாடு

### பொலிஸார் விசாரணை

வவுனியா, நவ.13
கொடுக்கல் வாங்கல் ஏற்பட்ட முரண்பாட்டால் வவுனியாவில் நேற்று இளைஞர்களுக்கும் குழுவொன்றுக் கும் இடையே தகராறு ஏற்பட்டது. இருவர் அந்தப் பகுதியில் இருந்த சம்பவ இடத்தில் இருந்தவர்களால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றுக் காலை வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள வாடி வீட்டிற்கு முன்பாக வானொன்றில் வந்த இளைஞர்களுக்கும் காரொன்றில் வந்த குழுவொன்றுக்கும் இடையே மோதல் சம்பவம் இடம்பெற்றது. அதில் காரின் கண்ணாடி உடைக்கப்பட்டு ஒருவர் காயமடைந்தார்.

உக்கிளாங்குளத்தை சேர்ந்த இளைஞரொருவர் தனது யாழ்ப்பாணம் அச்சுவேலியில் வசித்த மருமகனொருவரை வெளிநாட்டுக்கு குழு ஒன்றின் அறிமுகத்தின் ஊடாக அனுப்பினார் என்றும், அதற்கான பணக் கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட முரண்பாடே மோதலுக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## தாதியர் பயிற்சிக்குப் பட்டதாரிகளை சேர்க்க நடவடிக்கை

மட்டக்களப்பு,நவ.13
தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிப் பயிற்சிக்காக விஞ்ஞானவியல் தாதிப் பட்டதாரிகளைச் சேர்க்க சுகாதார போசனை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்று சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சுகததாச நேற்றுத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் அமைச்சால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானவியல் தாதியர் பட்டம்பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் எனவும் அதற்கான விண்ணப்பம் தொடர்பான விபரங்கள் யாவும் கடந்த 10 ஆம் திகதி வர்த்தமானியில் கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் 24 ஆம் திகதி இந்த விண்ணப்பத் திகதி முடிவடையவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. தெரிவுகள் யாவும் நேர்முகப் பரீட்சை மூலம் இடம்பெற றவுள்ளது என்றும் தகுதியானவர்கள் என தெரிவு செய்யப்படுபவர்கள் 6 மாதகால ஆங்கில மொழி மூல பயிற்சியில் கலந்துகொள்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ற-ரி4)

## மொழி மதிப்பீடுகளின் 4ஆவது தேசிய மாநாடு

கொழும்பு,நவ.13
மொழி மதிப்பீடுகளின் 4 வது தேசிய மாநாடு மற்றும் பிராந்திய ஆங்கில மொழி ஆதார மத்திய நிலையத்தின் 19ஆவது மாநாடு நேற்று கொழும்பு மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் ஜெயந்தி குணசேகர, தேசிய கல்வி நிறுவகத்தின் ஆங்கிலமொழி பணிப்பாளர் தர்ஷன மகேந்திர, விரிவுரையாளர் ரஞ்சித் ராமநாயக்க மற்றும் அகில இலங்கை ரீதியாக காணப்படும் ஆங்கில மொழி ஆதார மத்திய நிலையத்தின் இணைப்பாளர்கள், ஆங்கில ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ற-ரி5)



## மதுபான போத்தல்களுடன் மூவர் லிந்துலையில் கைது

கொழும்பு, நவ.13
அரச அனுமதி பத்திரம் இன்றி மதுபானம் அடங்கிய 50 போத்தல்களை முச்சக்கரவண்டி ஒன்றில் ஏற்றிச் சென்றவர்களை லிந்துலை பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

ரதல்ல பகுதியிலிருந்து நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியினூடாக மட்டுக்கலை பகுதிக்கு கொண்டு செல்லப்பட்ட போதே மதுபான போத்தல்களுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை பொலிஸ் பிணையில் விடுக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களை எதிர்வரும் தினங்களில் நுவரெலியா நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு, நவ.13
மட்டக்களப்பு கல்லடியில் உள்ள மதுவரித் திணைக்களத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவ கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார் என்று மட்டக்களப்பு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

மதுவரித் திணைக்கள உத்தியோகத்தரிடமிருந்து 500 கிராமுக்கும் கூடுதலான கஞ்சா மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர் கஞ்சா விற்பனையில் ஈடுபடுகின்றார் என்று கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே அவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்ட பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்றும் தெரிவித்தனர். (ற)

## 25 இளைஞர், இளம்பெண்களுக்கு திருவருட்சாதனம் வழங்கல்

மன்னார், நவ.13
மன்னார் மறை மாவட்டம் பொன்தீவு கண்டல் பங்கைச் சேர்ந்த 22 இளைஞர் ,இளம்பெண்களுக்கு நேற்று உறுதிப்பூசுதல் எனும் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது.

பொன்தீவு கண்டல் புனித அந்தோனியார் ஆலயத்தில் அருட்தந்தை லோரன்ஸ் அடிகளார் தலைமையில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பொன்தீவு கண்டல் பங்கைச் சேர்ந்த 22 இளைஞர், யுவதிகளுக்கு மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஜோசப் கிங்சிலி சுவாம் பிள்ளை ஆண்டகையால் உறுதிப்பூசுதல் எனும் திருவருட்சாதனம் வழங்கி வைக்கப்பட்டது. (ற)




# இளைஞர்கள் குளித்த கேணியில் ஒயில் ஊற்றப்பட்டதால் முறுகல்

யாழ்ப்பாணம், நவ.13

கேணியில் இளைஞர்கள் குளித்ததால் அதற்குள் கழிவு ஒயில் ஊற்றப்பட்டது. அதனால் அங்கு பெரும் குழம்பம் ஏற்றபட்டது. சுழிபுரம், தொல்புரம் வழக்கம்பரை ஆலயத்தில் நேற்று மாலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

மழை பெய்து கேணியில் நீர் நிரம்பியிருக்கும்போது அங்குள்ள ஆலயம் ஒன்றின் தொண்டர் சபையைச் சேர்ந்த இளைஞர்கள் அதில் நீந்துவது வழமை என்று தெரிவிக்கப்படுகின்றது. நேற்று மாலையும் இளைஞர்கள் அவ்வாறு நீந்தினர். அப்போது ஆலய நிர்வாகத்தைச் சேர்ந்த ஒருவர் கேணிக்குள் ஒயில் ஊற்றினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இளைஞர்கள் ஒயில் ஊற்றியவருடன் முரண்பட்டனர். அந்தப் பகுதியில் குழப்பம் ஏற்பட்டது. இந்த விடயம் ஆலய பரிபாலன சபைக்கு அறிவிக்கப்பட்டது. அங்கிருந்த பெரியவர்கள் தலையிட்டு நிலைமையைக் கட்டுப்படுத்தினர் என்று கூறப்பட்டது.



"இங்குள்ள இளைஞர்கள் இந்தக் கேணியின் மூலம் நீச்சல் கற்கின்றனர். மழை பெய்து கேணியில் நீர் நிரம்பும் போதே நீச்சலுக்கு இறங்குகின்றோம். இது பல ஆண்டுகளாகவே நடைபெறுகிறது. நேற்று எம்மை நீச்சலடிக்க விடாது ஒயிலை ஊற்றியுள்ளனர். குளிக்க வேண்டாம் என்று கூறுவதற்குப் பதிலாக ஒயில் ஊற்றுவதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது? அதுவும் குளித்துக் கொண்டிருக்கையில் ஒயில் ஊற்றப்பட்டது. ஆலய பரிபாலன சபையின் அறிவித்தலுக்கு அமையவே ஒயிலே ஊற்றினேன் என்கிறார். நாங்கள் ஆலய பரிபாலன சபையினரைக் கேட்டபோது அவர்கள் அப்படிக் கூறவில்லை என்கின்றனர். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று தொண்டர் சபை இளைஞர்கள் தெரிவித்தனர்.

"கேணி புதுப்பிக்கப்பட்டுள்ளது. சுற்றிலும் மதில் அமைக்கப்பட்டுள்ளது. திருவெம்பாவைக் காலங்கள் மற்றும் சுவாமி தீர்த்தம் ஆடும் நாள்கள் தவிந்த ஏனைய நாள்களில் தொண்டர் சபையினர் நீந்துவதற்கு சேர்க்கப்பட்டிருந்தனர். கேணியின் கதவு திறந்திருக்கும் போதே அவர்கள் நீந்தலாம். பூட்டியிருக்கும் போது நுழைந்தால் கேணியில் அந்துமீறிப் பிரவேசித்ததாகவே கருதப் படும். இந்தச் சம்பவம் எப்படி நடைபெற்றது என்பதை ஆராய வேண்டும்.

குளித்தவர்கள் தொண்டர் சபையினரா?, அல்லது பொது மக்களா என்பதையும் பார்க்க வேண்டும். கேணியில் ஒயில் ஊற்றுமாறு யாரும் கூறவில்லை. அவ்வாறு ஊற்றப்பட்டிருந்தால் அது தொடர்பிலும் ஆராயப்படும்." என்று ஆலய பரிபாலசபைச் செயலாளர் துரைசிங்கம் ரகு தெரிவித்தார். (ற-21)

# அரசியல் விழிப்புணர்வு இளைஞருக்குத் தேவை

## சர்வமதப் பேரவை இணைப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ.13

உயர்கல்வி கற்கும் இளைய சமுதாயத்தினர் மத்தியில் பல்லின அரசியல் மற்றும் சகவாழ்வு பற்றிய விழிப்புணர்வு தேவை.

இவ்வாறு தேசிய சமாதானப் பேரவையின் மாவட்ட சர்வ மதப் பேரவைக்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சிராசையா மனோகரன் தெரிவித்தார்.

போருக்குப் பின்னரான சகவாழ்வு, சமாதானம், அபிவிருத்தி, அரசியல் மறுசீரமைப்பு தொடர்பில் இளைஞர் சமுதாயம் ஈடுபாட்டை செலுத்தும் வகையில் நேற்று மட்டக்களப்பில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

இலங்கையில் அனைத்து மதங்கள் மற்றும் இனங்களுக்கு இடையிலான கலந்துரையாடல் திட்டத்தை தேசிய சமாதானப் பேரவை முன்னெடுத்துள்ளது.

சமகால நாட்டு நடப்புக்கள் தொடர்பில், உயர்கல்வி கற்கும் பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் கல்வியியற் கல்லூரி பயிலுநர்களுக்கு முழுமையான தெளிவை ஏற்படுத்தும் வகையில் அரசியல் மறுசீரமைப்பு, நிலைமாறு கால நீதி, மனித உரிமைகள், மத்தியஸ்த சபைச் செயற்பாடுகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டப்படுகின்றது.

போரின் பின்னரான நிலைமை, தற்போதைய புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்கால ஆட்சியாளர்களாகிய இன்றைய சமுதாயம் தெளிவடைந்திருக்க வேண்டும். மீண்டுமொரு ஆயுத முரண்பாடு இந்த நாட்டைப்பீடிக்காதிருக்க வேண்டும். கடந்த கால ஆயுத முரண்பாட்டில் சிக்கி அழிவுகளையும் இழப்புக்களையும் சந்தித்த அனைத்து சமூக மக்கள் அதையே விரும்புகின்றார்கள்-என்றார். (ற-ரி4)

# நல்லிணக்கம் உருவாக தென்னாபிரிக்கா உதவும்

## தென்னாபிரிக்க தூதுவர் தெரிவிப்பு

திருகோணமலை, நவ.13

இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு தென்னாபிரிக்கா நிறைந்த ஒத்துழைப்பை வழங்கும் என்று தெரிவித்தார் தென்னாபிரிக்கத் தூதுவர் மாக்ஸ் அம்மையார்.

கிழக்கு மாகாண ஆளுநரை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது:

நல்லிணக்கம் தொடர்பான தென்னாபிரிக்காவின் அனுபவங்களும், அவற்றின் ஊடாகப் பெறப்பட்ட முன்னேற்றகரமான பெறுபேறுகளும் இலங்கையுடன் பகிரப்படும். அதன் மூலம் நிலையான அமைதி ஏற்படுத்துவதற்கு உதவிகளை வழங்குவோம். கிழக்கு மாகாணத்தின் சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்கும் கல்வி, மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை போன்ற துறைகளில் தென்னாபிரிக்காவின் பங்களிப்பையும், முதலீட்டையும் உருவாக்க முடியும். சகல வளங்களையும் கொண்ட கிழக்கு மாகாணம் இலங்கையின் உயர் பொருளாதார மாகாணமாக வளர்ச்சியடையும் என்ற நம்பிக்கை உள்ளது.

புதிய அரசமைப்பு முன்னேற்றகரமான அம்சங்களைக் கொண்டுள்ளது. மக்களின் சமூக, பொருளாதார உரிமைகளை உறுதிப்படுத்துவதாக அரசமைப்பு அமைய வேண்டும். என்றார். (ற-45)

# துன்னாலையில் இளைஞர்கள் நேற்றுக் கைது

வடமராட்சி,நவ.13

துன்னாலை வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் குற்றச்சாட்டில் மேலும் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

துன்னாலைப் பகுதியில் வைத்து அவர்கள் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி4,26)

# தென்னாபிரிக்காவின் தூதுவர் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு

திருகோணமலை, நவ.13

கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித போகெல்லாகமைவைச் சந்தித்துக் கலந்துரையாடினார் தென்னாபிரிக்கத் தூதுவர் மாக்ஸ் அம்மையார்.

இந்தச் சந்திப்பு நேற்று ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் போரின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி மற்றும் நல்லணிக்க முயற்சிகள் தொடர்பாகவும், கிழக்கு மாகாணத்தில் தென்னாபிரிக்கா மேற்கொள்ளும் முதலீட்டு முயற்சிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

நல்லிணக்கம் தொடர்பாக தென்னாபிரிக்காவின் அனுபவங்களை இலங்கையுடன் பகிர்ந்து கொண்டு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான உதவிகளை தென்னாபிரிக்கா வழங்கும் என்று சந்திப்பின்போது மாக்ஸ் அமையார் உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. தென்னாபிரிக்காவின் முயற்சிகளை வரவேற்ற கிழக்கு ஆளுநர், பல்லின மக்கள் வாழும் கிழக்கு மாகாணத்தின் எதிர்காலம் இனங்களுக்கிடையிலான நல்லுறவில் தங்கியுள்ளது என்று குறிப்பிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-45)

மாத்தளை எல்கடுவ தமிழ் மகா வித்தியாலயத்தின் இரண்டு மாடி கட்டிடம் நேற்றுத் திறக்கப்பட்டது. அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற வேலைத் திட்டத்தின் கீழ் 160 லட்சம் ரூபா நிதி ஒதிக்கீட்டின் கீழ் இந்த இரண்டு மாடி கட்டடம் கட்டடப்பட்டது.(ற)



உங்கள் பிரதேசங்களில் நடக்கும் நிகழ்வுகளை உலகறியச் செய்ய எமக்கு அனுப்புங்கள்



உதயன் DIGITAL newuthayan.com
newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka
(+) 94 77 316 5555

## யாழ்.பல்கலை மாணவர்கள் விரிவுரைகளுக்கு திரும்பவும்

யாழ்ப்பாணம், நவ. 13
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அனைத்துப் பீடங்களின் மாணவர்களையும் இன்று தொடக்கம் கற்றலுக்குத் திரும்புமாறு அனைத்துப் பீட மாணவர்களின் ஒன்றியம் அறிவித்தது.
அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய போராட்டம் கல்விச் செயற்பாடுகளைப் பாதிக்காதவாறு முன்னெடுக்கப்படும்.
அனைத்துப் பீடங்களின் விரிவுரைகளும் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளுமாறும் பல்கலைக்கழக ஒன்றியம் கேட்டுள்ளது. (4)

### வன்னியிலும் மேல்மாகாணத்திலும்

# ஜனநாயக, மக்கள் காங்கிரஸ்கள் இணைந்து போட்டியிடத் தீர்மானம்

## ஒப்பந்தமும் நேற்றுக் கைச்சாத்து

கொழும்பு, நவ. 13
வன்னியிலும் மேல் மாகாணத்திலும், ஜனநாயக மக்கள் காங்கிரஸும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் இணைந்து போட்டியிடவுள்ளன. இரு கட்சிகளும் சேவல் சின்னத்தில் போட்டியிடுவது என்று புரிந்துணர்வு ஒப்பந்தமும் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது
எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முகங்கொடுப்பது குறித்த முக்கிய கலந்துரையாடல் கொழும்பில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமிய மூர்த்தி பவனில் நடைபெற்றது.
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான், உபதலைவரும் ஊவா மாகாண அமைச்சருமான செந்தில் தொண்டமான், ஜனநாயக மக்கள் காங்கிரஸின் நிறுவகத் தலைவரும் அரச தலைவரின் வன்னி மாவட்ட அபிவிருத்திக் கண்காணிப்பாளருமான பிரபா கணேசன் உள்ளிட்ட பலர் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.
உள்ளூராட்சித் தேர்தலில் எவ்வாறு கூட்டணியமைத்து களமிறங்குவது என்பது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட இணக்கப்பாடுகளின் அடிப்படையில் வன்னி மாவட்டத்திலும், மேல்மாகாணத்திலும் இரு தரப்பினரும் கூட்டணியாகக் களமிறங்குவது என்று முடிவெடுக்கப்பட்டது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சின்னமான சேவல் சின்னத்தில் போட்டியிடுவது என்றும் ஏகோபித்து முடிவு எடுக்கப்பட்டது. அது பற்றிய இருதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.
அதன் பின்னர் கருத்துரைத்த ஜனநாயக மக்கள் காங்கிரஸின் நிறுவகத் தலைவர் பிரபா கணேசன் தெரிவித்ததாவது:
"இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் மேல்மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா, களுத்துறை போன்ற மாவட்டங்களில் அதிகமாக வாழ்கின்றனர். வன்னியின் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கான உண்மையான பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியம்.
பொதுமக்களின் வாழ்க்கைத்தரம் முன்னேற்றமடைவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் பலம் பெறுவதோடு அவர்களுக்கான சரியான பிரதிநிதித்துவம் இருத்தல் அவசியமாகிறது.
இதனடிப்படையில்தான் இந்திய வம்சாவளி மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தி அந்த மக்களின் நிலமைகளை முன்னேற்றவேண்டும் - என்றார். (4-31)

---

### புதிய...

யின் ஆதரவுடன் அரசியல் முன்னணி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் என்று இரண்டு கட்சிகளின் தலைவர்கள் கூறியிருக்கின்றார்களே. என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் உதயன் பத்திரிகை வினவியது.
"தமிழ் மக்கள் பேரவைக்கும் இதற்கும் தொடர்பில்லை. என்ன விதத்தில் அவ்வாறு கூறினார்களோ தெரியவில்லை. என்ன அடிப்படையில் அப்படிச் சொல்லியுள்ளார்கள் என்பதை நான் அறியவேண்டும். ஆனாலும் தமிழ் மக்கள் பேரவை இதற்கு இணங்காது. நான் இது தொடர்பில் மற்றொரு இணைத் தலைவரான மருத்துவர் பூ.லக்ஸ்மனுடன் பேசுவேன்" என்று பதிலளித்தார் முதலமைச்சர்.
முன்னதாக பேரவையின் கூட்டத்தில், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டிய நேரத்தில் கட்சி நலன்களுக்காக அதிலிருந்து சிலர் வெளியேற நினைக்கிறார்கள் என்று தனது உரையில் சுரேஷ் பிரேமச்சந்திரனை மறைமுகமாகச் சாடியிருந்தார் முதலமைச்சர். (உ-101)

### புதிய முன்னணிக்கு...

ஊரக அளவில் உருவாக்கிக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பை மிகச் சரியான தெரிவுகளின் அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தின் மூலம் பெறமுடியுமானால், அதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதற்கும், ஒத்த சிந்தனைகளுடன் பயணிப்பவர்களுடன் அதற்காகக் கைகோர்த்துக் கொள்ளவும் தமிழ் மக்கள் பேரவை தயாராக உள்ளது" என்று அது நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.
கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரையும் உள்ளடக்கி நேற்று நடந்த தமிழ் மக்கள் பேரவைக் கூட்டத்தின் பின்னர் பேரவை சார்பில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
பேரவையின் கூட்டம் முடிந்த உடனேயே, ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஷ் பிரேமச்சந் திரனுடன் தேர்தல் கூட்டு ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு புதிய முன்னணி ஒன்றின் கீழ் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடப் போவதாக தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிவித்தார். தமிழ் மக்கள் பேரவையின் ஆதரவுடன் அந்த முன்னணி போட்டியிடவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.
அதன் பின்னர் மக்கள் பேரவை வெளியிட்ட அறிக்கையில் "ஒத்த சிந்தனைகளுடன் பயணிப்பவர்களுடன் கைகோர்த்துக்கொள்ள தமிழ் மக்கள் பேரவை தயாராகவே உள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தமிழ் மக்கள் பேரவையால் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் மேலும் முக்கியமாக கூறப்பட்டுள்ளதாவது:
ஒட்டுமொத்த சமூகப் பங்களிப்பை ஆக்கபூர்வமான, ஆரோக்கியமான வழியில் எடுத்துச் செல்லும் ஒரு வாய்ப்பாக-எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலைப் பயன்படுத்திக்கொள்வது, தமிழ் பிரதேசங்களில் பொதுமக்களின் பங்கேற்புக் கொண்ட மக்களாட்சிக் கட்டமைப்புக்களை மக்கள் தளத்திலிருந்து கட்டியெழுப்புவதற்கு உதவும் என்று தமிழர் தரப்பின் பல தளங்களிலிருந்தும் எழுந்த கோரிக்கையைத் தமிழ் மக்கள் பேரவை கவனத்தில் கொள்கிறது.
உயரிய நோக்கங்கள் கொண்ட அரசியல் போராட்ட வழிமுறையில், சமூகத்தின் அடித்தள அமைப்பிலிருந்து அதற்கான பயிற்சிக் களங்களைத் திறப்பதும், அரசியலிலும் நிர்வாகக் கட்டமைப்புக்களிலும் பொதுமக்களின் பங்கேற்பை அதிகரிக்கக் கூடியவழிமுறைகளைப் பயன்படுத்திக் கொள்வதும், காலத்தின் தேவை அறிந்த உத்தியென்ற புத்திஜீவிகளின் ஆலோசனையை தமிழ் மக்கள் பேரவை ஏற்றுக் கொள்கின்றது.
பகிரங்கத் தன்மையான, திறந்த, திறன்மிக்க அதிகாரப் பொறிமுறையை அடித்தள அமைப்புக்களில் உறுதிப்படுத்திக் கொள்ளவும், ஊழலற்ற, அதிகாரப் போட்டிகளற்ற, மக்கள் சேவை என்ற மகுடத்துக்குள் நின்று நிலைபெறக்கூடிய நிர்வாகங்களை ஊரக அளவில் உருவாக்கிக் கொள்ளவுமான ஒரு வாய்ப்பை மிகச் சரியான தெரிவுகளின் அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தின் மூலம் பெறமுடியுமானால், அதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதற்கும், ஒத்த சிந்தனைகளுடன் பயணிப்பவர்களுடன் அதற்காகக் கைகோர்த்துக் கொள்ளவும் தமிழ் மக்கள் பேரவை தயாராக உள்ளது.
இத்தகைய முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல்களும் கருத்துப் பகிர்வுகளும் தமிழ் மக்கள் பேரவையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றுள்ளது. (உ-5,101)

### ஈபிஆர்எல்எவ்...

அறியப்பட்ட தமிழர் சமூக சனநாயகக் கட்சியின் தலைவர் சுகு.சிறிதரன் தெரிவித்தார்.
சுகு.சிறிதரன் தலைமையில் ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா அணி என்று அறியப்பட்டிருந்த கட்சியானது அண்மையில் தமிழர் சமூக ஜனநாயக கட்சி என்று பெயர் மாற்றம் செய்திருந்தது.
இந்தக் கட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்துகொள்ளுமாறு, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ரெலோவின் செயலர் ந.சிறிகாந்தா, கோரினார் எனினும் அதுபற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை என்று அந்தக் கட்சியினர் தெரிவித்தனர்.
''கூட்டமைப்பில் இணைவதற்கான அழைப்பை சிறிகாந்தா விடுத்திருந்தார். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள எமது தோழர்களிடத்தில் நாம் இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம். விரைவில் முடிவை அறிவிப்போம்" என்று சுகு.சிறிதரன் தெரிவித்துள்ளார்.
ஈபி.ஆர்.எல்.எவ். கட்சி சுரேஷ் அணி பத்மநாபா அணி என்று இரண்டாகப் பிளவுபட்ட போது கட்சியையும் சின்னத்தையும் சுரேஷ் அணியிடம் இழந்திருந்தது இந்த பத்பநாபா அணி. மிக அண்மையிலேயே அது தனது பெயரை மாற்றிக்கொண்டது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து சுரேஸ் வெளியேறிவரும் நிலையில் அந்த இடத்தை ஈபி.ஆர்.எல்.எவ். கட்சியின் மாற்று அணியைக் கொண்டு நிரப்புவதற்கான முயற்சியாகவே இந்த அழைப்பை அரசியல் அவதானிகள் நோக்குகின்றார்கள். எனினும் தேர்தலில் மக்களின் ஆதரவைத் திரட்டும் அளவுக்கு பத்மநாபா அணிக்கு மக்கள் ஆதரவு இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர். (உ-5,31)

### வேட்பாளர்...

ணம் பொது நூலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் தமிழ் மக்கள் பேரவை புதிய அரசியல் அணியை உருவாக்கிக் களமிறக்கவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்னிலையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டது என்று கூறப்பட்டது.
பேரவையின் கூட்டத்தில் பங்கேற்றிருந்த சகல தரப்புக்களும் இந்த விடயத்துக்கு இணங்கின. தமிழ் மக்கள் பேரவையில் தற்போது இடம்பெற்றுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ்., அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் மேலும் சில அரசியல் தரப்புக்களும், ஒரு சில பொது அமைப்புக்களும் இணைந்து புதிய அரசியல் முன்னணியில் போட்டியிடவுள்ளன.
தேர்தல்கால கூட்டாகவே தற்போது இதனைப் பதிவுசெய்து, பொதுச் சின்னத்தில் இவை போட்டியிடவுள்ளன. அரசியல் கட்சிகள் தமக்குரிய வேட்பாளர்களைத் தெரிவு செய்யும். தமிழ் மக்கள் பேரவை தனது அங்கத்துவப் பொது அமைப்புக்களிலிருந்து போட்டியிடவுள்ளவர்களைத் தெரிவு செய்யும்.
இறுதி வேட்பாளர் தெரிவு மற்றும் ஆசனப் பங்கீடு என்பன தமிழ் மக்கள் பேரவையின் வழிநடத்தல் குழுவினால் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

### க.குமார்...

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் பங்கேற்றிருந்தார். தனது உரையை முடித்துக்கொண்டு உடனே புறப்பட்ட அவர், செய்தியாளர்களிடம் பேசியபோது தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சி ரீதியான எந்த நடவடிக்கையையும் எடுக்காது, மக்கள் இயக்கமாகவே அது தொடர்ந்து செயற்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.
ஆனால், பேரவைக் கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "தமிழ் மக்கள் பேரவை நேரடியாக அரசியலில் குதிக்காது. இருந்தாலும் தமிழ் மக்கள் பேரவையின் பங்களிப்புடன் ஒரு முன்னணி நிச்சயமாகத் தேர்தலில் போட்டியிடவேண்டும். ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, பொது அமைப்புக்கள் அதில் நிச்சயம் இருக்கும்" என்றார்.
ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் தமது முன்னணி ''மாற்றுத் தலைமை" என்றார். "மாற்றுத் தலைமை தொடர்பில் நாம் கடந்த சில வருடங்களாக வலியுறுத்தி வந்தோம். அது இன்று புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்கு சரியான தலைமைத்துவம் தேவை. அதற்குப் புதிய அரசியல் முன்னணியும் தேவை. இன்று அது எல்லோராலும் உணரப்பட்டுள்ளது" என்றார் அவர்.
"புதிய முன்னணியின் தேவையை இன்றைய கூட்டத்தில் (நேற்றைய பேரவைக் கூட்டம்) ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இது தொடர்பான பத்திரிகை அறிக்கை விரைவில் வரும்" - என்றார். (உ-5,101)

### தொடருந்து...

வரே உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவம் பி.ப. 3 மணியளவில் நடந்துள்ளது. தொடருந்து வருவதைக் கவனிக்காது பாதுகாப்பற்ற கடவையில் கடக்க முற்பட்டபோதே அவர் மீது தொடருந்து மோதியது என்று தெரிவிக்கப்பட்டது. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் பயணித்த கடுகதி தொடருந்தே மோதியுள்ளது.
இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-9,26,101)

### புளொட்...

இணைந்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது என்ற முடிவை புளொட் ஏற்கனவே எடுத்துள்ள நிலையில், பேரவையின் கூட்டத்துக்குச் செல்வதில் அர்த்தமில்லை என்பதாலேயே அந்தக் கட்சி கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
தமிழ் மக்கள் பேரவையின் கூட்டம் நேற்று நடைபெற்றது. பேரவையின் கூட்டங்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட் அமைப்பு பங்கேற்பது வழமை. ஆனால் நேற்றைய கூட்டத்தில் அந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி எவரும் பங்கேற்கவில்லை.
"உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்கே இந்தக் கூட்டத்தை கூட்டுகின்றனர் என்று எமக்கு முன்கூட்டியே தெரியும் என்பதால் நாம் இதில் பங்கேற்கவில்லை" என்று அந்தக் கட்சியின் முக்கிய தலைவர் குறிப்பிட்டார். (உ-5)



## 55 நாள்களையும் தாண்டித் தொடரும் அக்கரை மக்களின் போராட்டம்

யாழ்ப்பாணம், நவ. 13

அக்கரை கடற்கரையில் இருக்கும் சுற்றுலா மையத்தை அகற்றி அதைச் சிறுவர் விளையாட்டுத் திடலாக மாற்றம் செய்யுமாறு கோரி உணவு ஒறுப்புப் போராட்டம், கவனவீர்ப்புப் போராட்டம் எனப் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் 55 நாள்களைக் கடந்து தொடர் கவனவீர்ப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தற்போது ஈடுபட்டுவருகின்றனர்.

அவர்கள் கடந்த ஒக்ரோபர் 26 ஆம் திகதி வடக்கு மாகாண சபைக்கு முன்பாக மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனாலும் இதுவரை அந்த மக்களின் போராட்டத்துக்கு வலிகிழக்குப் பிரதேச சபையினராலோ, வடக்கு மாகாண உள்ளூராட்சி மற்றும் சுற்றுலாஆகியவிடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சுக்களைத் தன்வசம் வைத்திருக்கும் முதலமைச்சராலோ எந்தவொரு பதிலும் வழங்கப்படவில்லை என அந்த மக்கள் தமது வேதனையை வெளிப்படுத்தனர்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் வடக்கு மாகாண ஆளுநர் குறித்த பகுதிக்கு நேரடியாக வருகைதந்து நிலமைகளைப் பார்வையிட்டதோடு பொலிஸ் காவலரண் அமைத்தல் உட்படப் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்ததாகவும் அவர் கொடுத்த வாக்குறுதிகள் எவையும் இதுவரை நிறைவேற்றப்படாமை பெருத்த ஏமாற்றத்தை அளிப்பதாகப் போராடும் மக்கள் தெரிவிக்கின்றனர். கடும் மழை,வெள்ளம், காற்று ஆகியவற்றுக்கு மத்தியில் விரக்தியின் விளிம்பில் நின்று போராடும் மக்கள் தமக்குச் சரியானதொரு தீர்வு கிடைக்கும் வரை தாம் இப்போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என உறுதியுடன் தெரிவிக்கின்றார்கள். (எ-6)

# தெல்லிப்பழை வைத்தியசாலையில் இலவச பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை

## இன்று முதல் 3 தினங்கள் இடம்பெறும்

தெல்லிப்பழை, நவ. 13

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இன்று முதல் புதன் கிழமை வரை மூன்று நாள்களுக்கு இலவசமாக பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை இடம் பெறும்.

போர் மற்றும் பிற காரணங்களால் எரிகாயங்கள், தீக்காயங்களுக்கு இலக்காகிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த சிறப்புச் சிகிச்சை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு கொட்டாஞ்சேனை வட்ட லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்தவரும் லயன்ஸ் கழகத்தின் 2 ஆவது உப மாவட்ட ஆளுநர் தேர்வில் போட்டியிடுபவருமான லயன் கலாநிதி அமுதா கோபாலனின் ஏற்பாட்டில் இந்தச் சத்திரசிகிச்சை இடம்பெற உள்ளது. அமெரிக்காவில் இருந்து சத்திர சிகிச்சை மருத்துவ நிபுணர்கள், தாதியர்கள் மற்றும் அவர்களுக்கான உதவியாளர்கள் கொண்ட 35 பேர் இதற்காக வருகை தந்துள்ளனர்.

இன்று காலை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு மாநாட்டு மண்டபத்தில் சம்பிரதாயபூர்வமாக நிகழ்வு ஆரம்பமாகும். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர், கலாநிதி அமுதா கோபாலன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் கமிலஸ் பெர்னாண்டோ தம்பதிகள் கலந்துகொள்வர்.

கடந்த வருடமும் இதே போன்று லயன் அமுதா கோபாலனால் ஒழுங்கமைக்கப்பட்ட பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையின் போது 45 நோயாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, சிகிச்சை பெற்றனர்.

வடக்கு மாகாணத்துக்கு வெளியே இருந்தும் நோயாளர்கள் கடந்த வருடம் வந்து சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

நாய் குறுக்கே பாய்ந்ததால் விபத்து

## மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இளைஞன் படுகாயம்

யாழ்ப்பாணம் நவ 13

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் நாய் குறுக்கே பாய்ந்ததால் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

உரும்பிராய் பகுதியில் மோட்டார் சைக்கிளில் இளைஞன் பயணித்துக் கொண்டிருந்த போது திடீரென வீதிக்கு குறுக்கே நாய் பாய்ந்ததில் வீழ்ந்து படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் ஜெயசிங்கம் அரவிந்தன் (வயது 18) என்பவரே கால்,கை,தலை போன்ற பகுதிகளில் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார். (எ-8-ரி1)

# விபத்தின் பின்னர் நிமோனியா முதியவர் உயிரிழப்பு

## *விபத்தை ஏற்படுத்தியது மருத்துவரது வாகனமா?*

விபத்தால் தலையில் குருதிப் பெருக்கு ஏற்பட்டிருந்த வயோதிபர் பின்னர் நிமோனியா காய்ச்சலால் உயிரிழந்தார் என்று விசாரணை மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இலுப்பையடியில் கடந்த 17ஆம் திகதி மருத்துவர் ஒருவருடைய வாகனமும் முதியவர் பயணித்த சைக்கிளுமே விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது. அதே இடத்தைச் சேர்ந்த மா.கனகரத்தினம் (வயது - 80) என்பவரே உயிரிழந்தார்.

விபத்தில் அவர் தலையில் காயமடைந்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 6 தையல்கள் போடப்பட்டன. 20ஆம் திகதி அவர் மருத்துவமனையிலிருந்து வீட்டுக்குச் சென்றிருந்தார். நேற்றுமுன்தினம் உடல் இயலாமை காரணமாக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அவர் உயிரிழந்துவிட்டார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விப்த்தால் ஏற்பட்ட காயம் அதனைத் தொடர்ந்து அவரது தலையில் காணப்பட்ட குருதிப் பெருக்குக் கண்டல் உள்ளமை தெரியவந்தது. அதனைத் தொடர்ந்து அவருக்கு நிமோனியாக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அதனால் அவர் உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. சடலம் நேற்றுப் பிற்பகல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4)

## *சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயத்தின் மாணவர் பாராட்டு விழா*

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாணம், சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயத்தில் இருந்து 2017 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டுவிழா கடந்த வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணியளவில் பாடசாலையின் அதிபர் ம.குணபாலன் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக்கல்விப்பணிப்பாளர் நோபேர்ட் உதயகுமாரும் மதிப்புறு விருந்தினர்களாக மருத்துவர் சு.அகிலன், பிரதேச கிராம அலுவலர் சிவரூபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் சித்தியடைந்த மாணவர்கள் பாராட்டு வழங்கி மதிப்பளிக்கப்பட்டதுடன், அவர்களுக்கு விருந்தினர்களால் பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (எ)

## பருத்தித்துறையில் 60 புறாக்கள் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 13

பருத்தித்துறை வீட்டில் இருந்த 60 புறாக்களைக் காணவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

தேவை நிமித்தம் வெளியே சென்றிருந்தபோது வீடு புகுந்த திருடர் வீட்டில் கூட்டில்அடைக்கப்பட்டிருந்த 60 புறாக்களையும் (30 சோடிகள்) திருடிச் சென்றுள்ளனர். அவற்றின் பெறுமதி பல்லாயிரக் கணக்கானவை என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. திருட்டு இடம் பெற்றுச் சில நாள்களாகி விட்டன. எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை இடம்பெறு கிறது என்று பருத்தித்துறைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-4-26)

## விருந்துபசார விழாவில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம் நவ 13

திருமண விழாவின் விருந்துபசாரத்தில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

மண்டைதீவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு திருமண விழாவின் விருந்துபசார நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. இந்த விருந்தில் கலந்துகொண்ட இளைஞர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதில் அங்கு கைகலப்பு ஏற்பட்டது. மோதல் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவத்தில் மண்டைதீவு எட்டாம் வட்டாரத்தை சேர்ந்த நடராஜா தனுசன்(வயது - 25) என்ற இளைஞனே காயமடைந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-8)

# வாள்வெட்டில் விரல்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாணம் முதன்மை வீதியிலுள்ள கடையில் நேற்றிரவு நடத்தப்பட்ட வாள்வெட்டில் இருவர் படுகாயமடைந்தனர். ஒருவர் கை விரல்கள் ஆழமாக வெட்டப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மற்றையவர் முதுகிலும் முகத்திலும் காயங்களுக்கு இலக்கானார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண முதன்மை வீதி மடத்தடியை அண்மித்து சம்பவம் இடம்பெற்றது. கவின்றொக் (வயது - 48), கலைச்செல்வன் (வயது-47) ஆகியோரே காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரும் அந்த இடத்திலுள்ள லோன்றியில் நின்றிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4-106)





யாழ்ப்பாணம் அருள்மிகு கட்டுவன் மேற்கு தெல்லிப்பழை நாச்சிமார் அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன பஞ்ச குண்ட குடமுழுக்கு கடந்த முதலாம் திகதி இடம் பெற்றது.

## திருமண வீட்டில் 50 பவுண் திருடினாரென இளைஞனுக்கு மறியல்

திருமண வீட்டில் சுமார் 50 பவுண் நகைகளும் ஒரு லட்சம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டது. திருடிய குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு திருட்டு இடம்பெற்றது. குறித்த வீட்டுக்கு மின்இணைப்பு வேலைகள் செய்ததாகக் கூறப்படும் நபரே திருட்டுக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். அவர் விசாரணையின் பின்னர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (4-26)




# ஐந்து சந்திப் பகுதியில் நீர் வாய்க்கால் சீரின்மையால் 40 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம். நவ. 13
யாழ்ப்பாணம் ஐந்து சந்தி கமால் வீதிப் பகுதியில் நீர் வாய்க்கால் மற்றும் சாலைகள் சீர் இன்மையால் 40 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மக்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம் ஐந்து சந்தி ஜே/86 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்டது எமது பிரதேசம். இங்கே 40 குடும்பங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றோம். நாம் இருக்கும் பகுதி முன்னர் ஆலயம் ஒன்றுக்கு சொந்தமானது. அந்தப் பகுதியை விலைக்குப் பெற்று நாம் வாழ்ந்து வருகின்றோம். எமக்கு இங்கேபெரும் பிரச்சினையாக இருப்பது நீர் வடிகால்களும், சாலைகளுமாகும்.

நீர் ஓடும் பிரதான வாய்க்கால்கள் சீரமைக்கப்படவில்லை. இதனால் மழைக் காலங்களில் பிரதான வாய்க்காலில் நீர் ஓடாமல் தேங்குகின்றது. இந்த நீர் பின்னர் எமது குடியிருப்பு மற்றும் சாலைகளில் தேங்கி நிற்கின்றது. இதனால் நாம் சாலையில் நடமாட முடியாததோடு துர் நாற்றத்தின் மத்தியிலும் வாழ்ந்து வருகின்றோம். அத்துடன் நீர் தேங்கி நிற்பதால் டெங்கு பரவும் அபாயமும் உள்ளது. மழைக் காலங்களில் சாலையால் செல்ல முடியாது. ஆகவே எமது பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வது இல்லை. எமது நீர் நிலைகளுக்கு அண்மையிலும் கழிவு நீர் தேங்கி நிற்கின்றது.

பிரதான வாய்க்கால் சீரமைக்கப்பட்டு, சிறிய வாய்க்கால்கள் அகலிக்கப்பட்டால் மழை வெள்ளம் வாய்க்கால் வழியாக அருகில் உள்ள கற் குளத்தைச் சென்றடையும். இது தொடர்பில் கிராமஅலுவலரிடம் பல தடவைகள் முறையிட்டும் எந்த நடவடிக்கையும் இல்லை. ஆகவே எமது கோரிக்கைகளை கவனத்திற் கொண்டு விரைவில் நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முன் வரவேண்டும் என்றனர்.

இது தொடர்பில் கிராமஅலுவலரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:
ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் குளங்கள், கால்வாய்கள் என்பன அடுத்த வருடம் சீரமைக்கப்படவுள்ளன. அத்துடன் நகர அபிவிருத்தித் திட்டத்திலும் யாழ்ப்பாண நகரையண்டிய இந்தப் பிரதேசமும் உள்வாங்கப்பட்டுள்ளது. ஆகவே இவர்களின் கோரிக்கைகள் அடுத்தாண்டு நிவர்த்தி செய்யப்படும். ஆயினும் தற்காலிகமாக மண் நிரவி வெள்ளம் தேங்காதவாறு இருக்க நான் நடவடிக்கை மேற்கொள்கின்றேன். எனினும் இந்த மக்கள் குடியிருக்கும் பிரதேச சாலைகள் அகலம் குறைவானவை. ஆனால் மணல் கொண்டுவர பெரிய வாகனங்கள் பயன்படும். ஆகவே மணல் உடனடியாக இழுத்து பரப்பப்பட வேண்டும்.

எனவே இதற்கு மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்குமாக இருந்தால் இந்தப் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து வைக்கின்றேன் - என்றார். (எ-ரி)

# நண்பனின் வீட்டு மா மரத்தின் கீழ் குடும்பத்தலைவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், நவ.13
நண்பனின் வீட்டுக்கு சென்ற குடும்பத் தலைவர் மா மரத்தின் கீழ் சடலமாக மீட்கப்பட்டார். கோப்பாயைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை தர்மகுலசிங்கம் (வயது-65) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
கோப்பாயில் வசிக்கும் குறித்த குடும்பத்தலைவர் சுண்டுக்குளியில் உள்ள தனது நண்பனின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் சென்றுள்ளார். அப்போது அவரது நண்பன் வீட்டில் இல்லாததால் வெளியில் மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு வளவுக்குள் உள்ள மாமரத்தின் கீழ் இருந்துள்ளார். நண்பன் வீட்டுக்கு வந்து பார்த்தபோது குடும்பத்தலைவர் மயங்கிய நிலையில் இருந்துள்ளார். அவரை வைத்தியசாலையில் சேர்த்தனர். மாரடைப்பு ஏற்பட்டு இறப்பு இடம்பெற்றுள்ளதாக இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் இறப்பு விசாரணையை மேற்கொண்டார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ.8-ரி1)

# இலவச நீரிழிவு பரிசோதனை இன்று தொடக்கம் 5 நாள்கள்

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மத்திய சந்தை பொலிஸ் பிரிவில் இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை 5 நாள்கள் இலவசமாக நீரிழிவு பரிசோதனை இடம்பெறும்.

முதல் நாளான இன்றைய நிகழ்வை இலங்கை தொலைத் தொடர்பு சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்டம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இரண்டாம் நாளான, நாளைய தினம் மொபிற்றல் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தலைமையிலும், மூன்றாம் நாளான புதன்கிழமை டேடர்ன்ஸ் ஆய்வுகூடசேவையின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ கலாநிதி இ.சுரேந்திரகுமாரன் தலைமையிலும், நான்காம் நாள் வை.எம்.சி.ஏ யாழ்ப்பாணத்தின் அனுசரணையுடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையிலும், இறுதி நாளான 17ஆம் திகதி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் மருத்துவர் வி.தியாகராஜா தலைமையிலும் நிகழ்வுகள் இடம்பெறும் என நீரிழிவு சங்கத் தலைவர் தி. மைக்கல் தெரிவித்துள்ளார். (எ)

# குடமுழுக்கு

யாழ்ப்பாணம், நவ.13
கைதடி கோவிலாக்கண்டி அருள்மிகு அம்பலத்தார் ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான புனராவர்த்தன சம்புரோசண அஸ்டபந்தன நவ குண்ட பஷஉத்தம மகாநாயக பிரதிஸ்ட மகாயாக குடமுழுக்கு இடம்பெறவுள்ளது.

இன்று கிரியாரம்பத்துடன் ஆரம்பமாகி மறுதினம் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்பும் 15ஆம் திகதி காலை 10 மணிக்கு குடமுழுக்கும் அதனைத் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளது எனஆலய தர்மகர்த்தா கு.சிவசுப்பிரமணியம் அறிவித்தார். (எ)

# யாழ்.இந்து மகளிரில் நாளை பரிசளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 13
யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30மணிக்கு இடம்பெறும்.

கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் பாடசாலை அதிபர் எஸ். மாணிக்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி தெ. பாமாவும் கலந்து கொள்வர். (4)

# இது புதுசு




ஆண்களுக்கான கைக்கடிகாரங்கள் நவீன வடிவில் தற்போது சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 2 ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 80 | 70 | 80 | 80 |
| கத்தரி | 150 | 180 | 160 | 200 | 180 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 50 | 60 |
| பயிற்றை | 180 | 180 | 300 | 200 | 120 |
| பாகல் | 200 | 300 | 300 | 240 | 200 |
| க.கிழங்கு | 80 | 60 | 80 | 100 | 100 |
| பெ.வெங்காயம் | 200 | 160 | 150 | 140 | 220 |
| சி.வெங்காயம் | 300 | 250 | 300 | 380 | 220 |
| பூசணி | 40 | 60 | 40 | 70 | 60 |
| தக்காளி | 200 | 120 | 200 | 140 | 120 |
| வாழைக்காய் | 100 | 60 | 70 | 80 | 80 |
| கீரை | 40 | 50 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 35 | 30 | 40 | 30 | 30 |
| ப.மிளகாய் | 400 | 550 | 700 | 500 | 700 |
| புடோல் | 100 | 120 | 120 | 100 | 100 |
| கோவா | 80 | 140 | 120 | 140 | 120 |
| வெண்டி | 100 | 120 | 100 | 120 | 120 |
| போஞ்சி | 160 | 180 | 160 | 160 | 160 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 180 | 200 |
| தேங்காய் | 90 | 90 | 100 | 100 | 70 |
| உ.கிழங்கு | 110 | 110 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 250 | 120 | 180 | 80 | 140 |
| வல்லாரை | 25 | 20 | 25 | 15 | 10 |
| கறிமிளகாய் | 250 | 300 | 250 | 300 | 280 |
| கரட் | 80 | 180 | 100 | 140 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 180 | 400 | 100 | 360 |

# கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 780 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 500 | 300 |
| கணவாய் | 600 | 500 | 800 | 1000 |
| பாரை | 500 | 500 | 600 | 700 |
| சுறா | 400 | 700 | 800 | – |
| சீலா | 400 | 400 | 400 | 400 |
| விளை | 400 | 400 | 500 | 600 |
| முரல் | 200 | 350 | 400 | – |
| கும்பிளா | 200 | 300 | 400 | 200 |
| கிளாக்கன் | 800 | – | 200 | – |
| ஓரா | 200 | 300 | 500 | 300 |
| திரளி | 150 | 200 | 200 | 150 |
| நகரை | 150 | 200 | 400 | 200 |
| சூடை | 100 | 120 | 120 | 100 |
| ஒட்டி | 150 | 200 | 300 | 150 |
| திருக்கை | 300 | 200 | 400 | – |
| மதனம் | 200 | 150 | 250 | – |
| கொய் | 100 | 100 | 50 | 50 |
| பாலை | 100 | 200 | 400 | 300 |
| வாளை | 100 | 150 | 300 | 200 |

### கொட்டும் மழையைச் சாட்டாக்கி

# பெரும் வெள்ளம் எனத் தெரிவித்து அலைக்கழிக்கப்படும் அதிகாரிகள்

தென்மராட்சி நவம். 12

மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளோம் என உயர் மட்டத்தில் முறைப்பாடு செய்தவரின் வீட்டினைப் பார்வையிட பிரதேச செயலரும் அலுவலர்களும் சென்ற வேளையில் குறித்த நபர் குடும்பத்துடன் வீட்டிலிருந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தார் எனவும் வெள்ளத்தைக் காணவில்லையே எனக் கேட்ட போது அங்கு பயன்படுத்தாத நிலையில் உள்ள மலகூடக் குழியினுள் வெள்ள நீர் நிற்பதாக அலட்சியமாகக் கூறினார்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.



இந்தச் சம்பவம் நாவற்குழி 300 வீட்டுத் திட்டப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தமது வீட்டைச் சுற்றி மழை வெள்ளம் தேங்கி நிற்பதாகவும் அதிகாரி எவரும் வந்து பார்வையிடவில்லை எனவும் மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் இருவர் முறையிட்டுள்ளனர்.

முதலமைச்சர் செயலகத்தினால் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக மாவட்டச் செயலாளர் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து அதிகாரிகள் அங்கு சென்ற வேளையிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றது என கூறப்பட்டது. "ஓலை மற்றும் தகரக் கொட்டில்களில் வதியும் மக்கள் வெள்ளத்தில் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில் மக்களின் நலனில் அக்கறையுடன் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அலுவலர்களின் சேவையை குறைத்து மதிப்பிடும் நிரந்தர கல்வீட்டில் வசித்துக் கொண்டிருப்பவர்கள் இவ்வாறான தவறான தகவல்களை வழங்குகின்றனர்" என உத்தியோகத்தர்களால் குற்றம் சாட்டப்பட்டது.

அத்துடன் நாவற்குழி 300 வீட்டுத் திட்டப் பகுதியில் உள்ள சனசமூக நிலையத்தில் பிரதேச செயலரும் அலுவலர்களும் பாதிப்புத் தொடர்பான விடயங்களை மக்களிடம் விசாரித்துக் கொண்டிருந்த வேளையில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு நாவற்குழி 300 வீட்டுத் திட்டப் பகுதியில் 15 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன எனக் கூறி பார்வையிடுமாறு கூறியுள்ளார்.

அதற்கு பிரதேச செயலர், தாம் குறித்த பகுதியிலேயே நிற்பதாகவும் அங்கு இதுவரை எவரும் இடம்பெயரவில்லை. எந்த இடத்தில் தங்கியுள்ளனர் எனக் கேட்டுள்ளார். அங்குள்ள சனசமூக நிலையத்தில் தங்கியுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினரால் கூறப்பட்டுள்ளது. அந்தச் சனசமூக நிலையத்திலேயே தாம் நிற்கிறார் எனவும் அங்கு எவரும் தங்கியிருக்கவில்லை எனவும் கூறியுள்ளார். உடனே நாடாளுமன்ற உறுப்பினருடன் நின்ற முறைப்பாட்டாளர் இன்னமும் இடம்பெயரவில்லை எனவும் இடம்பெயரவுள்ளனர் எனக் கூறியுள்ளார்.

குறித்த நபரின் வீட்டுக்குச் சென்று பார்வையிட்டு அவர் குறிப்பிட்ட 15 வீடுகள் வெள்ளத்தினால் பாதிக்கப்படாததை படம் பிடித்து நாடாளுமன்ற உறுப்பினருக்கு அலுவலர்கள் அனுப்பின எனத் தெரிவிக்கப்பட்டது.

பாதிப்பில்லாத நிலையில் நிவாரண உதவிகளுக்காக உயர் அதிகாரிகளிடம் முறையிட முனைவோர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள குடும்பங்களின் நிலைகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமென பிரதேச செயலகத்தினர் கருத்துத் தெரிவித்தனர். அத்தோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு அலுவலர்கள் இரவு பகல் பாராது சேவையாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் பாதிப்பில்லாதவர்கள் தவறான தகவல்களை வழங்கி அத்தியாவசியக் கடமையில் உள்ளவர்களின் நேரத்தை வீணடிப்பது குறித்தும் அவர்கள் கவலை தெரிவித்தனர். (எ- 9)

## யாழ்ப்பான மக்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கும் திட்டம்

யாழ்ப்பாணம், நவ.13

தேசிய நல்லிணக்க அமைச்சின் ஊடாக பயன்தரு மரக்கன்றுகள் வழங்கும் திட்டம் நடைபெற்று வருகின்றது என தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டச் செயலத்தின் ஊடாக ஒவ்வொரு பிரதேச செயலகங்களாலும் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன என யாழ்ப்பான மாவட்டச் செயலக விவசாயப பணிப்பாளர் எஸ்.கைலேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது: தேசிய நல்லிணக்க அமைச்சின் ஊடாக யாழ்ப்பாண மக்களுக்குப் பயன்தரு மரங்கள் வழங்கும் திட்டம் ஒன்று கிடைக்கப்பெற்றுத் தற்போது அது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் ஊடாக முருங்கைமரக் கன்றுகள், மாதுளை மரக் கன்றுகள், செவ்விளநீர் மரக்கன்றுகள் ஆகியன வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் உள்ள விவசாயத்துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் ஊடாகப் பயனாளிகள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு இவை வழங்கப்படுகின்றன. மேலும் பொதுஅமைப்புக்கள், ஆலயங்கள் போன்றவற்றுக்கும் இந்த மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் ஊடாக 8 ஆயிரத்து 700 முருங்கை மரக்கன்றுகளும், 6 ஆயிரத்து 890 செவ்விளநீர் மரக்கன்றுகளும், 7 ஆயிரத்து 400 மாதுளங் கன்றுகளும் கிடைக்கப்பெற்று வழங்கப்பட்டு கொண்டிருக்கின்றன.

இந்த மரக்கன்றுகளைப் பயனாளிகள் தமது வீடுகளில் நடுவதன் ஊடாக சிறிய அளவிலான வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றார். (எ-8)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்கு அரசு இணங்காமை இனவாதத்தின் வெளிப்பாடே

## என்கிறார் விந்தன் கனகரட்ணம்

யாழ்ப்பாணம், நவ. 13

அரசியல் கைதிகளின் விடுதலையில் அரசு காட்டும் அசமந்தம் சிங்கள இனவாதத்தின் போக்கையே வெளிகாட்டுகின்றது. சிறுபான்மையினரின் மனிதாபிமானப் பிரச்சினை ஒன்றில் அரசு பொறுப்புணர்வுடன் செயற்படும் போதே அதனால் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தில் கூட்டரசு நல்லெண்ணத்தினை வெளியிடவில்லை. ஆட்சி மாற்றத்தின் பின்னர் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த பிரச்சினைகளில் அரசியல் கைதிகளின் விடுதலை முக்கியமான இருந்தது. இந்தப் பிரச்சினையை அவர்களது குடும்பங்களோடு தொடர்புபட்ட பிரச்சினையாக மட்டும் யாரும் பார்க்கக் கூடாது. இது தமிழ் மக்களின் பிரச்சினை யாகும்.

எனவே இந்தப் பிரச்சினையில் அரசு நல்லெண்ணத்தினை வெளிப்படுத்தாது செயற்படுவது தமிழ் மக்கள் சகலரினதும் கோரிக்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிராகரிப்பதற்குச் சமனானதாகும்.

ஏற்கனவே அரசுக்கெதிராக மோதல்களில் ஈடுபட்ட இளைஞர்கள் பொது மன்னிப்புக்களில் விடுவிக்கப்பட்டுள்ளனர். உதாரணமாக, ஜே.வி.பி.யினருக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தினைத் தொடர்ந்து 1987 ஆம் ஆண்டு ஆயுதக் கையளிப்பினை மேற்கொண்ட பின்னர் தமிழ் இயக்கங்களின் போராளிகளுக்கும் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டது. இறுதிப் போரின் பின்னர் சரணடைந்த முன்னாள் போராளிகள் 12 ஆயிரம் பேரை விடுவித்துள்ளோம் என மகிந்த அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் பல வருடங்களாக சிறைகளில் வாடிக் கொண்டிருக்கும் இருநூற்றுக்கு உட்பட்ட அரசியல் கைதிகளை விடுவிப்பதில் மாத்திரம் பல்வேறுபட்ட பொருத்தமற்ற பேூக்கினை அரசு வெளிப்படுத்துகின்றது. தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தால் சிங்கள மக்கள் குழப்பமடை வர். எதிர்த்தரப்பினரும் இனவாத, மதவாத அமைப்புக்களும் எதிர்ப்புக்களை வெளிப்படுத்துவர். அதுவே மகிந்தவின் பிரசாரங்களுக்கு வாய்ப்பாக அமைந்து விடும் என அரசு கூறுகின்றது. இது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத அரசின் பொறுப்புணர்வற்ற பதிலளிப்பாகும்.

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டால் சிங்கள மக்கள் குழப்பமடைவர் எனக் கூறும் அரச தரப்புக்கள் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாவிட்டால் தமிழ் மக்கள் குழப்பமடைவர் என ஏன் கருதவில்லை. தமிழ் மக்களின் கோரிக்கையினை நியாயத்தின் அடிப்படையில் பரிசீலிக்க அரசும் அதன் சட்டமா அதிபர் திணைக்களமும் பின்னடிக்கின்றன. ஆகவே நாட்டில் தமிழர்களுக்கென்றும் சிங்களவர்களுக்கென்றும் வெவ்வேறான அணுகுமுறைகளையே இந்த அரசு பேணுகின்றது என்பது புலனாகின்றது. இவ்வாறான நிலையில் அரசின் நல்லிணக்கம் கூடச் சாத்தியமில்லை என்பது வெளிப்படையானது. அரசியல் கைதிகளின் விடுதலைக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட சமூக நிறுவனங்கள் போராடுகின்றன.

எனவே அரசியல் கைதிகளின் விடுதலைளை அரசியல் கட்சிகளின் கோசமாக தெற்கில் யாராவது பார்க்கத் தேவையில்லை. இதுவெறும் மனிதாபிமானப் பிரச்சினை என்பதனை அரசும் தெற்கும் புரிந்து கொள்ள வேண்டும். என்றுள்ளது. (எ)

## பிண அறைகள், விடுதிகள் திறந்து வைக்கப்படுகின்றன

வடக்கு மாகாணத்தில் தேவையின் நிமித்தம் அமைக்கப்பட்ட பிண அறைகள் மற்றும் விடுதிகளைத் திறந்து வைக்கும் செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இது பற்றி மேலும் தெரிவித்துள்ளதாவது: வடக்கு மாகாணத்தில் பல்வேறு சிறப்புச் செயற்றிட்டத்தின் கீழ் மருத்துவ சேவைகளைச் சிறப்பாக வழங்குவதற்குக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மருத்துவமனைகளின் தேவைகளின் நிமித்தம் அவசர சிகிச்சைப் பிரிவு, விடுதிகள், நோயாளர் விடுதிகள், விபத்துப் பிரிவு, பிண அறை போன்ற பல்வேறு பிரிவுகள் சீரமைக்கப்பட்டும், புதிதாக அமைக்கப்பட்டும் வருகின்றன.

இவற்றின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில் அவற்றைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பதற்கு மருத்துவமனை நிர்வாகம் எதிர்பார்க்கின்றது. ஆனால் தேவையின் நிமித்தம் அவற்றை உடனடியாகப் பயன்படுத்துமாறு அறிவித்தல் வழங்கியுள்ளோம். குறிப்பாக மருத்துவ சேவையில் உள்ளவர்கள் தங்கிநின்று சேவை களைப் புரிவதற்கான விடுதிகள், மற்றும் பிண அறைகள் என்பவற்றை உடனடியாகப் பாவனைக்கு கொண்டுவருமாறு கூறியுள்ளோம். என்று அமைச்சு தெரிவித்தது. (எ-ரி)

# காணாமல் போன சிறுவர்களில் இதுவரை 90 சிறுவர்கள் குடும்பங்களுடன் இணைப்பு

யாழ்ப்பாணம்.நவ.13

வடக்கு மாகாணத்தில் போர் மற்றும் இயற்கை இடர்கள் காரணமாக கடந்த காலங்களில் காணாமல்போன சிறுவர்களில் இதுவரை 90 சிறுவர்கள் அவர்களின் குடும்பங்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

மாகாண சிறுவர் நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது பற்றி மேலும் தெரிவித்ததாவது: வடக்கு மாகாணத்தில் கடந்த காலத்தில் போர், ஆழிப்பேரலை, துஷ்பிரயோகம் போன்ற பல்வேறு காரணிகளால் சிறுவர்கள் காணமல் போய் உள்ளனர். 1999 ஆம் ஆண்டு முதல் எமது திணைக்களத்தால் காணாமல் போன சிறுவர்கள் பற்றிய விவரங்களை பெறுவதற்கும் நடவடிக்கைகள் எடுப்பதற்கும் சிறப்பான பிரிவு செயல்பட்டு வருகின்றது. ஆழிப்பேரலை மற்றும் போர்க் காலங்களில் அதிகமான சிறுவர்கள் காணாமல் போயுள்ளனர்.

இதுவரையில் எமக்கும் 792 வரையிலான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. காணாமல் போன சிறுவர்களின் உறவுகள் மற்றும் குடும்பத்தினர் இல்லாத சந்தர்ப்பத்தில் கண்டுபிடிக்கப்படும் அவர்களை சிறுவர் இல்லங்களில் பாதுகாப்பாகப் பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார். (எ-ரி)

## வடக்கு மாகாணத்தில் மழை காரணமாக

# 250க்கும் அதிகமான ஏக்கர் நிலத்தில் நெற் பயிர் அழிவு



யாழ்ப்பாணம் நவ 13

வடக்கு மாகாணத்தில், தற்போது கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி தொடர் மழையின் காரணமாக 250க்கும் அதிக மான ஏக்கர் நெற்பயிர் அழிவடைந்துள்ளது என வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இம்முறை 55 ஆயிரத்துக்கும் அதிகமான கெக்டேயர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டது. பயிரிடப்பட்ட நெற்செய்கையின் ஊடாக 85 ஆயிரத்துக்கும் அதிகமான தொண் அறுவடை எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், வடக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக பெய்த அடைமழை காரணமாக விதைக்கப்பட்டு முளைப் பருவத்தில் இருந்த ஒரு தொகை நெற்பயிர் வெள்ளத்தினால் அழிவடைந்துள்ளது என அறியக்கூடியதாக உள்ளது. ஓரளவு வளர்ந்து காணப்படும் நெல்லினம் இந்த இடரில் இருந்து தப்பியுள்ளது என அறிய முடிகின்றது. என்றார். (எ-8)

## பொலிஸ் அதிகாரியின் வாகனத்தை மோதியவருக்கு பிணை கிடைத்தது

கிளிநொச்சி நவ 13

பொலிஸ் அதிகாரியின் வாகனத்துடன் மோதிய வாகனத்தின் சாரதியை 50 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதி வழங்கியது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்று.

கிளிநொச்சி பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கரந்தாய் பகுதியில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் பயணம் செய்த காருடன் மிக வேகமாகச் சென்ற கூலர் ரக வாகனம் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியது. இதில் காரில் பயணம் செய்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட இருவர் சிறு காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரை நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்திய போது அவரை 50 ஆயி ரம் ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதி வழங்கியது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்று. (எ-6)

## தீவுப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக

# கற்றாளை செய்கைத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது

யாழ்ப்பாணம் நவ 13

யாழ்ப்பாணம் தீவகப்பகுதியில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முயற்சியில் கற்றாளை செய்கைத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என யாழ்ப்பான மாவட்டச் செயலக விவசாயப் பணிப்பாளர் திருமதி எஸ்.கைலேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாகத் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் தீவகப்பகுதியில் உள்ள விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் நாம் பல முன்னேற்றத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் தற்போது தீவகத்தில் கற்றாளைச் செய்கையை ஊக்குவிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்த முயற்சியின் முதற் கட்டமாக வேலணை மற்றும் நெடுந்தீவுப் பிரதேசங்களில் கற்றாளை நடுவதற்குத் திட்ட மிடப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப கட்டமாகப் பிரதேச செயலகங்கள் ஊடாக விவசாயிகள் தெரிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு குறித்த பயிர்ச் செய்கை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

வேலணை பிரதேச செயலகப் பிரிவில் 23 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நெடுந்தீவு பிரதேச செயலகர் பிரிவில் 16 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சிகள் அனைத்தும் அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ளன என்றார். (எ-8)



## வவுனியாவில் விசித்திர திருமணம்; சீதனமாக பாம்புப் பெட்டி, மகுடி

*வவுனியா, நவ.13*

*வவுனியா சிங்களக் கிராமம் ஒன்றில் தெலுங்கு முறையில் வித்தியாசமான திருமணம் ஒன்று அண்மையில் நடைபெற்றது. திருமண பந்தத்தில் இணைந்த தம்பதிக்கு அவர்களின் வழக்கப்படி பாம்புப் பெட்டி, மகுடி சீதனமாக வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.*

*இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:*

*மல்காந்தி என்ற 19 வயதுப் பெண்ணுக்கும் அரவிந் குமார என்ற 20 வயதுடையவருக்கும் தெலுங்குச் சம்பிரதாய முறைப்படி இந்த திருமணம் நடைபெற்றுள்ளது. பெரியோர்கள் முன்னிலையில் ரபான் அடித்து, பாசி மாலை அணிந்து, மோதிரம் மாற்றித் திருமண பந்தத்தில் இருவரும் இணைந்தனர்.*

*வவுனியா, தெற்கு பிரதேச செயலகத்தின் நொச்சிக்குளம் கிராமத்தில் வித்தியாசமான வாழ்க்கை முறையை கொண்ட சமூகம் ஒன்று வாழ்ந்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சமூகத்தில் சுமார் 54 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன என பிரதேச செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.*

*குரங்கு வித்தை காட்டுதல், பாம்பு வித்தை காட்டுதல் போன்றவை இவர்களின் சம்பிரதாயத் தொழிலாகும். தற்போது இவர்கள், பயிர்ச் செய்கையில் ஈடுபடுதல், மீன் பிடித்தல் மற்றும் பொருள்கள் விற்பனை செய்யும் தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.*

*திருமணத்தின் பின்னர் மணமகளின் தந்தையினால் இருவருக்கும் பாம்பு மற்றும் பாம்பு பெட்டி ஒன்று சீதனமாக வழங்கப்பட்டுள்ளது. இதன் ஊடாகவே அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டும் என்பது வழக்கமாம் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-21)*

## பனைசார் உற்பத்தி மற்றும் விற்பனை வளர்ச்சி வீதம் நடப்பாண்டில் அதிகரிப்பு

*பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ.13

பனை அபிவிருத்திச் சபையின், நடப்பாண்டினது பனைசார் உற்பத்திகளின் வளர்ச்சி சடுதியாக அதிகரித்துள்ளதென சபையின் பொது முகாமையாளர் பா.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பனைசார் உற்பத்திகளின் கேள்வி தற்போது அதிகரித்துள்ளதுடன் சபையினால் பனைசார் புதிய உணவு உற்பத்திப் பொருள்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக ஒடியல் மாவினால் தயாரிக்கப்பட்ட குக்கீஸ், பனம்பழ ஐஸ்கிறீம், யோக்கட், மாஸ்மெலோ மற்றும் ரெற்றா பக்கட்டுகளில் பொதி செய்யப்பட்ட பனம் பானம் முதலான உடல் நலத்துக்கு ஆரோக்கியமான பனைசார் உற்பத்திகள் தற்போது பனை அபிவிருத்திச் சபையினால் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அண்மையில் பனை அபிவிருத்திச் சபையினால் கொழும்பு காலிமுகத்திடலில் நடத்தப்பட்ட பன்னாட்டுக் கண்காட்சியின்போது மேற்குறித்த உற்பத்திப் பொருள்கள் புதிதாகச் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் நுகர்வோரிடையே குறிப்பாக தென்பகுதி மக்கள் மற்றும் வெளிநாட்டவர் மத்தியில் அதிக கிராக்கி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது என்றார் சுதாகரன்.

மேலும் சபையானது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து நடப்பாண்டில் ஐப்பசி மாதம் வரை பனைசார் உற்பத்திகளை இரட்டிப்பாக்கி இருப்பதும் பனைசார் உற்பத்தித் துறையின் புதிய திருப்பு முனையினையும் வளர்ச்சியையும் எடுத்துக் காட்டுகின்றது.

அத்துடன் தற்போது பனைசார் உற்பத்திகளினது கேள்வி அதிகரித்துள்ளமையால் சபையின் கற்பகதரு விற்பனை நிலையங்களின் விற்பனையும் நடப்பாண்டில் குறிப்பிடத்தக்க அளவு அதாவது கடந்த வருடத்தினைக் காட்டிலும் இவ்வருடம் ஐப்பசி மாதம் வரையிலான காலப்பகுதியில் விற்பனை வளர்ச்சி வீதமானது 100 வீதம் அதிகரித்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-21)

## முஸ்லிம்களின் அபிலாசைகளை நிறைவேற்றாதவர்கள் த.தே. கூட்டமைப்பை விமர்சிக்கத் தகுதியற்றவர்கள்

*வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ.13

முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றாதவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிக்கத் தகுதியற்றவர்கள் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் தெரிவித்தார்.

வவுனியா செட்டிக்குளத்தில் இடம்பெற்ற முஸ்லிம் மக்களுடனான சந்திப்பொன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சித் தேர்தல்கள் இடம்பெறவிருக்கின்றதுஎனக் கூறப்படுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் வடக்கிலே தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைத்து அதனூடாக அரசியல் இலாப மீட்டும் ஒரு சில அரசியல் வியாபாரிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்துக்குத் தடையாக இருக்கின்றது என போலிப் பரப்புரையை இப்போது முன்னெடுத்து வருகின்றார்கள்.

இந்த அரசியல் தலைவர்கள் 2004ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டுவரை (14வருடங்கள்) அல்லது இதனைவிடவும் கூடுதல் காலம் அமைச்சர்களாக இருந்திருக்கின்றார்கள். ஆனால் இன்று வரை வடக்கு முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்ற விடயங்களில் 25வீத முன்னேற்றம் தன்னும் ஏற்படவில்லை. இது, கடந்த 14 வருடங்களாக அவர்கள் அமைச்சர் கதிரைகளில் இருந்து மக்களுக்காக எதனையும் பெற்றுக்கொடுக்கவில்லை என்பதையே குறிக்கின்றது.

அமைச்சரவையிலே வடக்கு முஸ்லிம் மக்களின் வீடமைப்பு மற்றும் மீள்குடியமர்வு குறித்தோ எந்தவிதமான உருப்படியான கொள்கைத் தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை. நீங்கள் மேற்கொள்ளும் தீர்மானங்களின் அடிப்படையிலேயே வடக்கில் இருக்கின்ற அரச அதிகாரிகள் செயற்படுகின்றார்கள். முறையான தீர்மானங்களை அமைச்சரவையில் நிறைவேற்றியிருந்தால் இந்த மக்களின் மீள்குடியேற்றம் சீரானதாக அமைந்திருக்கும்.

அதைவிடுத்து அரசியல் எதிரிகளைப் பழிவாங்குகின்ற, சொத்துக் குவிக்கின்ற இடமாக மீள்குடியேற்றத்தைப் பாவித்துவிட்டு இப்போது முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடையாக இருக்கின்றதுஎன்றுசொல்வது உங்களுடையசுயலாபத்தையும் இயலாமையினையுமே சுட்டிக்காட்டுகின்றது.

வடக்கிலே முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு பெரும் சவால்களை எதிர்நோக்கியிருக்கின்றது. அதிலும் குறிப்பாக தமிழ் மக்களினால் அது பெரும் சந்தேகக் கண் கொண்டு நோக்கப்படுகின்றது. இதனைச் சீர்செய்ய வேண்டிய பொறுப்பு தமிழ் முஸ்லிம் சமூகத் தலைவர்களுக்கும், அரசியல் தலைவர்களும், மதத் தலைவர்களுக்கும் இருக்கின்றது.

வடக்கு முஸ்லிம்களாகிய எமக்கு அவசியப்படுவதெல்லாம் 'வடக்கில் எமது மக்களின் இருப்பை உறுதிசெய்வது' மாத்திரமேயாகும். தமிழ் அரசியல் தலைவர்கள் இந்த விடயத்தை நன்கு புரிந்திருக்கின்றார்கள். எமது முஸ்லிம் மக்களை வரவேற்கின்றார்கள். முஸ்லிம் மக்களின் விடயங்கள் சீராக முன்னெடுக்கப்படல் அவசியம் என்பதில் அவர்களுக்கு உடன்பாடுகள் இருக்கின்றன. இவ்வாறான ஆரோக்கியமான சூழ்நிலைகளை எவரும் தங்களுடைய சுயநல அரசியலுக்காகக் குழப்பி விடக்கூடாது. எந்தப் பிரச்சினைகளையும் அவற்றை அணுகுவதற்கு உரிய முறையில் அணுகி மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுத்தல் அவசியமாகும் -என்றார். (எ-101)

## சித்திரவதைக் குற்றச்சாட்டுக்களால்

# அழுத்தங்களை எதிர்கொள்ளும் இலங்கை

### அசோசியேட்டட் பிரஸின் செய்திக் குறிப்பில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 13

அண்மைக் காலங்களில் இலங்கையில் 50 இற்கும் அதிகமான தமிழர்கள் சித்திரவதை செய்யப்பட்டமை மற்றும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பான அசோசியேட்டட் பிரஸ் (ஏபி) செய்தி நிறுவனத்தின் விசாரணை அறிக்கை கடந்த வாரம் வெளியிடப்பட்டதை அடுத்து, அரசுக்கு அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

இது தொடர்பாக ஏபி செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'கடந்த புதன்கிழமை, அசோசியேட்டட் பிரஸ் வெளியிட்டுள்ள புதிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மருத்துவர்கள், உளவியல் நிபுணர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமை அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்கச்செனட்டின்சனநாயகக் கட்சி உறுப்பினரும், வெளிநாடுகளுக்கான அமெரிக்க உதவிகள் குறித்த உபகுழுவில் இடம் பெற்றிருப்பவருமான, பற்றிக் லெஹி, கைதுகள் தடுப்புகள் பன்னாட்டுத் தரநியமங்களுக்கு ஏற்பவே இடம்பெற வேண்டும். போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையிலேயே, அமெரிக்கச் செனட் ஒதுக்கீட்டுக் குழு இலங்கைக்கு உதவிகளை வழங்கியுள்ளது. 2015ஆம் ஆண்டில் இருந்து 76 மில்லியன் டொலரை அமெரிக்காவின் அயலுறவுத்துறை உதவியாகப் பெற்றுள்ளது. இந்தச் சித்திரவதைகள் கொடூரமானவை என்பதுடன், நல்லிணக்கம் மற்றும் நீதிக்கான இலங்கை அரசின் வாக்குறுதிகளுக்கு முரணானது. இதற்குப் பொறுப்பானவர்களைத் தண்டிப்பதற்காக, சித்திரவதைகளுக்கான நம்பகமான ஆதாரங்களை தேடிக் கொண்டிருக்கிறேன், என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தச் சித்திரவதைகள் தொடர்பாக சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று மருத்துவர்கள் பலர், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சயிட் அல் ஹுசைனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

'தடயவியல் நிபுணர்கள் என்ற வகையில் நாங்கள், இலங்கையில் சித்திரவதைகள் செய்யப்பட்டதையடுத்து, நாட்டைவிட்டுவெளியேறிய நூற்றுக்கணக்கான இலங்கையர்களை பார்த்திருக்கிறோம். ஆட்சி மாற்றத்துக்குப் பின்னரும், இலங்கையில் இருந்து கவலை தரும் எண்ணிக்கையில் இத்தகைய வழக்குகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன' என்று ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு மருத்துவர்கள் தரப்பில் எழுதப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நாடாளுமன்ற அயலுறவுக் குழுவில் இடம்பெற்றுள்ள சனநாயகக் கட்சியின் உயர்மட்டப் பிரதிநிதிகள் சபை உறுப்பினரான, எலியட் ஏஞ்சல், வொசிங்டனில் உள்ள கொள்கை வகுப்பாளர்கள் இந்தச் சித்திரவதை அறிக்கைகளை உதாசீனப்படுத்த முடியாது என்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்த அறிக்கைகளின் தீவிரத் தன்மையைக் கருத்திற் கொண்டு, இது தொடர்பாக முழுமையாக பொறுப்புக்கூறல் நடைபெறும் வரை, இலங்கையுடனான அமெரிக்காவின் மேலதிக இராணுவ உறவுகள் விடயத்தில் அமெரிக்கா கவனமாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்குத் திரும்பத் திரும்ப அழைப்பை ஏற்படுத்திய போதும், பதிலளிக்கப்படவில்லை. வெள்ளிக்கிழமை அனுப்பப்பட்ட மின்னஞ்சலுக்கும் பதில் இல்லை, என்றும் ஏபி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (5)

## தமிழர்கள் மீதான

# சித்திரவதை உண்மையே

### வடக்கு முதலமைச்சரும் உறுதிப்படுத்துகிறார்

கொழும்பு, நவ. 13

வடக்கில் சில தமிழர்கள் மீது இராணுவத்தினரால் மீறல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அசோசியேட்டட் பிரஸ் (ஏ.பி) செய்தி நிறுவனத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாகச் சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தேன். துரதிஷ்டவசமாக அது கவனத்தில் கொள்ளப்படவில்லை என்றும், அவர் ஏபியிடம் கூறியுள்ளார்.

அத்தகைய பன்னாட்டுப் பொறிமுறை அமைக்கப்பட்டிருந்தால், இத்தகைய இராணுவ கொடுஞ்செயல்கள் இடம்பெறுவதற்கு தடையாக இருந்திருக்கும், என்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து வெளியேறி ஐரோப்பாவில் தஞ்சம் புகுந்த 52பேரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளைஏ.பி.நிறுவனம்கடந்தவாரம் வெளியிட்டிருந்தது. அதில், இலங்கையில் தற்போதும் சித்திரவதை தொடர்வதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. (5)

**பணிப்பெண் தேவை**

கொக்குவில் வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. நாள்தோறும் வந்து போவோரும் விண்ணப்பிக்கலாம்.

**077 929 8034**

## சிங்கப்பூருக்கு ரணில் திடீர் பயணம்

கொழும்பு, நவ. 13

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, திடீரெனச் சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். கடந்த வியாழக்கிழமை இரவு, சிங்கப்பூருக்குத் தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன், பன்னாட்டு வர்த்தக மற்றும் அபிவிருத்தி மூலோபாய அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும், சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார்.

இந்தப் பயணத்தின் நோக்கம் வெளியிடப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்ட விவாதம் நடந்து கொண்டிருக்கும் நிலையில், தலைமை அமைச்சர் திடீரெனச் சிங்கப்பூர் சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, நான்கு நாள்கள் பயணமாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 21ஆம் நாள் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ள விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (5)

## காணவில்லை

**விநாயகர் வீதி, கல்வியங்காடு** என்னும் முகவரியைச் சேர்ந்த **நடராசா பத்மநாதன்** என்பவர் கடந்த திங்கட்கிழமையில் இருந்து காணவில்லை. இடது கை சற்று செயலிழந்துள்ளது. கண்டறிந்தவர்கள் அல்லது விவரமறிந்தவர்கள் தொடர்பு கொண்டு உதவவும்.



**077 161 4258**

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை

### பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்

### ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்


**வட்டாரம் :- 06**

**உத்தேச ஆதன இல :- 61**

**வீதி :- வெள்ள வாய்க்கால் ஒழுங்கை**

**கிராம சேவையாளர் பிரிவு :- J/152**

வட்டாரம் 06, வெள்ள வாய்க்கால் ஒழுங்கை, ஆதன இல.61 இல் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு (தற்போது தென்மேற்கு) பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகல் இறை " இரட்டங்காலி" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 1 1/2 கொண்ட இவ்வாதனம் மாதகல், பற்றிமா வீதியைச் சேர்ந்த சூசைமுத்து பாவிலுப்பிள்ளை ஆகிய இவரால் அவ்வூர் அவரது மனைவியாகிய பாவிலுப்பிள்ளை மேரிறோஸ் அவர்களுக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு. A.S அற்புதராஜா அவர்கள் முகதாவில் நிறைவேறிய 216 ஆம் இலக்க 05.11.2011 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்து வதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு.A.சந்தியாப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 2780 ஆம் இலக்க 18.04.2017 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் Lot 01 இன் பிரகாரம் இவ்வாதனமானது **"இரட்டங்காலி"** நிலப்பரப்பு 1 1/2 கொண்ட குறித்த ஆதனத்தின் ஆரம்ப உறுதி ஒழுங்கின்றி காணப்படுவதால் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த பாவிலுப்பிள்ளை பெண் மேரிறோஸ் எனும் பெயருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்புக்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச-சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.




**செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்**

## அரசாங்க அறிவித்தல்

### மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

### வழங்குநரைப் பதிவு செய்தல் - 2018

யாழ். மாவட்ட செயலகம், யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2018 ஆம் ஆண்டுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் பொருள்கள், வேலைகள் மற்றும் சேவைகளை விநியோகிப்பதற்கான வழங்குநர்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலக பெறுகை அலகு, பிரதேச செயலகங்கள் என்பவற்றில் 2017.11.15 ஆந் திகதி தொடக்கம் 2017.12.13 ஆந் திகதிவரை அலுவலக நேரத்திலோ அல்லது www.jaffna.dist.gov.lk என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்தோ பெற்றுக் கொள்ளமுடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2017.12.15 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் (9"x4") இடது பக்க மேல் மூலையில் "வழங்குநரை பதிவு செய்தல் - 2018" எனக் குறிப்பிட்டு " அரசாங்க அதிபர், பெறுகை அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் பெறுகை அலகில் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விவரத்திற்கு ஏற்றவாறும், ஏனைய வழங்குநர்கள் ரூபா 500/- வினையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலங்கை வங்கி கணக்கிலக்கத்தில் பணமாக வைப்பில் இடப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக்கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை. வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சிட்டை விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| ஒப்பந்த தொகை | பதிவுக் கட்டணம் |
|---|---|
| ரூபா 2.000.000 இக்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2.000 |
| ரூபா 2.000.000 இக்கு அதிகமானதும் ரூபா 5.000.000 இக்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகைக்கு | ரூபா 3.000 |
| ரூபா 5.000.000 இக்கு அதிகமானதும் ரூபா 10.000.000 இக்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகைக்கு | ரூபா 5.000 |

**வழங்கல்கள், வேலைகள் மற்றும் சேவைகள் விவரம்**

01. கட்டட நிர்மாணம், திருத்த வேலைகள் செய்தல், வீதி திருத்த வேலைகள், நீர் இணைப்புக்கள், மின் இணைப்புக்களை நிர்மாணித்தல் திருத்தம் செய்தல், அலுமினியம் பிரிப்பு, பொருத்து, கதவு வேலைகள், கட்டடங்களுக்கு வர்ணம் பூசுதல் கட்டட வேலைகளுக்கான அனைத்துப் பொருள்கள் வழங்குதல்.
02. காகிதாதிகள், எழுது பொருள்கள், நுகர்வுப் பொருள்கள்
03. இலத்திரனியல், மின்சார, எந்திரவியல் பொருள்களை வழங்கல் (விவசாய, மீன்பிடி, வீட்டு போன்றன), திருத்துதல் பராமரித்தல்
04. உணவு வகைகள், குடிநீர்வகைகள், பால் மா வகைகள், உள்ளூர் உற்பத்திப் பொருள்கள்
05. மரம், உருக்கு, பிளாஸ்ரிக், எம்.டீ.எப், பைபர் கிளாஸ் தளபாடங்கள் வழங்கலும், திருத்துத லும்
06. திரைச்சிலைகள், சீருடைகள், மேசைவிரிப்புக்கள், படுக்கை விரிப்பு, மெத்தை, நிலவிரிப்புக்கள், பொன்னாடைகள்
07. தோல்வகை உற்பத்திப் பொருள்களும், விளையாட்டுப் பொருள்களும்
08. அச்சிட்டுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள், அலுவலக அடையாள அட்டைகள்
09. மோட்டார் வாகனங்களை வழங்கல், வாடகைக்கு வழங்கல், திருத்துதல் பராமரிப்பு செய்தல், ரயர், ரியூப், பற்றறிகள், உதிரிப்பாகங்கள் வழங்கல்
10. பாதுகாப்பு சேவை, உள்ளக தொலைபேசி, ஒலிபெருக்கி, ஒலிவாங்கி, புகைப்படப்பிடிப்பு, ஒளிப்படப்பிடிப்பு வளிபதனாக்கிகள், போட்டோப் பிரதி இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், மலசல கூடங்கள் மற்றும் அலுவலக சுத்திகரிப்பு சேவை, சுத்திகரிப்புப் பொருள்கள்
11. விவசாய, மீன்பிடி, சமூகநலன் பொருள்கள் வழங்கல்

**நா.வேதநாயகன்,
தலைவர்,
கேள்விச் சபை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.**

# அரசமைப்பைத் தீயிட்டு கொளுத்துங்கள்!

## அறைகூவல் விடுக்கிறார் எல்லே குணவங்க தேரர்

கொழும்பு, நவ. 13
நாட்டில் விரைவில் அரசியல் மாற்றமொன்று ஏற்படும். அது தொடர்பான தகவல்கள் எனக்குக் கிடைத்துள்ளது. புதிய அரசமைப்பைத் தீயிட்டுக் கொளுத்தவேண்டும்.
இவ்வாறு எல்லே குணவங்க தேரர் தெரிவித்துள்ளார்.
மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்பு உருவானால் நாட்டுக்கு ஆபத்து ஏற்படும். புதிய அரசமைப்பைத் தடுத்து நிறுத்துவதற்காக லட்சக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி, புதிய அரசமைப்பைத் தீயிட்டுக் கொளுத்தவேண்டும்.
பிக்குகளுக்கு என்று தனிப் பலம் இருக்கின்றது. அன்று முதல் இன்றுவரை அரசியலில் தீர்மானிக்கும் சக்தியாகப் பிக்குகளே இருக்கின்றனர்.
பலத்தைக் காட்டவேண்டிய நேரம் வந்துவிட்டது.
காணி அதிகாரத்தை வழங்கினால் திருகோணமலைத் துறைமுகம், ஒலுவில் துறைமுகம், காங்கேசன்துறைத் துறைமுகம் ஆகியன எம்மிடமிருந்து இல்லாமற்போகும்.
புதிய அரசமைப்பு பயங்கரமானது எனச் சொல்கின்றோம். அது தோற்கடிக்கப்படவேண்டும்.
நாட்டில் விரைவில் அரசியல் மாற்றமொன்று ஏற்பட்டவுள்ளது. இனிவரும் நாள்களில் எதுவும் நடக்கலாம் - என்றார். (5)

## கணவனை அடித்தே கொலை செய்த மனைவி

### பொல்லுடன் பொலிஸில் சரண்

கணவரைப் பொல்லால் தாக்கிக் கொலை செய்ததாகக் கூறப்பட்டு பெண் ஒருவர் வென்னப்புவப் பகுதிப் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு கொலை செய்யப்பட்டவர் அதிக மது போதையில் இருந்ததாகவும், தனது மனைவியைப் பொல்லால் அவர் தாக்க முற்பட்டபோது, கணவரின் கையில் இருந்த பொல்லைப் பறித்த மனைவி, அவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். பின்னர் அவர் அந்தப் பொல்லுடன் சென்று பொலிஸில் சரணடைந்துள்ளார். சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (5)

## அமெரிக்காவின் கருத்தை மறுதலிக்கின்றது சீனா

கொழும்பு, நவ. 13
இலங்கைக்குச் சீனா வழங்கும் உதவிகள் தொடர்பில் அமெரிக்க அதிகாரி வெளியிட்ட கருத்தைச் சீனத் தூதுவர் ஈ சியாங்லிங் நிராகரித்துள்ளார்.
அமெரிக்காவின் உதவிச் செயலரான எலிஸ் வெல்ஸ், அமெரிக்கக் காங்கிரஸில் உரையாற்றும்போது சீனாவின் சலுகையற்ற கடன்கள் காரணமாக இலங்கையில் கடன்சுமை அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார்.
இதனை மறுத்துள்ள இலங்கைக்கான, சீனத் தூதுவர் இலங்கைக்குச் சீனா சலுகை அடிப்படைக் கடன்களையே 2 வீதத்தில் வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.
வளர்முக நாடு ஒன்றுக்கு வழங்கும் அதிகபட்ச உதவியாக இது அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
சீனா இலங்கைக்கு 220 பில்லியன் டொலர்களைத் திட்டக்கடன்களாக இதுவரை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## மகிந்த அணியின் முறைப்பாடுகளை ஆராய்ந்தது பொதுநலவாய நாடாளுமன்றக் குழு

கொழும்பு, நவ. 13
தம்மை அடக்கியாள்வதற்கு அரசு முயற்சிக்கின்றது. நாடாளுமன்றத்துக்குள் திட்டமிட்ட அடிப்படையில் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.
இவ்வாறு பொதுநலவாய அமைப்பின் நாடாளுமன்றக்குழுவிடம் மகிந்த அணி முறையிட்டுள்ளது. அரசுக்கு எதிரான மனுவையும் கையளித்துள்ளது.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த அழைப்பின் பிரகாரம், பொதுநலவாய அமைப்பின் நாடாளுமன்ற சங்கத்தின் செயலர் அக்பர்கான் இலங்கைக்கு நேற்றுமுன்தினம் வருகைதந்தார்.
கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர விடுதியில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மகிந்த அணி சார்பில் தினேஸ் குணவர்தன, பந்துல குணவர்தன, நாமல் ராஜபக்ச உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.
தமது அணிக்கு எதிராக அரசால் இழைக்கப்படும் அநீதிகளை அக்பர்கானிடம் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துரைத்தனர்.
'நாடாளுமன்றத்தில் 53 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது பக்கமுள்ளனர். எதிர்க்கட்சிக்குரிய சிறப்புரிமைகள் எமது அணிக்கு மறுக்கப்படுகின்றன. விவாதங்களின்போது உரியவகையில் நேரம் ஒதுக்கப்படுவதில்லை.
எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் 16 நாடாளுமன்றஉறுப்பினர்கள்கொண்ட கட்சியொன்றுக்கே வழங்கப்பட்டுள்ளது. எமது பக்கமுள்ள நாடாளு மன்ற உறுப்பினர்கள் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். கைது நடவடிக்கை தொடர்கின்றது. நாடாளுமன்றம் வருவதற்குக்கூடவாய்ப்பு வழங்கப்படுவதில்லை. பொதுநலவாய அமைப்பின் நாடாளுமன்ற சங்கம் இதுதொடர்பான விடயத்தில் தலையிட்டு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும், என்றும் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அக்பர்கானிடம் கோரிக்கை விடுத்தனர்.
இவற்றைச் செவிமடுத்த அவர், அவை தொடர்பில் நாடாளுமன்றத்தின் சபா நாயகரிடம் பேசப்படும் என்றும், பொதுநலவாய அமைப்புக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படும் என்றும் உறுதியளித்தார் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (5)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
03.10.1959
கடந்த 14.10.2017 அன்று
மறைவு
14.10.2017
சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி
திருமதி
ருக்மணி தனபாலசிங்கம்
அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (13.11.2017) திங்கட்கிழமை அதிகாலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பிரிவால் துயருறும் :
குடும்பத்தினர்.
கற்கோவளம்,
பருத்தித்துறை.


## ஐ.தே.க. – சிறுபான்மைக் கட்சிகள் ஆசனப் பங்கீட்டில் இணக்கமில்லை

கொழும்பு, நவ. 13
ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறுபான்மையினக் கட்சிகளுக்கும் இடையே உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தொகுதிப் பங்கீட்டு விவகாரத்தில் முறுகல் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.
2018ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதியில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் கூட்டணி அமைத்தே ஐக்கிய தேசியக் கட்சி களமிறங்கவுள்ளது.
ஐக்கிய தேசிய முன்னணியின் கீழ் யானைச் சின்னத்தில் போட்டியிட வருமாறு சிறு கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது.
தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளுடனும் பேச்சுகளை ஆரம்பித்திருந்தது.
அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி கோரியுள்ள பங்கீட்டை வழங்குவதிலேயே ஐக்கிய தேசியக் கட்சி இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. தமக்குரிய ஒதுக்கீடு உரிய வகையில் வழங்கப்படவேண்டும் என்பதில் கூட்டணி உறுதியாகவே இருக்கின்றது.
ஏனைய கட்சிகளின் கோரிக்கைகளையும் முழுமையாக ஏற்கும் நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சி இல்லை.
இதன்காரணமாகவே தொகுதிப்பங்கீட்டில் இழுபறி நிலை உருவாகியுள்ளது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்காக இனிவரும் நாள்களில் தொடர்பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன. (5)


ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01 . 07 . 1945
மறைவு
24 . 11 . 2016
திதி:- தசமி
(13.11.2017)
அமரர் சின்னையா சரோஜினி



அம்மா!
ஓராண்டு பிரிவு பெருந்துயரை
அள்ளிக் கொட்டுகிறது
கேட்க நாதியற்றுப் போனதாய் – காலம்
எங்கள் வானத்தில் இருளை நிரப்புகிறது
எங்கள் கிளைகளிலிருந்து பூக்களைப் பறிக்கிறது
வாழ்வு வசந்தம் இழந்து போகிறது
அம்மா! எங்களிடமிருந்து விடைபெற்று
போனது போதும்
மீண்டும் வாருங்கள் ஒரு சூரியனாய்
குடும்பத்தினர்
மீசாலை வடக்கு, வேம்பிராய், கொடிகாமம்.

# உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்கள் எண்ணிக்கை 3 ஆயிரத்து 870ஆல் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 13
உள்ளூராட்சி மன்றங்களுக்கு கடந்த தடவை 4 ஆயிரத்து 486 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில், புதிய முறைமையின் கீழ் 8 ஆயிரத்து 356 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். 3 ஆயிரத்து 870 பேரால் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.
உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பை வெளியிடுவதற்கு தேவையான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. உள்ளூராட்சி சபைகள், அவற்றுக்குத் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை உள்ளடக்கியதாக இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
மொத்தமுள்ள 341 உள்ளூராட்சி சபைகளுக்கும் 8 ஆயிரத்து 356 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்டுள்ளது. இவர்களில் 3 ஆயிரத்து 840 உறுப்பினர்கள் நேரடியாக வட்டார அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். எஞ்சியுள்ள உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் தெரிவு செய்யப்படுவார்கள்.
கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் போது, 336 உள்ளூராட்சி சபைகளுக்கு 4 ஆயிரத்து 486 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மொத்தமுள்ள 341 உள்ளூராட்சி சபைகளில், 276 பிரதேச சபைகள், 41 நகர சபைகள், 24 மாநகரசபைகளும் எதிர்வரும் 2018ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் நாள் தொடக்கம் இயங்கத் தொடங்கும் என்றும் வர்த்தமானி அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. (5)

## எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் ஆதிக்கம் செலுத்தப்போகும் பெண்கள்!

கொழும்பு, நவ. 13
புதிதாக தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சி சபைகளுக்கு 2 ஆயிரத்துக்கும் அதிகமான பெண் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.
புதிதாக அறிமுகப்படுத்தப்படும், கலப்பு தேர்தல் முறையின் கீழ், 25 வீதமான பெண்கள் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட வேண்டும். உள்ளூராட்சி சபைகளுக்கு 8 ஆயிரத்து 356 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். நேரடியான வட்டார முறைத் தெரிவில், பெண்களின் பிரதிநிதித்துவம் குறைந்து போனாலும், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ், 25 சதவீத பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படும்.
இதன் மூலம், இந்த முறை 2 ஆயிரத்துக்கும் அதிகமான பெண் பிரதிநிதிகள் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். கடந்த முறை உள்ளூராட்சி சபைகளில் 82 பெண் பிரதிநிதிகளே இடம்பெற்றிருந்தனர்.
இம்முறை வேட்பாளர் பட்டியலில் இடம்பெற வேண்டிய பெண்களுக்கான குறைந்தபட்ச ஒதுக்கீடுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.
வட்டார முறை வேட்புமனுவில் 25 வீதமும், விகிதாசாரப் பிரதிநிதித்துவ வேட்புமனுவில் 50 வீதமும் பெண் வேட்பாளர்கள் இடம்பெற்றிருக்க வேண்டும்.
மேற்குறித்த வகையில் தேவையான பெண் வேட்பாளர்களை உள்ளடக்காத வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

## டிசெ. 8இல் இயங்கத் தொடங்கும் அம்பாந்தோட்டைத் துறைமுகம்

*அமைச்சர் மலிக் தகவல்*

கொழும்பு, நவ. 13
சீனாவின் மேர்ச்சன்ட் ஹோல்டிங் நிறுவனமும், துறைமுக அதிகார சபையும் இணைந்து உருவாக்கிய கூட்டு முயற்சி நிறுவனம், அம்பாந்தோட்டை துறைமுகத்தை டிசெம்பர் 8ஆம்திகதி தொடக்கம் இயக்கவுள்ளது.
கொழும்பில் நேற்றுமுன்தினம் வர்த்தகப் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பில், பன்னாட்டு வர்த்தக மற்றும் அபிவிருத்தி மூலோபாயங்கள் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம இந்தத் தகவலை வெளியிட்டார். அம்பாந்தோட்டை துறைமுகத்தை பொறுப்பேற்கும் போது, 430 மில்லியன் அமெரிக்க டொலர் சீன நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும். எஞ்சிய கொடுப்பனவு, ஆறு மாதங்கள் கழித்து செலுத்தப்படும்.
கடந்த ஜூலைமாதம், அரசு சீன நிறுவனத்துடன் செய்து கொண்ட உடன்பாட்டுக்கு அமைய, 1.1 பில்லியன் டொலருக்கு, அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 70 வீத பங்குகள் குத்தகைக்கு விடப்பட வுள்ளன.
அம்பாந்தோட்டையில் சீனாவின் 5 பில்லியன்டொலர்முதலீட்டில், கைத்தொழில் வலயம் அமைக்கப்படவுள்ளது.
இங்கு கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.
3 பில்லியன் டொலரில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், 125மில்லியன்டொலரில் சீமெந்து ஆலை என்பனவற்றை உள்ளூர் பங்காளர்களுடன் இணைந்து கூட்டு முயற்சியாகத் தொடங்குவதற்கான திட்டங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. 'கைத்தொழில் வலயத்துக்கான காணிகள் பெரும்பாலும் அடையாளம் காணப்பட்டுள்ளன.
இதற்கான உடன்பாடு குறித்து சீனத் தரப்புடன் பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன. இந்தப் பேச்சுக்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கைத்தொழில் வலயத்திலும் கூட 70 வீதம் சீனாவின் பங்கு இருக்கும். சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக உடன்பாடு, ஜனவரி மாதம் தயாராகும் என்று நம்புகிறோம். இந்தியா, சீனாவுடனான சுதந்திர வர்த்தக உடன்பாடுகள் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் சாத்தியமாகும்' என்று மலிக் சமரவிக்கிரம குறிப்பிட்டார். (5)

## யோசிதவை கைகழுவினார் லொகான் ரத்வத்தையின் மகள்?

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் இளைய மகனான யோசித ராஜபக்சவின் காதலியான, நாடாளுமன்ற உறுப்பினர் லொகான் ரத்வத்தையின் மகள் யொகானா ரத்வத்தை, அவரை விட்டு விலகியுள்ளதாக கூறப்படுகி றது. இன்ஸ்டிராகிராம் பக்கத்தில் யோசித பதிவிட்டுள்ள தகவலில், பெண்ணை இழந்துவிட்டேன்என்று குறிப்பிட்டு காதலியுடனான ஒளிப்படத்தை வெளியிட்டுள்ளார். அதற்கமைய இந்தக் காதலியும் யோசிதவை விட்டு சென்றிருக்கலாம் என்று சமூக வலைத்தளங்களில் தகவல் பரிமாறப்பட்டு வருகின்றது. (5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி உப அதிபரும், முன்னாள் சிறுப்பிட்டி இ.த.க பாடசாலை அதிபருமான, கல்வயல் சமூகசேவா சங்க தலைவருமான
உயர்திரு. சுப்பிரமணியம் பரமேஸ்வரன்
B.A. , PGDE, M Teach
அவர்கள் 06.11.2017 அன்று யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி திரு.மா. இளஞ்செழியன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்கள்: க.தர்மலிங்கம், J.P குடும்பம்.
வலி கிழக்கு பிரதேசசபை முன்னாள் துணை தவிசாளர்,
நீர்வேலி.

மணிவிழா காணும் நாயகியை வாழ்த்துகின்றோம்



மணிவிழாக் காணும் மு/ உடையார்கட்டு மகாவித்தியாலய ஆசிரியை
திருமதி கி.கண்மணி
எமது தமிழ்பாட ஆசிரியர் அவர்கள் தனது அறுபதாவது வயதில் இன்று 13.11.2017 ஓய்வுபெறுகிறார்
ஆசிரியர் பணி
20.04.1981 - 14.03.1990
மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்
(தொண்டர் ஆசிரியர்)
15.03.1990 - 30.06.2008
மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்
01.07.2008 - 13.11.2017
மு/ உடையார்கட்டு மகாவித்தியாலயம்
எம் வித்தியாலயத்துக்கு உணர்வோடு தமிழை உயர்வாகக் கற்பித்த பெருந்தகையாளை ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:- பாடசாலைச் சமூகம்,
மு/உடையார்கட்டு ம.வி.

மணி விழா வாழ்த்துக்கள்

எமது வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி இன்று (13.11.2017) மணிவிழாக்காணும் மாண்புமிகு அதிபர்
திருமதி சகுந்தலாதேவி தர்மகுலசிங்கம்
(B.A.,Dip. in Edu. SLPS 1)
அவர்களின் சேவையை நயக்கின்றோம்.



சேவை விவரம் (32 வருட சேவை)
ஆசிரியர் சேவை :
26.02.1985 - 18.06.1992
கிளி/ தர்மக்கேணி அ.த.க. பாடசாலை
19.06.1992 - 31.01.1995
யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்
01.02.1995 - 03.08.2000
யா/ சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலயம்
அதிபர் சேவை :
04.08.2000 - 15.06.2010
யா/ சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலயம்
16.06.2010 - 02.09.2015
யா/ சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்
03.09.2015 - 13.11.2017
யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்.
Congratulations
Congratulations
வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மரண அறிவித்தல்கள்

### தாமோதரம்பிள்ளை தர்மகுலசிங்கம் (குலம் இந்துமதி)



தோற்றம் - 10.10.1951
மறைவு - 11.11.2017

நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், மண்கும்பான், கோப்பாய் ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்ட தாமோதரம்பிள்ளை தர்மகுலசிங்கம் 11.11.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோப்பாய் மேற்கு,**
**கோப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



### முருகேசு சரவணமுத்து

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டியையும் பிரான்ஸ் Bobiny ஐ வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சரவணமுத்து 10.11.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**செல்லத்துரை வீதி,**
**சாங்கரத்தை,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்: வை.குணரத்தினம்**
**(குணம் மைத்துனர்)**
(மீராம்பாள் ரான்ஸ்போட்)

**ராசாத்தி - 0033148022918 / குணம் - 077 844 6071**

### திருமதி ஏஞ்சல் மேரி புனிதராக்கினி டொன்பொஸ்கோ



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஏஞ்சல் மேரி புனிதராக்கினி டொன்பொஸ்கோ நேற்று (12.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரோப்பர் - மேரி மார்க்கிரட் தம்பதிகளின் அன்பு மகளும் டொன்பொஸ்கோவின் (ஓய்வு பெற்ற நூலகர் யாழ் மாநகரசபை) அன்புத் துணைவியும் காலஞ்சென்ற பசில் சுரேந்திரன் மற்றும் பமிலா லோஜினி(சித்த மருத்துவர்), ஹில்ரன் நரேந்திரன் (வைத்தியர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற வில்லியம்ராஜா மற்றும் பேரின்பம், திலகம், நஞ்சிதம் (தாதிய உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை), அருட்சகோதரி மேரி நிரோஷா (அதிபர் புனித மரியாள் கல்லூரி திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தயாளினி, அருள்நேசதாசன், ஹரீனா ஆகியோரின் மாமியாரும் அன்றியாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பமிலா பவனம்,**
**சில்லாலை.**

**தகவல்:**
**கணவர், பிள்ளைகள்.**

### திருமதி பிறேமகுமாரி வாமதேவன்



சீனிவாசகம் வீதி, கொட்டடி யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும், அராலி மத்தி வட்டுக்கோட்டையை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி பிறேமகுமாரி வாமதேவன் (11.11.2017) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜாசிங்கம் கனகேஸ்வரி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற வர்களான துரைச்சாமி அம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும் வாமதேவன் (சமாதான நீதிவான் அராலி மத்தி) அவர்களின் அன்பு மனைவியும் லிங்கேஷன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), அகிலேசன் (ஆசிரியர், யா/திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாட சாலை), கீர்த்தனா (உத்தியோகத்தர் இந்திய விசா அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் சங்கீதாவின் அன்பு மாமியும் கணஷியாவின் அன்புப்பேர்த்தியும் ஜெயகாந்தகுமார் (கனடா) வின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2017)திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல்தகனக்கிரியைக்காக அராலி பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**077 8057745, 077 9370 208** **குடும்பத்தினர்.**

* சர்ச்சைக்குரிய கட்டளைத் தளபதிகளுக்குப் பதவி
* நுழைவிசைவு மறுக்கும் நாடுகளிடம் அனுமதி கோர முடிவு

# இராணுவ ஆதரவைத் திரட்டுகிறார் மைத்திரி



கொழும்பு, நவ. 13

இராணுவத்தினரினதும், அவர்களது குடும்பத்தினரதும் ஆதரவைத் திரட்டும் நடவடிக்கையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீவிரமாக ஈடுபட்டுள்ளார் என்று அறியமுடிகின்றது.

இதன் ஓர் அங்கமாகவே கட்டளை அதிகாரிகள் உட்பட இராணுவத்தில் உயர்பதவிகளை வகிக்கும் 350 பேருடன் அவர் பேச்சு நடத்தியிருந்தார்.

'இலங்கைப் படையினரும், அவர்களது குடும்பத்தினரும் அரசு மீது கடும் அதிருப்தியில் இருக்கின்றனர். போர்க்குற்ற நீதிமன்றக் கதையால் அவர்கள் பெரிதும் குழப்பிப் போயுள்ளனர். எதிர்காலத்தில் நெருக்கடி ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சுகின்றனர். அரசுக்கு எதிராக வாக்களிக்கும் நிலைப்பாட்டிலேயே அவர்கள் இருக்கின்றனர்' என்று அரச புலனாய்வுப் பிரிவால் அண்மையில் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிக்கையொன்று கையளிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து படையினர் மத்தியில் உருவாகியுள்ள அச்சத்தைப் போக்கவும், அவர்களின் குடும்பத்தினருக்கு நம்பிக்கையளிக்கும் வகையிலான செயற்பாடுகளை உடனடியாக முன்னெடுப்பதற்குத் தீர்மானித்த அரச தலைவர் மைத்திரி, இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரிகளை நேரில் சந்திக்கவும் திட்டமிட்டார்.

அதேவேளை, இறுதிக்கட்டப் போரின்போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு விரைவில் இராணுவத்தில் உயர்பதவியொன்றையும் வழங்குவதற்கு அரச தலைவர் உத்தேசித்துள்ளார் என்றும், போரில் உயிரிழந்தவர்களின் பெயரில் புதிய கிராமங்கள் உருவாக்குவது தொடர்பில் ஆலோசனை நடத்திவருகின்றார் என்றும் தெரியவருகின்றது.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஏற்கனவே இதற்குரிய முன்மொழிவை அரச தலைவரிடம் தெரிவித்துள்ளார் எனவும் அறியமுடிகின்றது.

முப்படைகளின் பிள்ளைகளுக்கான சலுகைத்திட்டங்கள் உட்பட மேலும் சில திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு அரச தலைவர் உத்தேசித்துள்ளார். (5)



## கணக்கு விவரங்கள் சபையில் சமர்ப்பிப்பு

கொழும்பு, நவ. 13

831அரசநிறுவனங்களின் கணக்கு விவரங்கள் அடங்கிய விரிவான அறிக்கை நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாகப் பொதுக் கணக்குகள் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

831 அரச நிறுவனங்களின் 2015 ஆம்ஆண்டுக்கான கணக்காய்வு விவரங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2016ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குகள் பற்றிய அறிக்கை இந்த வருட இறுதிக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் - என்றார். (5)

## மரண அறிவித்தல்



### சாந்தசீலி (சாந்தி) வல்லிபுரம்

நுணாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சாந்தசீலி (சாந்தி) வல்லிபுரம் 09.11.2017 அன்று இந்தியாவுக்கு விஜயம் செய்தநிலையில் அங்குகர்த்தருக்குள்நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையாவல்லிபுரம்-பாக்கியம்வல்லிபுரம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றதிருமதி கிருபா மற்றும்திருச்சுதன், தயாகரன், அருள்வதி ஆகியோரின் சகோதரியும், செல்வி செல்வராணி (சாந்தா) யின் உடன்பிறவாச் சகோதரியும், காலஞ்சென்ற பவசிங்கம் மற்றும் றஜி, மனோ, சுஜந்த இராஜா ஆகியோரின் மைத்துனியும், சர்மிலி, கோசலி, பென்ஜோ, ஏஞ்சோ, ஜவன், நோயல், சகான், செமரா, செகாந்த் ஆகியோரின் பெரியம்மாவும் சித்தியும், யோசுவா, விக்ரர், பெரின் ஆகியோரின் மாமியாரும், சிநேகா, நிக்கிற்றா, ஆராதனா, ஆரண்யன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க வழிபாடு பற்றி பின்னர் அறியத்தரப்படும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**076 863 3517**

## மூன்று மாதங்களுக்குத் தேவையான எரிபொருளை களஞ்சியப்படுத்த முடிவு

மூன்று மாதங்களுக்குத் தேவையான எரிபொருள் களஞ்சியப்படுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் 15 முதல் 20 நாள்களுக்குப் போதுமான அளவு எரிபொருளே இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தது. கொலன்னாவ எரிபொருள் களஞ்சியசாலையில் பழுதடைந்துள்ள இரண்டு எரிபொருள் தாங்கிகள் உடனடியாக மறுசீரமைக்கப்பட உள்ளன.

இனி வரும் காலங்களில் சுமார் மூன்று மாத காலத்துக்குத் தேவையான எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (5)

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லதங்கம் அம்பலவாணர்



உசனைப் பிறப்பிடமாகவும், விடத்தற்பளையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நல்லதங்கம் அம்பலவாணர் நேற்று (12.11.2017) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரியும், காலஞ்சென்றவர்களான இராமநாதர் - உமையாத்தை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அம்பலவாணரின் அன்பு மனைவியும், நல்லதம்பியின் சகோதரியும், பாக்கியதேவி (சுவிஸ்), காலஞ்சென்ற மல்லிகாதேவி (டென்மார்க்) மற்றும் ஜெயதேவன் (நோர்வே), நகுலாதேவி சத்தியாதேவி (டென்மார்க்), ஜெயதீபா (கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும், சிவபாதம், ஜெயராஜா, சுலோசனாதேவி, கந்தசாமி, பிறேமானந்தம், ராஜேந்திரம் ஆகியோரின் அன்பு மாமியும், பராசத்தியின் மைத்துனியும், டிலக்ஷி, சகான், இந்துஜா - சாரங்கன், சாரங்கி, கிரிசாந், செந்தூரன் - துவாரகா, செந்தூபியா - அச்சுதன், பிருந்தூபியா - வசந்தறூபன், துவாரகன், கஸ்தூரியா - தனுசன், பிரசீத், பிரீத்தி, குலேன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், லாஷியா, லாதுசா, அகரன், ஸதுர்யா, ஆருக்சன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.11.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் விடத்தற்பளை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசன் ஈசக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விடத்தற்பளை,**
**மிருசுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 615 3551**



# வவுனியாவில் திருட்டு: சந்தேக நபர்கள் கைது

வவுனியா,நவ.13

வவுனியா ஈச்சங்குளம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மகாகணபதிக் கிளையில் திருட்டில் ஈடுபட்ட சந்தேக நபர்களைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

திருட்டில் ஈடுபட்டவர் நால்வர் கல்மடு வீதியூடாகத் தப்பிச்சென்ற போது கல்மடு கட்டடையர்குளத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பூட்டியிருந்த கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த உலர் உணவுப் பொருள்கள், மீள்நிரப்பு அட்டைகள், ஒருதொகைப் பணம் என்பன திருடப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ஒரு லட்சம் பெறுமதியான திருட்டுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி4)

# கிழக்கின் இந்து எழுச்சி விழா



மட்டக்களப்பு,நவ.13

கிழக்கின் இந்து எழுச்சி விழா நேற்று நடைபெற்றது.

கிழக்கிலங்கை இந்து சமய சமூக அபிவிருத்திச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட வெல்லாவெளியில் அமைந்துள்ள கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

போரதீவுப் பற்றுக் கல்விக் கோட்டத்தில் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் சித்தி பெற்ற மாணவர்கள், பெற்றோர்கள், அவர்களைக் கற்பித்த ஆசிரியர்கள், மற்றும் பாடசாலை அதிபர்கள் உள்ளிட்டோர் ஓய்வு பெற்றுச் சென்ற போரதீவுப் பற்றுக் கோட்டக்கல்வி அதிகாரி பூ.பாலச்சந்திரன் உள்ளிட்ட பலர் கௌரவிக்கப்பட்டனர்.

பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட இந்து இளைஞர் மன்றங்களுக்கு இசைக்கருவிகளும், கூட்டுப் பஜனை பாடல் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், இந்து மதத் தலைவர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற-ரி5)

# அரசியல் பிழைப்புக்காக இனவாதம் பேசுகின்றனர்

## சாடுகின்றார் கிழக்கு முன்னாள் முதலமைச்சர்

அம்பாறை, நவ.13

இனவாதத்தைத் தூண்டி அரசில் பிழைப்பு நடத்த சந்தர்ப்பம் கிட்டவில்லை என்ற வக்கிரத்தால் சிலர் இப்போது பிதற்றுகிறார்கள்.

இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமத் தெரிவித்தார்.

ஏறாவூர் மீராகேணி மாக்கான் மாக்கார் வித்தியாலயத்தில் ஏறாவூர் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் தமிழ் மாணவர்கள் சுமார் 5 ஆயிரம் பேருக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

இனவாதத்தைச் சிந்தித்துச் செயற்பட்டு அரசியல் செய்கின்ற வக்கிரபுத்திக் கலாசாரம் நிலவிய நிலையில் தமிழர்களும், முஸ்லிம்களும் சிங்களவர்களும் இணைந்த மாகாண சபை ஆட்சியை உருவாக்கினோம். அதை இனவாதிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

எங்களுடைய ஆட்சியில் கிழக்கு மாகாணத்தின் எந்தவொரு மூலை முடுக்கிலும் இனவாதம் என்ற பேச்சுக்கே சிறிதளவும் இடமில்லாமல் மூவினங்களும் இணைந்து ஆட்சி செய்திருந்தோம். எமது ஆட்சியிலே நாங்கள் இன பேதம், அரசியல் வேறுபாடு, மொழிப் பாகுபாடு, பிரதேச ஓரங்கட்டல் என்று எல்லாவற்றையும் தகர்த்தெறியப்பட்டது.

வாழைச்சேனையில் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் பிரதேசத்தில் இடம்பெற்ற ஒரு பிரச்சினைக்கு அவர் என் மீது குற்றம் சாட்டுகின்ற ஒரு விடயம் கண்டிக்கத் தக்கது.

அரசியல்வாதிகள் மீண்டும் மீண்டும் இனவாதத்தைத் தூண்டி தமிழ், முஸ்லிம் ஐக்கியத்தைச் சீர்குலைப்பார்களாயின் அத்தகைய சுயநல அரசியல்வாதிகளை மக்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும்.

வடக்குக், கிழக்கிலே தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்துதான் உரிமைகளைப் பெற்றுப் பகிர்ந்து வாழ வேண்டும் என்பதை இனவாதத்தைத் தூண்டும் சுயநல அரசியல்வாதிகள் புரிந்துகொள்ள வேண்டும். என்றார். (ற-ரி4)

# ஆணின் சடலம் கங்கையில் மீட்பு

கொழும்பு,நவ.13

பலாங்கொடை, ஹபுகாஹகும்புர வளவை கங்கையில் ஆணொருவரின் சடலமொன்று நேற்று மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் பண்டாரவளையை சேர்ந்த திஸாநாயக்க முதியன்சலாகே சந்திரபால என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை (வயது 49) எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரைக் கடந்த சில தினங்களாக காணவில்லை என அவரின் உறவினர்கள் எல்ல பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. சடலம் இருந்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# உயிரிழந்த நிலையில் 7 வயது சிறுவன் மீட்பு

ஹற்றன், நவ.13

போகாவத்தை ஓயாவில் 6 வயதுச் சிறுவன் ஒருவன் சடலமாக மீட்கப்பட்டார்.

போகாவத்தைத் தோட்டத்தைச் சேர்ந்த தரம் 1இல் கல்வி பயிலும் 6 வயதுடைய ராஜேந்திரகுமார் அஷ்வின் என்ற சிறுவனே சடலமாக மீட்கப்பட்டார்.

வீட்டிலிருந்த சிறுவன் நேற்றுமுன்தினம் காணாமல் போன நிலையில் உறவினர்களும் தோட்ட மக்களும் தேடுதலில் ஈடுட்டனர். சிறுவன் வீட்டின் அருகிலுள்ள போகாவத்தை ஓயாவில் சடலமாக காணப்பட்டான் எனத் தெரிவிக்கப்பட்டது.

சடலத்தை கண்ட பிரதேசவாசிகளும் உறவினர்களும் திம்புள்ள பத்தனை பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். சடலத்தை பொலிஸார் மீட்டனர்.

கொய்யாப்பழம் பறிக்கச் சென்ற போதே இந்தச் சிறுவன் தவறி ஆற்றில் வீழ்ந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விசாரணையைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)

# சைட்டம் தொடர்பில் நீதிமன்றுக்கு தெரியப்படுத்துக

## வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, நவ.13

சைட்டம் நிறுவனம் தொடர்பான அரசின் நிலைப்பாட்டை அரசதலைவர் உடனடியாக உயர்நீதிமன்றத்தில் தெரியப்படுத்த வேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான விடயங்கள் அரச தலைவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று அந்தச் சங்கத்தின் உதவிச் செயலாளர் நலின் டி சில்வா நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

சைட்டம் நிறுவனத்தை இரத்துச் செய்வதாக அரசு வாக்களித்துள்ள நிலையில் அதை உயர்நீதிமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, மாலபே நெவில் பெர்ணான்டோ மருத்துவமனை, முல்லேரியா மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டு போதனா மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)



கிளிநொச்சியில் உள்ள மூன்று மாவீரர் துயிலுமில்லங்களிலும் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கனபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மக்கள், பொது அமைப்புக்கள், பல்கலைக் கழக மாணவர்கள், அரசியல் கட்சி உறுப்பினர்கள் எனப் பலர் இணைந்து துப்புரவாக்கல் பணிகளை மேற்கொண்டனர். எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நாள் நினைவேந்தல்கள் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் கடைப்பிடிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ற)









## மீன்களுடன் பேசும் ரோபோ

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த நிறுவனமொன்று மீன்களிடம் பேசும் ரோபோவைக் கண்டுபிடித்துள்ளது. ஜெனீவாவில் இயங்கும் அந்த நிறுவனம் பல வருட ஆராய்ச்சிக்கு பின் இதை நிகழ்த்தியுள்ளது.

இந்த 'ரோபோ' மிகவும் சிறியதாக மீன் வடிவத்திலேயே உள்ளது. மீன்களை எளிதில் ஏமாற்றும் வகையில் அது வடிவமைக்கப்பட்டுள்ளது. அதில் சூரிய ஒளி மூலம் இயங்கும் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. (ம)



## ட்ரம்பின் சீன பயணம் முழுமையான வெற்றி

ட்ரம்பின் சீன பயணம் வெற்றியடைந்துள்ளதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க அதிபராக பொறுப்பேற்ற பின்னர் ட்ரம்ப் முதன் முறையாக 3 நாள்கள் பயணமாக அண்மையில் சீனாவுக்குச் சென்றார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது. ட்ரம்ப் - சீன அதிபர் ஜின்பிங் இடையிலாச சந்திப்பின்போது. அணு ஆயுத சோதனையில் ஈடுபட்டு வரும் வடகொரியாவால் அந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்றம் குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. ஏகப்பட்ட ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன. இந்த நிலையில் ட்ரம்பின் சீன பயணம் வெற்றியடைந்துள்ளதாக சீனாவின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

'அமெரிக்க அதிபர் தேர்தல் நேரத்தில். சீனாவுக்கு எதிராக ட்ரம்ப் மேற்கொண்ட பரப்புரையால் சீன மக்கள் கவலை கொண்டிருந்தனர். ட்ரம்பின் வருகையால் தற்போது ஆச்சரியத்தில் ஆழ்ந்துள்ளனர்' என்று சீன அரச ஊடகமொன்று செய்தி வெளியிட்டது. (ம)



# இராணுவத்தின் மூலம் சிரியாவில் தீர்வில்லை

## ட்ரம்ப் - புடின் கூட்டாக அறிவிப்பு

ஹனோய், நவ. 13

இராணுவத்தின் மூலம் சிரியாவில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ரஷ்ய அதிபர் புடின் இருவரும் கூட்டாக அறிவித்தனர்.

ஆசியபசிபிக் பொருளாதாரக் கூட்டமைப்பின் இரண்டு நாள் மாநாடு வியாட்நாமில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த மாநாட்டில் ட்ரம்பும், புடினும் கலந்துகொண்டனர். அங்குவைத்தே 'சிரியாவில் நடக்கும் உள்நாட்டுப் போருக்கு இராணுவத்தின் மூலம் தீர்வு காண முடியாது' என கூட்டறிக்கை வெளியிட்டுள்ளனர்.

சிரியாவில் உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது. அதிபர் அல் அசாத்தின் ஆட்சியைக் கவிழ்க்க கிளர்ச்சியாளர்கள் கடந்த 6 ஆண்டுளாக ஆயுதம் ஏந்தி போராடி வருகின்றனர். இதனால், கிளர்ச்சிப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்றவை உள்ளன. அதே நேரம், அதிபர் ஆசாத்துக்கு ரஷ்யா, ஈரான் போன்றவை ஆதரவாக உள்ளன. கிளர்ச்சிப் படைகளுக்கு எதிராக சிரிய இராணுவத்துடன் இணைந்து ரஷ்ய இராணுவமும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. சிரிய விவகாரம் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான பலப்பரீட்சையாகவும் மாறியுள்ள நிலையில் இரு நாடுகளின் அதிபர்களும் இவ்வாறு தெரிவித்தமை ஆர்வலர்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறது.


ட்ரம்ப் - புடின் இருவரும் வெ
யிட்ட கூட்டறிக்கையில், 'சிரி
பிரச்சினைக்கு இராணுவம் மூ
தீர்வு காணமுடியாது.


சிரியாவின் இறையாண்மை, சு
திரம், ஒற்றுமை, ஒருமைப்பா
போன்றவைக்கு மதிப்பளிக்க மு
செய்யப்பட்டுள்ளது. சிரியாவி
உள்ள ஐ.எஸ். ஆயுதக் குழுவைக் கூட்டாக இணைந்து ஒழிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிரியாவில் மோதலில் ஈடுபட்டுள்ள இருதரப்பும் ஜெனீவாவில் நடக்கும் ஐ.நா. அமைதி பேச்சில் பங்கேற்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## மகனைக் கொன்றவரை மன்னித்தருளிய தந்தை

### அமெரிக்காவில் உருக்கம்





அமெரிக்காவில் தந்தை ஒருவர், தன் மகனைக் கொன்ற வழக்கில் 31 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்ற குற்றவாளியை கட்டிப் பிடித்து ஆறுதல் கூறிய சம்பவம் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் கடந்த 2015ஆம் ஆண்டு, சலாவுதின் ஜித்மவுத் (22) என்ற இளைஞர் 'பிசா டெலிவரி செய்துவிட்டு வரும்போது வழிப்பறிக் கும்பலால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து நடந்த விசாரணையில் ரெல்போர்ட் என்பவர்தான் முக்கிய குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டு அவருக்கு 31 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனை விதிக்கப்பட்ட நாளன்று சலாவுதினின் தந்தை அப்துல் முனிம் சோபத்தும் நீதிமன்றத்துக்குச் சென்றிருந்தார். அப்போது அவர் உரையாற்றுகையில், "ரெல்போர்ட் நான் உன்னை மன்னிக்கிறேன். எனக்கு உன் மீது கோபம் கிடையாது. உன்னைத் தவறாக வழி நடத்திய இந்தக் கொடூரமான குற்றத்தை செய்யத் தூண்டிய அந்தத் தீய சக்தியின் மீதுதான் எனக்குக் கோபம்" என்றார்.

தொடர்ந்து அவரது இருக்கையிலிருந்து எழுந்து நீதிபதியின் அனுமதியோடு ரெல்போர்ட்டை கட்டிப்பிடித்து அவருக்கு ஆறுதல் கூறினார். இந்தக் காட்சியை கண்ட நீதிபதி தனது உணர்வை கட்டுப்படுத்த முடியாமல் இருக்கையிலிருந்து எழுந்து கொண்டார்.

அப்துல் முனிம் சொன்ன ஆறுதல் வார்த்தைகளால் தன்னை அறியாமல் ரெல்பேட்டின் கண்கள் கலங்கின. "அந்த நாளில் நடந்தவைக்களுக்காக உங்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்." என்று கண்களில் கண்ணீர் நிரம்ப மன்னிப்புக் கேட்டார் ரெல்போர்ட். (ம)

## கட்டலோனியத் தலைவர்களை விடுவிக்கக்கோரி பார்சிலோனா நகரில் மிகப்பெரியளவில் பேரணி

மட்ரிட், நவ. 13

ஸ்பெய்ன் அரசால் கைது செய்யப்பட்ட கட்டலோனியத் தலைவர்களை விடுவிக்ககோரி பார்சிலோனாவில் நேற்று முன்தினம் மிகப்பெரும் பேரணி நடத்தப்பட்டது.

ஸ்பெய்னின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மாகாணம் கட்டலோனியா. ஸ்பெய்னின் வருவாய், முதலீடு, சனத்தொகை, சுற்றுலாப் பயணிகளின் வருகை என்று அத்தனை விடயங்களிலும் கட்டலோனியாவின் பங்கு மிகவும் உச்சம். இதனால் கடந்த ஐந்து வருடங்களாக அங்கு தனிநாட்டுக் கோரிக்கைகளும் வலுப்பெற்றுள்ளன. இது தொடர்பான வாக்கெடுப்பையும் கடந்த மாதம் முதலாம் திகதி கட்டலோனியா நடத்தியது. பதிவான 2.3 மில்லியன் வாக்குகளில் 90 சதவீதமானவை பிரிவதற்கு ஆதரவாக அமைந்தன. இந்த நிலையில் கட்டலோனியாவை கடந்த வாரம் தனிநாடாக அறிவித்தது கட்டலோனிய மாநில அரசு.

இந்த அறிவிப்பு வெளிவந்த அடுத்த சில மணிநேரங்களில் ஸ்பெய்னின் மத்திய அரசான மட்ரிட், கட்டலோனிய மாநில ஆட்சியைக் கலைத்து உத்தரவிட்டது. மட்டுமல்லாமல் கட்டலோனியத் தலைவர்கள் சிலரையும் கைதுசெய்தது. இந்த நிலையில் கட்டலோனியத் தலைவர்களை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி பார்சிலோனாவில் நேற்று முன்தினம் பேரணி நடத்தப்பட்டது. (ம)





மியன்மார் அரசின் இனச் சுத்திகரிப்பில் இருந்து பங்களாதேஷுக்குச் செல்லும் அகதிகளின் எண்ணிக்கை தற்போதும் மிகையாகத் தொடர்ந்து வருகிறது. நேற்றுமுன்தினமும் வெற்றுக் கான்களால் கட்டப்பட்ட கட்டுமரம் ஒன்றில் சுமார் 30 வரையிலான ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்குச் சென்றுள்ளனர். பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸால் இந்தப் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ம)

# வடகொரியாவுக்கு எதிராக உடனடியாகத் திரளுங்கள்; ஆசிய பசிபிக் பிராந்திய நாடுகளுக்கு ட்ரம்ப் அழைப்பு

ஹனோய், நவ. 13

"வடகொரியாவுக்கு எதிராக ஆசிய பசிபிக் பிராந்திய நாடுகள் அணிதிரள வேண்டும்" என்று அழைப்பு விடுத்துள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

வியட்நாமில் ஆசிய பசிபிக் ஒத்துழைப்பு மாநாடு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார்.



"ஒரு சர்வாதிகாரியின் வன்முறை, ஆக்கிரமிப்பு மற்றும் அணு ஆயுத அச்சுறுத்தலின் திரிக்கப்பட்ட கற்பனையில் இந்த பிராந்தியமும், இங்குள்ள அழகான மக்களின் எதிர்காலமும் பிணைக்கைதியாக சிக்கிவிடக்கூடாது. பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை நோக்கி வடகொரியா மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையையும் மிகப்பெரிய அபாயமாக எடுத்துக்கொண்டு அந்த நாட்டுக்கு எதிராக இந்தப் பிராந்திய நாடுகள் ஒன்றிணைய வேண்டும். நியாயமான பரஸ்பர வர்த்தகத்தைக் கொண்டிருப்பதால் ஆசிய பசிபிக்பொருளாதார மன்றத்துடன் இணைந்து வர்த்தகத்தில் ஈடுபட அமெரிக்கா தயாராகிவிட்டது. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் எந்த நாட்டுடனும் பரஸ்பர மரியாதை மற்றும் பயன்கள் அடிப்படையில் வர்த்தகத்துக்குத் தயார். பிற நாடுகள் அல்லது பிற மனிதர்களுடன் அமெரிக்கா எப்போது வர்த்தக உறவில் ஈடுபடுகிறதோ, அது முதல்எங்கள்கூட்டாளிகள்விதிமுறைகளை உண்மையாக கடைப்பிடிக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்ப்போம். நீண்டகால வர்த்தக முறைகேடு களை அமெரிக்கா ஒருபோதும் சகித்துக்கொள்ளாது" என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார். (ம)

# லெபனானுக்கு எதிராக போரை அறிவித்துள்ளது சவூதி

## ஹிஸ்புல்லா தலைவர் குற்றச்சாட்டு

ரியாத், நவ. 13

லெபனான் நாட்டுக்கு எதிராக சவூதி அரேபியா போரை அறிவித்துள்ளது" என்று ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் குற்றம்சாட்டியுள்ளார்.

லெபனான் தலைமை அமைச்சர் சாத் ஹரிரி, சமீபத்தில் சவூதி அரேபியா சென்று அங்கிருந்தபடியே தான் பதவி விலகுவதாக தெரிவித்தார். ரியாத்தில் இருந்து ஒளிபரப்பான தொலைக்காட்சி ஒன்றில் தோன்றி பேசிய அவர், தனது உயிருக்கு ஆபத்து இருப்பதால் பதவியில் இருந்து விலகுவதாகக் கூறினார். ஆனால் சவுதி அரசு கட்டாயப்படுத்தியதால்தான் ஹரிரி பதவி விலகியதாக, லெபனானின் பலம் வாய்ந்த ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா குற்றம்சாட்டினார். மேலும், அவர் நாடுதிரும்பினால்தான் உண்மை தெரியவரும் என்றும், அதுவரை மக்கள் அமைதி காக்க வேண்டும் என்றும் கேட்டிருந்தார். தலைமை அமைச்சர் ஹரிரி பதவி விலகலை அதிபர் மைக்கேல் அவுன் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் நாடுதிரும்ப வேண்டும் என்று அதிபரும் மூத்த அரசியல் தலைவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆனால், ஹரிரி இதுவரை எதுவும் பேசாமல் மௌனமாக உள்ளார்.



ஹரிரி பதவி விலகலை அறிவித்து சில நாட்கள் கடந்த நிலையில், சவூதி அரேபியா மீது மீண்டும் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் ஹசன் நஸ்ரல்லா. "லெபனான் நாட்டுக்கு எதிராக சவூதி அரசு போரை அறிவித்துள்ளது. சாத் ஹரிரியின் விருப்பத்திற்கு மாறாக சவூதி அரசு அவ ரைப் பிடித்து வைத்துள்ளது. லெபனானுக்கு எதிராக இஸ்ரேலை சவூதி தூண்டுகிறது. இது மிகவும் ஆபத்தான விடயம். லெபனானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையில் ஈடுபட, இஸ்ரேலுக்கு பில்லியன் கணக்கிலான பணத்தை கொடுக்க சவூதி தயாராகி வருகிறது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஹிஸ்புல்லா அமைப்புக்கு ஈரான் ஆதரவு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


# ரஷ்யாவின் தாக்குதலில் 26 பேர் பரிதாபச் சாவு

மொஸ்கோ, நவ. 13

சிரியாவில் ரஷ்யா நடத்திய வான் தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவின் சில பகுதிகளை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது; அந்த அமைப்புக்கு எதிராக ரஷ்யா வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகிறது. ரஷ்யா நேற்றுமுன்தினம் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 26 பேர் உயிரிழந்தனர்.

அவர்களில் ஒன்பது பேர் குழந்தைகள். இந்தத் தாக்குதல் இலக்குத் தவறிய தாக்குதல் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)





உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# வேண்டாமே தனியார் வகுப்புகள்

அண்மைக் காலங்களில் மிக உருப்படியான ஒரு கருத்தை, எதிர்காலச் சந்ததியின் நலன் கருதி ஒரு அமைச்சர் கூறியிருக்கிறார் என்றால் அது விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரதான். தனியார் வகுப்புக்களை (ரியூசன்களை) தடைசெய்யவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார் அவர். நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் மீது உரையாற்றுகையில் அவர் இந்த யோசனையை முன்வைத்தார்.

பா டசாலைகளை இலக்கு வைத்து நடைமுறைப்படுத்தப்படும் நல்ல பல திட்டங்களின் உண்மையான பயனை அடையவேண்டும் என்றால் தனியார் வகுப்புக்களை இல்லாமல் செய்யவேண்டும், அல்லது பாடசாலைகளை மூடிவிட்டுத் தனியார் வகுப்புகளை மாத்திரம் நடத்தவேண்டும். அதுவும் முடியாது போனால் தனியார் வகுப்புகளை நடத்தும் சிறந்த ஆசிரியர்களைப் பாடசாலைக்குள் ஈர்க்கவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார் அவர்.

உண்மைதான். தனியார் வகுப்புகளின் ஆதிக்கம் அளவு மீறிச் சென்றுகொண்டே இருக்கின்றது. கல்வியில் பின்னடைவுள்ள, மெல்லக் கற்கும் திறன்கொண்ட பிள்ளைகளுக்கே முதலில் தனிப்பட்ட வகுப்புக்கள் தேவையாக இருந்தன. ஆனால் இன்று நிலமை அப்படியல்ல. நன்றாகப் படிக்கக்கூடிய பாடசாலைகளில் கல்வியில் முன்னணியில் இருக்கக்கூடிய பிள்ளைகள்கூட தனியார் வகுப்புகளுக்குச் செல்லாமல் கல்வியில்லை என்று ஆகிவிட்டது நில்மை.

பிள்ளைகள் தனியார் வகுப்புகளில் கற்றுக்கொள்கிறார்கள் தானே என்ற அலட்சியப்போக்கோடு பாடசாலைகளில் கற்றலை ஒழுங்காகச் செய்யாத ஆசிரியர்களையும் தன்னிடம் தனிப்பட்ட வகுப்புக்களுக்கு வரவேண்டும் இல்லையேல் பரீட்சையில் புள்ளிகளைக் குறைத்துவிடுவேன் என்று தனது பாடசாலை மாணவர்களையே மிரட்டும் ஆசிரியர்களையும் கூட இந்த தனியார் வகுப்புக் கலாசாரம் உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. சில முன்னணிப் பாடசாலைகளின் உயர் தரக் கல்வியும் பெறுபேறுகளும் தனியார் வகுப்புக்களை நம்பித்தான் இருக்கின்றன என்கிற அவலம்கூட அவதானிக்கப்பட்டுள்ளது.

இப்படிப் பாடசாலைக்கல்வியையே பாழாக்கும் மோசமான பழக்கமாக தனியார் வகுப்புக் கலாசாரம் மாறிவிட்டது. பாடசாலைக் கல்விக்கு உதவிகரமாக ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தனியார் வகுப்புக்கள் இன்று உபத்திரமாக மாறி நிற்பது கண்கூடு. வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தனியார் வகுப்புகள் எடுத்திருக்கும் மற்றொரு பரிமாணம் இன்னும் கவலைக்குரியது. இரவு 8 முதல் 9 மணிவரையும் இத்தகைய வகுப்புகள் நடக்கின்றன. பிள்ளைகள் விளையாடுவதற்கோ மற்றைய கல்விசாரா பாடசாலை நடவடிக்கைகளில் ஈடுபடவோ நேரம் இன்றி மாணவர்களைப் பிழிந்தெடுக்கும் இந்தத் தனியார் வகுப்புக் கலாசாரம் பாடசாலைக் கல்வியை மட்டும் பாதிக்கவில்லை. அதையும் தாண்டித் தன் தாக்கத்தைச் செலுத்துகிறது.

தனியார் வகுப்புக் கலாசாரத்தால் ஏற்படும் சமூக மற்றும் பொருளாதாரத் தாக்கம் மிக அதிகம். மூன்று பிள்ளைகளைக் கொண்ட ஒரு சராசரிக் குடும்பத்திற்கு ஆகும் தனியார் வகுப்புக்கட்டணச் செலவு பெரும் பொருளாதாரச் சுமை. அதனைச் சமாளிப்பதற்கு அந்தக் குடும்பம் வேறு வருமான வழிகளைத் தேடவேண்டியிருப்பதுடன், வருமான அதிகரிப்புக்காக ஓடி ஓடி உழைப்பதில் கவனத்தைக் குவிப்பதால் குடும்பம் மற்றும் பிள்ளைகள் மீதான கவனம் குறைகிறது.

ஓடி ஓடி உழைக்கவேண்டியிருப்பது மட்டுமல்ல பிள்ளைகளை இந்தத் தனியார் வகுப்புகளுக்கு ஏற்றி இறக்குவதிலேயே தாய் தந்தையரின் நேரமும் சக்தியும் பெருமளவில் விரயமாகின்றன. வடக்கு கிழக்கிலே இதையும் தாண்டி அரச உத்தியோகத்தில் இருப்பவர்கள், அதிலும் கணவன் மனைவி இருவருமே அரச உத்தியோகத்தில் இருந்துவிட்டால் பிள்ளைகளின் தனியார் வகுப்புகள் அவர்களின் வேலை நேரத்தையும் காவு வாங்குகின்றன. அதன் மூலம் அரச அலுவலகங்களின் செயற்றிறனையும் பாழாக்குகின்றன.

இப்படி எல்லா வழிகளிலும் கடும் நெருக்குதலைக் கொடுக்கும் தனியார் வகுப்புக்களை இல்லாதொழிப்பதே சிறந்தது. அதன் மீது அரசு கவனம் செலுத்துவது மிக மிக அவசியம். அதேநேரத்தில் நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் சிற்பிகள் என்ற வகையில் பாடசாலை ஆசிரியர்களின் வகிபாகமும் முக்கியத்துவம் உணரப்படுவதும் அவசியம். அவர்களில் பலரால் இன்று அரச பாடசாலையில் பெறும் சம்பளத்திலும் பார்க்க தனியார் வகுப்புகளின் மூலம் அதிகம் சம்பாதிக்க முடிகிறது. இத்தகைய பரிதாப நிலையில் ஆசிரியர்கள் இருக்கும்போது வெறும் சட்டங்களால் மட்டும் தனியார் வகுப்புகளை ஒழித்துவிட முடியாது. முதலில் ஆசிரியர்களின் சம்பளங்களை ஏனைய தொழிற்துறைகளிலும் பார்க்க அதிகமானதாக்கி, ஆசிரியத் தொழிலை சமூக மதிப்பு மிக்கதாக மாற்ற அரசு முன்வரவேண்டும். அதன் மூலமே சிறந்த ஆசிரியர்களையும் சிறந்த பாடசாலைக் கல்வியையும் மீண்டும் உருவாக்க முடியும்.



# எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் சகலருக்கும் யதார்த்தத்தை புரிய வைக்கும்

சிங்கள மூலம்
ஆதிபாத (மவ்பிம)
தமிழில் வீ.எஸ்.ரி.

"குடாநாட்டில் இடம்பெறும் பெரிய அளவிலான ஊழல்களைத் தடுத்து நிறுத்துவதன் மூலம் கடந்த ஆறு ஆண்டுகளாக நாட்டில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் போன்று பத்து மடங்கு அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்" என அரச தலைவர் மைத்திரிபால தனது 'மைத்திரி நிர்வாகம்' என்ற தேர்தல் அறிவிப்பின் மூலம் உறுதியளித்திருந்தார். ஆனால் இன்று நாளாந்த உணவுக்கே நாட்டின் மத்திய தர, அடிமட்டப் பொதுமக்கள் சிரமப்படும் நிலையில் கூட்டாட்சி அரசோ, புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் கடும முனைப்புக் காட்டி வருகிறது.

கிறிஸ்துவுக்குப் பின்னர் 64 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதியன்று நள்ளிரவு வேளை உரோமாபுரி நகரில் இருந்த கட்டடங்கள் யாவும் தீப் பற்றிக் கொண்டன. முழு நகரத்தையுமே சாம்பராக்கும் அளவுக்கு தீ வெகுவேகமாகப் பரவிக்கொண்டிருந்தது. அந்த வேளையில் உரோமாபுரியை ஆண்ட மன்னன் நீரோ, தீயை அணைப்பது தொடர்பாக எதுவித முயற்சியும் மேற்கொள்ளாது பற்றியெரியும் நகரத்தைப் பார்த்தவாறு தனது மாளிகையில் இருந்தவாறே வீணை வாசித்துக் கொண்டிருந்தானாம்.

ஒரு வார காலத்தின் பின்னர் எரிந்து நீறாகிப் போன நகரமே மிஞ்சியது. ஓரிரு வாரங்கள் கழித்து நீரோ மன்னன் தனக்குப் புதிய அரண்மனை உட்பட புதிய நகரத்தைக் கட்டியெழுப்பினானாம்.

புதிய மாளிகையொன்றை அமைப்பதற்காகவே நீரோ மன்னன் உரோமாபுரி நகருக்குத் தாமே தீ மூட்டுவித்ததாகவும் அவ்வேளை பேச்சு அடிபட்டதாம்.

கடும் ஆபத்தொன்று கண் முன்னால் தெரிகின்ற நிலையில், அது குறித்து அதிகம் அலட்டிக் கொள்ளாத விதத்தில் செயற்படுவோரை, 'உரோமாபுரி நகரம் பற்றியெரியும்போது வீணை வாசித்துக் கொண்டிருந்த நீரோ மன்னனைப் போன்று செயற்படுகிறார்' என்று விமர்சிப்பதுண்டு. கூட்டாட்சி அரசின் இன்றைய செயற்பாடுகளை உற்றுநோக்கும்போது நீரோ மன்னனது அந்தக் கதையே நினைவுக்கு வருகிறது.

**மகிந்த தரப்பினரது சுவரொட்டி விளம்பர[illegible] இன்று யதார்த்தமா[illegible]யுள்ளது**

கடந்த அரச தலைவர் தேர்தலின்போது மகிந்த தரப்பினர் காட்சிப்படுத்திய பிரபலமான சுவரொட்டி விளம்பரம் "நல்லாட்சிக்கான பொங்கல்" என்ற தலைப்பில் அமைந்திருந்தது. நல்லாட்சியைக் கொண்டு வரப்போவதாகத் தெரிவிக்கும் ஒரு தரப்பினர் கஞ்சி காய்ச்ச அரிசியை மட்பானையுள் இடுவது போன்ற அந்த விளம்பரம் அந்த வேளையில் பொதுமக்கள் பலரது கவனத்தைக் கவர்ந்ததொன்றாக அமைந்தது.

"இவர்கள் பதவிக்கு வந்தால் நாடே கஞ்சியாகத்தான் ஆகும்" என அந்த வேளையில் ஒரு சிலர் விமர்சனம் வெளியிட்டதுமுண்டு.

திட்டமிட்டோ அல்லது எதிர்பாராத விதத்திலோ தெரிவித்த அந்தக் கருத்து தற்போது கண்ணுக்கு முன்னாலேயே நிதர்சனம் ஆகியுள்ளது. தனது ஆட்சியை ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை இன்றைய கூட்டு அரசு பின்னடைவு காணாத விடயமென்று எதுவுமில்லை. முடக்கமடையாத செயற்பாடுகள் எதுவுமில்லை என்னும் அளவுக்கு அரசின் சகல செயற்பாடுகளும் ஆரம்பித்த போதிருந்த வேகம் படிப்படியாகப் பலவீனப்பட்டு கடையில் ஆணி அடித்து இறுக்கியது போன்ற நிலையையே அடைந்துள்ளன. ஒரு வகையில் இந்தக் கூட்டு அரசின் ஆரம்பமே சிக்கல்கள், சிரமங்கள் மத்தியிலேயே ஆரம்பித்தது. அரசில் உயர் பதவிகளை வகிக்கும் எவரும், அவர்கள் ஐ.தேக. கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் சரி, சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் சரி, தத்தமது எதிராளித் தரப்புடனே ஒன்றிணைந்து செயற்பட வேண்டிநேர்ந்திருப்பது பெரும் சிக்கலுக்கும் சிரமத்துக்கும் உரியதாக ஆகிவிட்டுள்ளது.

ஏதோவொரு சந்தர்ப்பத்தில் யதார்த்தத்துக்கு முகம் கொடுத்துத் தானாக வேண்டும். நாட்டு மக்களால் மாற்றத்தை மேற்கொள்ள முயலவில் லையா என்பதை அத்தகைய வேளையில் புரிந்துகொள்ளலாம்.


**மகிந்த தரப்பினரது ஊழல் செயற்பாடுகளே மைத்திரியின் வெற்றிக்கு உதவின**

மகிந்தவின் தலைமையிலான முன்னைய அரசில் மிகப்பெரும் ஊழல்வாதிகள் உயர் பதவிகளை வகித்தனர் என்று குற்றஞ்சாட்டியே இந்தக் கூட்டு அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டது. அது மட்டுமன்றி அத்தகைய ஊழல்வாதிகளைக் கண்டுபிடித்துத் தாம் தண்டிக்க உள்ளதாக வேறு வாயடித்துக் கொண்டது. ஆனால் தற்போது அத்தகைய ஊழல்வாதிகள் இன்றைய கூட்டு அரசுக்கு உள்

ளேயே செயற்படுவதாக பகிரங்கமாகியுள்ளது. பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்ட நூறுநாள் வேலைத் திட்டம் கடைசியில் காற்றுப் போன பலூனின் நிலைக்கு உள்ளாகியுள்ளது.

முன்னைய மகிந்த ஆட்சியில் பெரும் ஊழல் செயற்பாடுகள் இடம் பெற்றிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்போதோ இந்தக் கூட்டரசின் நிர்வாகத்தில் எத்தகைய'ஜில்மால்'விளையாட்டுக்கள் இடம்பெற்றுள்ளன என்பது குறித்து நாட்டுமக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். கூட்டாட்சி நிர்வாகமோ நாட்டில் ஊழல் செயற்பாடுகளை ஒழித்துக்கட்டுவதாகக்கூறியுள்ளது. ஆனாலும் கூட்டாட்சி நிர்வாகத்தில் இடம்பெற்றுள்ள, இடம்பெற்று வரும் ஊழல் செயற்பாடுகள் பற்றிக் கூறியே ஆக வேண்டியுள்ளது. மகிந்த ஆட்சியில் அவர்கள் தமக்கு நெருங்கிய ஆதரவுத் தரப்பினருக்கு உதவிகளை வழங்குகின்றனர் என்று முன்னர் விமர்சிக்கப்பட்டது. ஆனால் தற்போதோ அத்தகைய நெருங்கிய தரப்பினருக்கு இந்த நாட்டையே தாரை வார்த்துக் கொடுக்க முனைவதாக எண்ணத் தோன்றுகிறது.

1956ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி அரசமைத்த காலஞ்சென்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் அரசு ஒரு கூட்டு அரசாகவே அமைந்தது. அதனால் அது உறுதியற்ற ஒரு அரசாக அமைந்தது. அரசின் அமைச்சர்கள் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாய் இருந்ததால் ஒருவரை ஒருவர் விமர்சிக்கும் நிலை நிலவியது. இதனால்கருத்துமோதல்களும், ஒன்றிணைந்து செயற்படும் நிலை இல்லாததொரு சூழலும் நிலவியது. 1959ஆம் ஆண்டின் இறுதிவேளையில், இத்தகைய ஆதரவளித்த உதவும் தரப்புக்களது எண்ணிக்கை



ஏழு ஆக ஆகியிருந்தது. சி.பி.டி. சில்வா, பிலிப் குணவர்த்தன, விஜயாநந்த தகநாயக, ஐ.எம்.ஆர்.ஏ. இரியசொல்ல, கே.எம்.பி.ராஜரத்ன, சீ.ஆர்.வெலிகம்மன, எஸ்.டி.பண்டாரநாயக்க ஆகிய அரசியல் தலைவர்களது தலைமையிலான கட்சிகள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் உச்சம் பெற்றிருந்தன. பண்டாரநாயக்கவால்புறமொதுக்கப்பட இயலாத விஜயாநந்த தகநாயக, சி.பி.டி.சில்வா, ஸ்ரான்லி டி.சொய்சா போன்ற அமைச்சர்கள், பிலிப் குணவர்த்தன மற்றும் வில்லியம் சில்வா ஆகியோரை அரசிலிருந்து வெளியேற்றுமாறு வற்புறுத்தினர். கடைசியின் அரசினின்று விலகிக் கொண்ட பிலிப் குண வர்த்தன, பண்டாரநாயக்கஒருகூட்டுறவு கடையைக்கூட நிர்வகிக்க இயலாத அளவுக்கு திறமையற்றவர் என விமர்சித்திருந்தார். ஆனால் இத்தகைய குழப்ப நிலையின் பின்னர் சில நாள்களில் 1956ஆம் ஆண்டின் அரசியல் புரட்சியால் அரசியல் நிலைமை முற்றுமுழு தாக மறுபக்கம் திரும்பியது.

**பண்டாரநாயக்கவின் கூட்டரசுக்கும் இன்றைய கூட்டரசுக்கும் வேறுபாடுகள் பல**

இன்றைய கூட்டு அரசு, அன்றைய கூட்டுஅரசுக்குமுற்றிலும்வேறுபட்டதொன்றே. இன்றைய கூட்டு அரசு நிறுவப்பட்ட நாளிலிருந்து அமைச்சரவையில் அமைச்சர்கள் மத்தியில்கருத்து வேறுபாடுகளும்விமர்சனங்களும் தலையெடுக்க ஆரம்பித்திருந்தன. ஆயினும் இதுவரை காலமும் வெளியில் பெருமளவில் தெரியவராதிருந்த அத்தகைய கருத்து மோதல்கள் தற்போது வெளிப்படையாக வெளியில் தெரியும் அளவுக்கு உச்சம் பெற்றுள்ளன.

நாட்டில் இதுவரை முன்னெடுக் கப்பட்டுவந்த அபிவிருத்திச்செயற்பாடுகள் முற்றுமுழுதாகத் தடைப்பட்டு, முன்னெடுக்கப்பட்ட திட்டங்களைக் கூடப் பூர்த்தி செய்ய இயலாத அளவுக்கு பின்னடைவு நிலை ஏற்பட்டுள்ளது. சகல அபிவிருத்தித் திட்டங்களும் எதிர்பார்த்த இலக்கை எட்ட முடியாது தடைப்பட்டுள்ளன. பொருளாதார விற்பன்னர்கள் கண்ட கனவுகள்பகல்கனவுகளாக ஆகியுள்ளன. கடந்த மேதின ஊர்வலத்தின் பின்னர் கூட்டு அரசு பலம் பெற்றுள்ளதாக அரசியல் நிலவரம் குறித்து சரியான புரிந்துணர்வு இல்லாதவர்களே நம்பி வருகின்றனர். உண்மையில் இன்று அரச இயந்திரத்தின் சக்கரங்கள் மற்றைய காலகட்டத்தைவிட வேகமாகப் பழுதடைந்து வருகின்றன.

**குழப்பமோ குழப்பம் என்ற நிலையில் இன்று ஐ.தே.கட்சி தடுமாற்றம்**

ஐ.தே.கட்சியோ இன்று குழப்பங்களின் மத்தியில் இயங்க நேர்ந்துள்ளது. அத்தகைய குழப்பங்கள் வெளிப்படையாக வெடித்துச் சிதறும் நிலை அண்மித்துள்ளது. சரத் பொன்சேகாவுக்கு ஐ.தே.கட்சியின் பிரதித் தலைமைத்துவம் வழங்க உத்தேசிப்பது குறித்துதற்போது கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் மத்தியில் அதிருப்தி நிலை உருவாகியுள்ளது. கட்சிக்காகக் கடுமையாக உழைத்த கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுக்கும், கட்சித்தலைமைத்துவத்துக்கும் இடையேயான உறவு வெடித்துச் சிதறும் நிலை உருவாகியுள்ளது. அதேவேளை கிராமிய மட்டத்தில்ஐ.தே.கட்சிப்பிரமுகர்கள் அநாதைகள்போன்றாகியுள்ளனர்.

செப்ரெம்பர் மாதமளவில் இவ்விரு கட்சிகள் மத்தியிலான "ஒன்றிணைந்த பயணம்" பின்னடைவு கண்டது. இதன் பின்னரான பயணம் குறித்து என்ன ஆகுமோ என்றஎதிர்பார்ப்புடன் நாட்டுமக்கள் நடப்பதைக் காணக் காத்திருக்கின்றனர். ஜோன் செனவிரத்ன, சுசில் பிரேமஜயந்த மற்றும் டிலான் பெரேரா போன்றோர் அரசுடன் இணங்கிச்செயற்பட இயலாத நிலை தமக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

எவர் தான் எத்தகைய வாயடிப்பை மேற்கொண்டாலும், இன்னமும் சிறிது காலம் செல்லுமுன்னர் அரசுக்குள் தவிர்க்க இயலாத மோதல் நிலையொன்று உருவாகப் போவது நிச்சயமே. பல்கலைக்கழகமாணவர்கள் வீதியில் இறங்கிப் போராடி வருகின்றனர். வைத்தியர்கள், சிப்பாய்கள், விவசாயப் பெருமக்கள் என அத்தனை தரப்பினர்களும் தமது கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அரசுக்கு எதிராகக் களம் இறங்கியுள்ளனர். தாம்பயன்படுத்தும் வீதிகளைப் புனரமைக்குமாறு கோரி பொதுமக்கள் வீதியில் இறங்கிப்போராடமுனைகின்றனர். இவ்விதம் பல தரப்புக்களில் இருந்தும் எழும் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க இயலாத நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. அரசை வீழ்த்துவதற்கான முயற்சிக்கு 113 நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆதரவைத்திரட்ட இயலாத நிலை, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய தென்னமோ உண்மைதான். ஆனால், அத்தகைய முயற்சியில் சாதகமான வெற்றிபெறசந்தர்ப்பம்வரும் வரை குறித்த தரப்புக்கள் பொறுமையாகக் காத்திருக்கின்றன.

**அரசியலிலும் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படுவது சகஜமே**

1996ஆம் ஆண்டின் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின்போது உலகப் பிரசித்திபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியை, கிரிக்கெட் விளை யாட்டுத் துறையில் அனுபவம் குறைந்த கென்ய கிரிக்கெட் அணி 73 ஓட்டங்களால் தோற்கடித்திருந்தது. அத்தகைய எதிர்பாராத சம்பவங்கள் இடையிடையே ஏற்படுவது சகஜமே. ஆயினும் அவ்வித வெற்றியை ஈட்டிய கென்ய கிரிக்கெட் அணி இன்று மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியைவிட மிகப் பெரிய பின்னடைவு நிலையிலேயே இருக்க நேரிட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசுக்குக் கூட அத்தகையதொரு நிலைக்கு முகம் கொடுக்க நேர்ந்தது என ஒரு சிலர் கருத்து வெளியிட்டு வருகின்றனர். உண்மையில் அது எதிர்பாராத இலேசானதொரு தோல்வியே. இதனை மற்றெல்லோரையும் விட ரணில் விக்கிரமசிங்க நன்கறிவார். எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தமது தரப்புக்குப் பின்னடைவு ஏற்படுமென்ற நம்பிக்கை காரணமாகவே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்த ஐ.தே.கட்சி பின்னடித்து வந்தது.

ஆனால் எப்போதுமே இத்தகைய விதத்தில் செயற்பட இயலாது. ஏதோவொரு சந்தர்ப்பத்தில் யதார்த்தத்துக்கு முகம் கொடுத்துத் தானாக வேண்டும். நாட்டு மக்களால் மாற்றத்தை மேற்கொள்ள முயலவில்லையா என்பதை அத்தகைய வேளையில் புரிந்துகொள்ளலாம். எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் எல்லோராலுமே யதார்த்தத்தை உணரக் கூடிய நிலை ஏற்படும் என்பது நிச்சயமே.




## பொறுப்புணர்வுடன் செயற்படுவார்களா?

அரசு மக்களுக்கு சில வசதிகளைச் செய்து கொடுப்பதும், பொதுமக்கள் தமக்கான பல அத்தியாவசிய வசதிகள் கிடைக்கப்பெறாமல் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்வதும் நாம் அன்றாடம் காணும் நிகழ்ச்சிகள். எமக்குக் கிட்டும் சிறிய உதவிகளைக் கூட நாம் பிரயோசனமான முறையில் பயன்படுத்துவது இல்லை என்பது உண்மை. பொருளாதார நிலையில் கீழ்மட்டத்தில் உள்ளோர் தமது வருமானத்துக்கு ஏற்ப ஓரளவு கட்டுப்பாடான விலையில் பொருள்கள் வழங்க வசதி செய்து கொடுக்கும் நோக்கில் அரசால் நடத்தப்படும் கூட்டுறவு மொத்த வியாபார நிலையம் என்ற பெயரில் பல்பொருள் அங்காடிக் கிளைகளை நாட்டின் பல்வேறு இடங்களில் திறந்து பொதுமக்களக்கு வசதிகள் செய்துள்ளமை பாராட்டுக்குரியது.

சாவகச்சேரி டச்சு றோட்டில் இயங்கும் கூ.மொ.வி. நிலையத்தில் விற்பனை செய்யப்படும் மீன், இறைச்சி, நெத்தலி போன்ற கடலுணவு கள் சரியான வகையில் பொதி செய்யப்படாமையால் சகித்து கொள்ள முடியாத துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அங்கு செல்லும் நுகர்வோருக்கு அசௌகரியம் ஏற்படுகிறது. எனவே அவர்கள் ஒரு சில பொருள்களை அவசர அவசரமாகக் கொள்வனவு செய்ததும் வெளியேறுவதைக் காண்கிறோம். சுற்றுச்சூழலும் துர்நாற்றம் வீசுவதை தடுப்பது சுகாதார அதிகாரிகளின் கடமை. அலட்சியப் போக்கை விடுத்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானதொன்றாகும்.

தென்மராட்சியில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் இ.போ.ச. பேருந்துகள் பெருமழையில் தவிக்கும் பள்ளி மாணவ, மாணவிகள் தரிப்பிடத்தில் நின்று ஏற்றிச் செல்லாது அசமந்தப் போக்காய் செல்லும் நடத்துநர், சாரதியைப் பற்றி எவரிடம் முறையிடுவது? மனித நேயம் இல்லாது நடைபெறும் இத்தகைய செயற்பாடுகள் மேலும் தொடராது சம்பந்தப்பட்டோர் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொண்டுதவினால் அதனால் பள்ளிச் சிறார்கள் பெரும் நன்மையடைவர்.

எஸ்.சுப்பிரமணியம், கல்வயல்.

# கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்கள் அதிகரிப்பு


## செப்ரெம்பர் மாத உற்பத்தியில் 6.0 வீதமாகப் பதிவு

2016 ஆம் ஆண்டின் மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் செப்ரெம்பர் மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்கள் 6.0 வீதத்தால் அதிகரித்துள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு மற்றும் நடப்பு வருடத்தின் செப்ரெம்பர் மாத காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்கள் முறையே 101.6 மற்றும் 107.7 ஆக அமைந்துள்ளது.

இந்தத் தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளி விவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

தவிர, உற்பத்திக் கைத்தொழில்களில், 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 செப்ரெம்பர் மாத உற்பத்தியில் 'வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்தி பொருள்கள்', 'அடிப்படை உலோக உற்பத்தி பொருள்கள்' மற்றும் 'அச்சிடுதலும் பதிவு செய்த ஊடகங்களின் மறு,உற்பத்தி' ஆகியவை முறையே 26.1 வீதமாகவும்,19.7 வீதமாகவும் ,16.4 வீதமாகவும், குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுகின்றன.




**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம்/ ஆண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| செப்ரெம்பர் - 2016 | 101.6 |
| செப்ரெம்பர் - 2017 | 107.7 |
| வருடத்தின் மீது வருட மாற்றம் (%) | 6.0 |
| 3ஆம் காலாண்டு 2017 | 107.1 |

அதேவேளை உணவு உற்பத்தியானது 7.3 வீதத்தால் அதிகரித்துள்ளது. தொழில் உற்பத்தியில் 'தளபாடம்', 'பானவகை', மற்றும் 'இரசாயனமும் இரசாயனப் பொருள் உற்பத்தி' ஆகியன முறையே14.9 வீதமாக வும்,13.9 வீதமாகவும், 12.7 வீதமாகவும் வீழ்ச்சியைப் பதிவிட்டுள்ளன.

> "2016 ஆம் ஆண்டு மூன்றாம் காலாண்டு உற்பத்திகளுடன் ஒப் பிடுகையில், நடப்பு வருடத்தின் மூன்றாம் காலாண்டு உற்பத்தி 3.9 வீதத்தால் அதிகரிப்பைக் காட்டுகின்றது.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது முதன்மையான பொருளாதாரக் குறிகாட்டியாக உள்ளதுடன் அவை குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களையும் வெளிப்படுத்துகின்றமை குறித்து நோக்கத்தக்கது. (ஓ)

# வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் 2018 குறித்த பார்வை

வருமானக் கூற்று

ரூபா.மில்

| விவரம் | 2017 | 2018 மதிப்பீடு |
|---|---|---|
| விற்பனை வருமானம் | 527,865 | 534,051 |
| விற்பனை வரிகள் | (72,605) | 74,977) |
| **தேறிய வருமானம்** | **455,260** | **459,073** |
| விற்பனைச் செலவுகள் | (412,229) | (423,304) |
| **தேறிய இலாபம்** | **43,031** | **35,770** |
| ஏனைய வருமானம் | 202 | 225 |
| விற்பனை, சந்தைப்படுத்தல் செலவினம் | (15,555) | (17,030) |
| நிர்வாகச் செலவுகள் | (4,782) | (5,880) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | **22,896** | **13,085** |
| நாணயமாற்று விகித மாற்றம் | (7,185) | (4,000) |
| நிதி வருமானம் | 9,823 | 5,318 |
| நிதிச் செலவினம் | (11,130) | (11,606) |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம் | **14,404** | **2,796** |

# கணக்காய்வு சட்டமூலத்தை சமர்ப்பிப்பதில் தாமதம்


## கணக்காய்வாளர் நாயகம் தெரிவிப்பு



கூட்டாட்சி அரசு வழங்கிய வாக்குறுதிகளில், தேசிய கணக்காய்வு சட்டம் முக்கியத்துவம் பெறுகிறது. எனினும்,தேசிய கணக்காய்வு சட்டமூலத்தை சமர்ப்பிப்பதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது., இந்தத் தகவலை கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர், "மத்திய வங்கியின் முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பான மோசடி குறித்து ஆரம்ப அறிக்கையின் பெரும் பகுதியை கணக்காய்வாளர் திணைக்களம் தயாரித்தது. இதன்காரணமாக அதிசக்திமிக்க அறிக்கையாகவும் அமைந்திருந்தது.நிலக்கரிச் சுரங்கம் தொடர்பிலும் அறிக்கையொன்றைத் தயாரித்து சமர்ப்பித்துள்ளோம். அது குறித்த பேச்சுக்கள் இது வரையாக இடம்பெற வில்லை. அரிசி இறக்குமதிச் செயற்பாட்டில் இடம்பெற்ற 15 மில்லியன் ரூபா நட்டம் குறித்தும் அறிக்கை சமர்ப்பித்துள்ளோம். இதேபோன்று பல்வேறுபட்ட அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்துள்ளோம்.இவை அனைத்துக்குமான தீர்வுகள் எவையும் கிடைக்கவில்லை. 19 ஆவது திருத்தச் சட்டம் மூலம், கணக்காய்வாளர் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை வேறொரு சட்டமூலத்தினால் நீக்கிவிட அதிகாரமில்லை. அவ்வாறானதொரு நிலமை ஏற்படுமாயின் அது சட்டரீதியற்றதாக அமைவுபெறும்." - என்றார். (ஓ)

# அரச வருமானம் (ரூபா. பில்)




தகவல் மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

# இலவம் பஞ்சு செய்கை

## கிளி ஏமாறலாம் இலாபம் ஏமாறாது

■ த.நிறஞ்ஷினி

'இலவம் பஞ்சில் துயில்' எனும் ஔவையாரின் கூற்றும் தொன்றுதொட்டேயுள்ள மரபாகும். எனினும் 'பஞ்சுமரம் வளர்த்தால் நெற்று வெடித்து காற்றில் பஞ்சு பறப்பது போல் குடும்பமும் பஞ்சாய் பறந்து விடும்' என்ற முடநம்பிக்கையும்அநேகமக்களிடையேநிலவி வருகிறது. பச்சைக் காய்கள் முற்றி பழம் உண்ணலாம் என இலவுகாத்த கிளி ஏமார்ந்து போயிருக்கலாம். ஆனால் இலவு பயிர்ச்செய்கையில் குறைந்த செலவில் கூடிய இலாபம் பெறமுடியும் என்பதில் மாற்றுக்கருத்தே இல்லை.

### தோற்றம் மற்றும் பரம்பல்

இலவ மரம் என்னும் மல்வேசிய குடும்பத்தை சார்ந்த மரம் வெப்ப வலயத்திற்குரிய மரமாகும். இலவம் பஞ்சு மரமானது அமேசன் நதிக்கரையில்தேர்றம்பெற்றுமெக்ஸிகோ, மத்திய அமெரிக்காமற்றும்கரீபியன்தீவுகளிலிருந்து ஆசியக் கண்டம் வரை பரவியதாக அறியப்படுகிறது.

### பண்புகள்

இலவ மரமானது 70-77 மீற்றர் வரை வளரக் கூடியது. மிக நீளமான கிளைகளையும் உடையது. இலவம்உற்பத்திசெய்யும்காய்களில்பெறப்படும் நார் பொருள் இலவம் பஞ்சு ஆகும். இதன் பஞ்சைபட்டுப்பஞ்சுஎன்றும்அழைப்பர். இதற்குக் காரணம் பஞ்சில் உள்ள மினுமினுப்பும் இதன் தோற்றமும் பட்டைப்போல இருப்பதுதான். நீர் உறிஞ்சும்தன்மையற்றது. அதிகப்படியானமிதக்கும் தன்மையுள்ளது. 30 மடங்கு எடையை தாங்கக்கூடியதும் நீரில் மிதக்கும் தக்கையை விட ஏழு மடங்கு மிதக்கும் தன்மையுடையது. எளிதில்தீப்பற்றக்கூடியது. பஞ்சுமென்மையானதாகவும்உறுதியற்றும்இருப்பதால்நூல்நூற்கப் பயன்படுவதில்லை.

### பயன்பாடு

இது மெத்தை தலையணை உயிர்காக்கும் உறை போன்றவற்றை செய்யப்பயன்படுகிறது. காய்த்துஓய்ந்தமரங்களைபலகையாக்கிகட்டட உள்ளக அலங்காரத்துக்குப் பயன்படுத்தலாம். பிளைவுட் ஒட்டுப்பலகைக்கும் தீப்பெட்டி செய்யவும் இதன் பலகை பயன்படுகிறது.
பயிராக்கவியல் இலவுமரங்களில் இரண்டுரகங்கள் உள்ளன.

1. சிங்கப்பூர் ரகம்
2. உள்ளுர் ரகம்

### இனப்பெருக்கமுறை

#### விதை

விதைமூலம் இனப்பெருக்கம் செய்யலாம். தரமான தாய்த்தாவரத்திலிருந்து பெறப்பட்ட விதைகளை உறங்கு நிலைகாலம் முடிந்ததும் கொதிக்கும்நீரில்போட்டு10நிமிடம்கழித்துநீரை வடித்துவிட்டு குளிந்த நீரில்போட்டு ஒரு இரவு முழுவதும் ஊறவைத்து மறுநாள் நாற்றுமேடையில் நடவேண்டும். 8 மாத காலத்தில் நாற்றுகள் நடுகைக்குத் தயாராகிவிடும். விதைமூலம் நடுகை செய்யப்படும் நாற்றுகள் 5 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கும்.

#### போத்து அல்லது வேர்க்கட்டை

போத்து மூலமும் இனப்பெருக்கம் செய்யலாம். போத்து என்பது விதைகள் மூலம் பெறப்படுவது. 1.5 அடி உயரமுள்ள மேட்டுப்பாத்தியில் 30 x 15 சென்ரிமீற்றர் இடைவெளியில் விதைக்கப்பட்ட விதையில் முளைக்கும்நாற்றை10-12அடி உயரம்வரை வளர்க்கவேண்டும். இவ்வாறு வளர 2 ஆண்டுகள் ஆகும். நடுகைக்கு தயாரான நாற்றுகளை தரையில் இருந்து ஒரு அடி ஆழத்தில் அதன் வேர்ப்பகுதியைவெட்டிகிழங்குபோன்றஅமைப்புடன்செடியைதனியாகஎடுக்கவேண்டும். 6அடி உயரம்வரை மேற்பகுதியை வெட்டி கழிக்க வேண்டும். விட்டம் 1.52 அங்குலமுள்ள கழி போன்ற நாற்று நடுகைக்குத் தயாரகும். இதுவே போத்து எனப்படும் இம்முறையில் நடுகை செய்யப்படும் நாற்று விரைவில் துளிர்த்து மரமாகி 2 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கும்.

### நடுகை முறை

ஒருஅடிநீள, அகல, ஆழத்தில்குழிவெட்டிவேர்க் கட்டையை (போத்து) நடவேண்டும். நடுகை செய்த போத்து காயாமல் இருப்பதற்கு போத்தின் மேல்சாணஉருண்டையைவைக்கவேண்டும். போத்திலிருந்து வரும் துளிர்களில் இரண்டை மட்டும்வளரவிடவேண்டும். விதைமூலமும்08 மாத நாற்றுகளை நடலாம்.

### பயன்தரும் காலம்

சிங்கப்பூர்ரகம்நடுகைசெய்து3வருடத்திலிருந்து பயன்தரத் தொடங்கும். நீளமான காய்களும் அதிககாய்ப்புதன்மையும்அதிகளவுபஞ்சுஉடையதுமாகும். ஒரு மரம் 16 ஆயிரம் 18 ஆயிரம் காய்கள் வரை காய்க்கும். ஆயுட்காலம் 30-40 ஆண்டுகள் வரை இருக்கும்.
உள்ளுர் ரகம் இலவு 5 அல்லது 6 ஆண்டுகளில் பயன்தரத்தொடங்கும். குட்டையானகாய்களும் குறைந்தளவு காய்ப்பு தன்மையும் குறைவான பஞ்சு உடையதுமாகும். ஒரு மரத்திற்கு 3 ஆயிரம்5ஆயிரம்காய்கள்வரைகாய்க்கும். ஆயுட்காலம் 100 ஆண்டுகள் வரை இருக்கும். ஏப்ரல், மே, ஜீன்மாதங்கள்அறுவடைகாலமாகும்

### வருமானம்

சிங்கப்பூர் ரகம் ஏக்கருக்கு 20-25 மரங்கள் நடலாம். 25 மரங்களிலிருந்து 4 லட்சம் முதல் 5லட்சம்வரைகாய்கள்பெறலாம். ஒருசாக்கில்5 கிலோ பஞ்சுகள் அடைக்கலாம். ஒரு காய் சுமார் 100-120 கிராம் அளவும் 20-30 கிராம் பஞ்சு நிறையும் கொண்டது. 50-60 காய்களிலிருந்து 1கிலோ பஞ்சு பெறலாம்.
ஒருமரத்திலிருந்து320-400கிலோ(16ஆயிரம் 18 ஆயிரம் காய்கள்) பஞ்சும் ஒரு ஏக்கரிலிருந்து (45இலட்சம்காய்கள்) 8ஆயிரம்அல்லது8ஆயிரத்து500கிலோபஞ்சும்பெறலாம். ஒருகிலோஇலவம்பஞ்சின்தற்போதையசந்தைநிலவரம்ரூபா 500-650 வரையாகும். எனவே ஒரு மரத்திலிருந்து ரூபா ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாவில் இருந்து 2 லட்சம் வரை மொத்த இலாபமும் ஒரு ஏக்கரிலிருந்து 4 லட்வம் முதுல் 4 லட்சத்து 25 ஆயிரம் ரூபா மொத்த இலாபமும் பெறலாம்.




ஒவ்வொரு மரமும் நடப்படும்போது
சாமாதானத்துக்கான
விதை ஊன்றப்படுகிறது




இலவ மரமானது 70- 77 மீற்றர் வரை வளரக்கூடியது. மிகநீளமானகிளைகளையும்உடையது. இலவம் உற்பத்தி செய்யும் காய்களில் பெறப்படும் நார் பொருள்இலவம்பஞ்சுஆகும். இதன்பஞ்சைபட்டுப் பஞ்சுஎன்றும்அழைப்பர். இதற்குக்காரணம்பஞ்சில் உள்ள மினுமினுப்பும் இதன் தோற்றமும் பட்டைப் போலஇருப்பதுதான். நீர்உறிஞ்சும்தன்மையற்றது. அதிகப்படியான மிதக்கும் தன்மையுள்ளது.





# பத்தி எழுத்து

## வடபகுதி மக்களின் கடன்சுமை தணியுமா ?

வடக்கில் கடன் சுமையில் சிக்கியவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடனை வழங்கும் திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படுமென நீதியமைச்சர் தமது வரவு செலவுத்திட்ட உரையின் போது தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது.

வடக்கிலுள்ள மக்கள் பல்வேறு காரணங்களால் கடன் சுமையில் சிக்கித்தவிக்கின்றனர். இவர்களால் இதிலிருந்து மீண்டெழுவதற்கு முடியவில்லை. இதைத் தாங்க முடியாத ஒரு சிலர் தவறான முடிவுகளையும் எடுத்துள்ளனர். அரியாலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் இத்தகைய தொரு சோகமான மற்றும் தவறான முடிவினால் உயிரிழந்துள்ளனர். தனியார் நிதி நிறுவனங்கள், வங்கிகள் ஆகிய வற்றிலிருந்து கடனைப் பெற்ற பலர் அவற்றைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் விழிபிதுங்கி நிற்கின்றனர். இதைவிடத்தனி ஆட்களிடம் அதிக வட்டிக்குப் பணத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் படும்பாடு மிகவும் மோசமானது.

கடன் என்பது மிகவும் மோசமானதொரு விடயமாகும். இதனால்தான் 'கடன்பட்டார் நெஞ்சம் போன்று கலங்கி நின்றான் இலங்கை வேந்தன்' என்ற உவமைத் தொடர் உருவானது. இந்த நிலையில் நிதியமைச்சரின் அறிவிப்பு கடன் சுமையில் சிக்கித் தவிப்பவர்களுக்கு ஆறுதல் தரக்கூடியது.

அரசு இந்த விடயத்தில் கூடிய கவனமெடுத்து தகுதியானவர்களை இனம் உதவிகளை மேற்கொள்ள வேண்டும். வீட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பலர் கடன்பட்டு அந்தச் சுமையால் அவதிப்படுகின்றனர். குறிப்பாக இந்திய வீட்டுத்திட்டத்துக்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா மட்டுமே நிதியுதவி வழங்கப்பட்டது. இந்தப் பணத்தைக் கொண்டு எந்த வகையிலும் உரிய அளவிலான வீடுகளை அமைக்க முடியாது. இதனால்வீட்டுத்திட்டப்பயனாளிகள் கடன்களைப் பெற்று வீடுகளைப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆனால் பலரால் பெற்ற கடன்களைத் திருப்பிச்செலுத்த முடியவில்லை. இவர்களின் கடன் சுமையைப் போக்குவதற்கு அரசு உதவ வேண்டும்.

இதைவிட அத்தியாவசியத் தேவைகளுக்கெனக் கடன் வாங்கியவர்களும் கடன் சுமையால் தவிக்கின்றனர். பிள்ளைகளின் படிப்பு, திருமணம்,நோய் ஆகியன இதில் உள்டங்குகின்றன.

அரசு திட்டமிட்ட முறையில் செயற்பட்டு வடபகுதி மக்களின் கடன் சுமையைத் தணிப்பதற்கு உதவுமாயின் அது பேருதவியாகவே அமைந்து விடும்.

# நவம்பர் மாத ராசிபலன்



## கும்பம்

(அவிட்டம் 3, 4 பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 பாதம்)

சனி பகவானை ராசிநாதனாகக் கொண்ட கும்ப ராசி அன்பர்களே, இந்த மாதம் அடுத்தவர்களுக்கு உதவப்போய் அதனால் அவதிப்பட நேரலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும் பணிபுரியும் இடத்தில் ஆயுதங்களைக் கையாளும் போதும் கவனம் தேவை. செலவு அதிகரிக்கும். மனதில் இருந்த உற்சாகம் குறையும்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. பொருள்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர் பார்த்த பணம் கைக்கு வரத் தாமதம் ஆகலாம்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலையும், வேலைப் பளுவையும் சந்திக்க நேரிடும். சிலருக்கு இட மாற்றம் உண்டாகலாம்.

குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்படலாம். வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பதும் கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வதும் நல்லது. சகோதரர்களுடன் கருத்து வேற்றுமை உண்டாகலாம். எச்சரிக்கை தேவை.

பெண்கள் அடுத்தவர்களுக்கு உதவிகள் செய்யும் போது கவனமாக இருப்பது நல்லது. செலவு அதிகரிக்கும். வீண் கவலை உண்டாகலாம்.

**கலைத்துறையினருக்கு:** சோம்பேறிதனத்தை விட்டுவிட்டு நன்கு உழைப்பது வெற்றிக்கு வழிவகுக்கும். அறிவுத்திறன் அதிகரிக்கும். உங்களது பேச்சு மற்றவரை மயக்குவதுபோல் இருக்கும். எங்கு இருந்தாலும் ருசியான உணவை உண்டு மகிழ்வீர்கள். சாமர்த்தியமாக காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர்கள்.

**அரசியல்துறையினருக்கு:** உங்கள்வளர்ச்சிக்காக சில திட்டங்களை செயல்படுத்த முடிவெடுப்பீர்கள். பணவரத்து திருப்தி தரும். செயல் திறமை கூடும். பயணங்களும் செல்ல நேரிடலாம். மனதில் நிம்மதி ஏற்படும். சுற்றத்தினர் வருகை இருக்கும். நண்பர்கள் மூலம் மன மகிழ்ச்சி ஏற்படும். இனிமையான வார்த்தைகளால் சிக்கலான காரியத்தை கூட எளிதாக செய்து முடிப்பீர்கள்.

**மாணவர்கள்:** கல்வி பற்றிய கவலையை தவிர்த்து கூடுதல் கவனத்துடன் படிப்பது நல்லது. வீண் அலைச்சல் இருக்கும்.

**அவிட்டம் 3, 4 பாதம்:**
இந்த மாதம் சாதூரியமான பேச்சின் மூலம் சிக்கலான பிரச்சினைகளையும் தீர்த்து விடுவீர்கள். பயணங்கள் செல்ல நேரிடலாம். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடையப் பாடுபடுவீர்கள். கல்வி தொடர்பான பயணம் செல்ல நேரிடலாம்.

**சதயம்:**
இந்த மாதம் ஒரு காரியத்தை செய்யும் முன்பு அது சரியா தவறா என்று பல முறை மனதுக்குள் கேள்வி எழுப்பி பின்னர் ஒரு முடிவு எடுப்பீர்கள். எல்லா வகையிலும் நல்ல பலன் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் அதிகரிக்கும். எதிலும் சற்று கூடுதல் கவனமாக இருப்பது நல்லது.

**பூரட்டாதி 1, 2, 3 பாதம்:**
இந்த மாதம் வீண் பிரச்னைகளில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான மனக்கவலை தோன்றி மறையும். ஆனால் இலாபம் கிடைக்க பெறுவீர்கள். புதிய ஆடர்கள் வாங்குவது தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும்.



# வரலாற்றில் இன்றைய தினம் 13.11.2017




2006 - இன, மத, கட்சி பேதமின்றி மக்கள் திரண்டு ரவிராஜ் கொலைக்குக் கண்டனம்.

- 1864 - கிரீஸில் புதிய அரசமைப்பு கொண்டு வரப்பட்டது.
- 1960 - வெனிசுலா அதிபர் கார்லொஸ், கரஸ்கஸில் படுகொலை செய்யப்பட்டார்.
- 1985 - கொலம்பியாவில்நெவாடேல்ளிமலை வெடித்துச்சிதறியதில் 23 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.
- 1994 - ஐரோப்பிய ஒன்றியத்தில் சுவீடன் இணைந்தது.
- 2007 - ஆயுதங்களைக் களைய வேண்டும் என்ற ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நெருக்கடிக்கு ஈராக் இசைந்தது.
- 2012 - ஆஸ்திரேலியா மற்றும் தென்பசுபிக் பகுதிகளில் பூரண சூரிய கிரகணம்.
- 2016 - இராணுவம் அமைக்கும் விகாரைகளையே தமிழ் மக்கள் அகற்றக்கோருகின்றனர் என்று சிறிதுங்க ஜெயசூரிய தெரிவிப்பு.
- 2016 - அச்சுறுத்தும்பிக்குகள்மீதுநடவடிக்கை அவசியம்என்றுநாடாளுமன்ற உறுப்பினர் ஜோகேஸ்வரன் வலியுறுத்தினார்.
- 2016 - பாகிஸ்தானில்ஐ.எஸ். கைவரிசை. 52 பேர் உயிரிழப்பு.

## நாளை

**14.11.2017**
செவ்வாய்க்கிழமை

**ஐப்பசி 28**

திதி: ஏகாதசி பி.ப. 03.18 வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.ப. 03.33 வரை
சுபநேரம்: 10.37–12.07 வரை
ராகுகாலம்: 03.07–04.37 வரை

ஏகாதசி விரதம்

சட்டையின் முதல் பட்டன் பெரும்பாலும் இண்டர்வியூ போகும் போது மட்டும் தான் பயன்படுகிறது.

275 Retweets 442 Likes


## என்னடா குடையில் ஓட்டை இருக்கு...



மழை நின்று போச்சா இல்லையான்னு தெரிஞ்சிக்க வேணாமா அதான்...

## லீவு முடிஞ்சு ஆபிஸ் போகும் போதெல்லாம் இப்படித்தான் பத்திக்கிட்டு வருது...





அபாரம், அற்புதம், பிரமாதம்...

# விறுவிறுப்பாக தயாராகிறது 'யங் மங் சங்'



அர்ஜுன் இயக்கத்தில் பிரபுதேவா லட்சுமி மேனன் இணைந்து நடிக்கும் 'யங் மங் சங்' படத்தின் தயாரிப்புப் பணிகள் தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன என்று படக்குழு அறிவித்துள்ளது.

இந்தப் படத்தில் பிரபுதேவா, லட்சுமி மேனனுடன் முக்கிய காதாபாத்திரங்களில் தங்கர்பச்சன், சித்ரா லட்சுமணன், கே.ராஜன், ஆர்.ஜே.பாலாஜி, பாகுபலி பிரபாகர், கும்கி அஸ்வின் உள்ளிட்ட பலரும் நடிக்கிறார்கள். பிரபுதேவாவின் படம் என்பதால் பாடல் காட்சிகளின் மட்டில் பெரும் எதிர்பார்ப்பு இருக்கும். இதன்படி 150 நடனக் கலைஞர்களுடன் ஓர் பாடல் மிகப்பெரிய அளவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இது இந்தப் படத்தில் முக்கிய அம்சமாக இருக்கும் என்று படக்குழு அறிவித்துள்ளது. ஏனைய பணிகளும் துரித கதியில் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம். தொழிலில் பொறுமை அவசியம். மிதமான பணவரவு இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** நண்பர்களிடம் பொது விஷயம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரம் சிறப்பாக இருக்கும். சேமிக்கும் விதத்தில் இலாபம் கிடைக்கும். குடும்ப தேவை குறைவின்றி நிறைவேறும்.

**கடகம்:** பிறர் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில் வியாபாரம் மந்தமாக இயங்கும். சுமாரான அளவில் பணவரவு இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**சிங்கம்:** நல்ல எண்ணங்களால் உற்சாகமுடன் இருப்பீர். அன்றாடப் பணியில் ஆர்வம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி கிடைக்கும்.

**கன்னி:** தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரலாம். தொழிலில் விற்பனை மந்தமாக இருக்கும். இலாபம் சுமார். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி வந்து சேரும்.

**துலாம்:** நலம் விரும்பியை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். தொழில் வியாபாரம் சுமூகமாக இருக்கும். பணப்பரிவர்த்தனை அதிகரிக்கும். குடும்பத் தேவை நிறைவேறும்.

**விருச்சிகம்:** நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரம் திட்டமிட்ட இலக்கை அடையும். சேமிப்புக்கூடும். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும்.

**தனுசு:** அளவுடன் பேசுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் சிறு குறுக்கீடு வந்து சரியாகும். அளவான பணவரவு கிடைக்கும். தாயின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** செயலில் நிதானம் பின்பற்றுவது அவசியம். தொழில் வியாபாரத்தில் நேரம் தவறாமை வேண்டும். சராசரி பணவரவு இருக்கும். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**கும்பம்:** சமூக நலனில் ஈடுபாடு கொள்வீர்கள். தொழில் வியாபாரம் திருப்திகரமாகும். நிலுவைப் பணம் வசூலாகும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும்.

**மீனம்:** முக்கியமான செயல் எளிதில் நிறைவேறும். தொழில் வியாபாரம் செழிக்க புதிய திட்டம் வகுப்பீர்கள். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

மூன்று பேருக்கு 25 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் தம்மோடு வைத்துக்கொள்ள ஏதாவது அவர்கள் கேட்கலாம் என்று அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

முதல் நபர், "எனக்கு 500 புத்தகங்கள் வேண்டும்" என்றார்.
இரண்டாம் ஆள், "எனக்கு சிறையில் உடற்பயிற்சி செய்ய உபகரணங்கள் வேண்டும்" என்றார்.

மூன்றாவது நபர், "எனக்கு ஒரு லட்சம் சிகரெட்கள் வேண்டும்" என்றார்.

25 வருடம் கழித்து மூன்று பேரும் விடுதலை செய்யப்பட்டனர்

முதல் நபர், " நான் நிறையத் தெரிந்து கொண்டேன் ஒரு நூலகம் அமைப்பேன்" என்றார்.

இரண்டாம் நபர், "நான் உடலை வலுவாக்கினேன் ஜிம் வைப்பேன்" என்றார்.

மூன்றாம் நபர், "நாம் சிகரெட் பிடிப்பதை விட்டு விட்டேன்" என்றார்

எல்லோருக்கும் ஆச்சர்யம் போகும்போது லட்சம் சிகரெட் கேட்டவன் எப்படி திருந்தினான் என்று.

அவன் சொன்னான்,
"தீப்பெட்டி கேக்க மறந்துட்டேன்ப்பா"




# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 6 | | 8 | 2 | | |
| | | | | | 5 | | 7 | 4 |
| | | 5 | | | | | 6 | |
| | | 3 | | 4 | | | | |
| | | | | 3 | | 6 | | 1 |
| | | 2 | | | 6 | 3 | | |
| | | | 4 | | 9 | | 2 | |
| 1 | | | | | | | | 8 |
| | 9 | | | | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 9 | 5 | 8 | 1 | 4 | 6 | 7 |
| 8 | 5 | 6 | 2 | 4 | 7 | 1 | 3 | 9 |
| 4 | 1 | 7 | 3 | 6 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 7 | 2 | 8 | 9 | 6 | 3 | 1 | 4 |
| 1 | 9 | 8 | 4 | 2 | 3 | 5 | 7 | 6 |
| 3 | 6 | 4 | 1 | 7 | 5 | 2 | 9 | 8 |
| 7 | 2 | 5 | 9 | 1 | 8 | 6 | 4 | 3 |
| 6 | 4 | 3 | 7 | 5 | 2 | 9 | 8 | 1 |
| 9 | 8 | 1 | 6 | 3 | 4 | 7 | 2 | 5 |

## சிறிய உருவின் கீழே கோடு வரைவோம்





# கடவுள் நேரே வரமாட்டார்

அது ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் இறைவன் மேல் அளவற்ற ஈடுபாடு கொண்ட ஒருவன் இருந்தான். "எப்போதுமே இறைவன் காப்பாற்றுவார்" என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவனுள் பதிந்திருந்தது. ஒருமுறை அந்தக் கிராமத்தில் புயல் வீசியது. பின்னர் மழை பெய்தது. மழையென்றால் பெருமழை. புயலும் மழையும் ஒருசேர அடித்த காரணத்தால் கிராமத்தில் நின்ற மரங்கள் எல்லாம் வேருடன் கீழேசரிய ஆரம்பித்தன. கிராமத்தில் இருந்த பெரிய குளமும் உடைப்பெடுத்தது. கிராமத்தை நீர் சூழ்ந்துகொண்டது. மக்கள் எல்லோரும் வெள்ளத்திலிருந்து தப்பிக்க பலவித உபாயங்களைக் கையாண்டனர். இறைவன் மேல் அதீத ஈடுபாடு கொண்ட அந்தப் பக்தனோ அவர்களைப் பார்த்து கேலியாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.

"நான் இறைவனில் பரிபூரண நம்பிக்கை கொண்டவன். உங்களைப் போல இப்படி பிறந்த கிராமத்தை விட்டு ஓட முயற்சிக்க மாட்டேன். என்னை இறைவன் காப்பாற்றுவான்" என்று சத்தமாகச் செர்ன்னான்.

"அட பைத்தியக்காரப்பயலே" என்று எண்ணியவாறு மற்றவர்கள் பல வழிகளிலும் அங்கிருந்து தப்பிச் சென்றனர். பக்தனுடைய வீட்டுக்குள் வெள்ளமட்டம் ஏறிக் கொண்டே செல்ல அவன் தன் வீட்டுக்கூரையின் மேல் ஏறிநின்று கொண்டு உருக்கமாகக் கடவுளைப் பிரார்த்தனை செய்யத் தொடங்கினான். அப்போது அந்த வழியே ஒரு படகு விரைந்து வந்தது. அதில் பக்கத்துக் கிராம மக்கள் பலர் இருந்தனர். "பக்தன் கூரை மேல் நிற்பதைக் கண்டு "விரைவாக எம்முடன் வந்துவிடு. இருக்க இருக்க வெள்ளம் கூடிவிடும்" என்றனர்.

அவனோ "நீங்கள் போங்கள். என் பிரார்த்தனை பயனளிக்கும். கடவுள் என்னை நிச்சயம் காப்பாற்றுவார்" எனக் கூறி அவர்களை அனுப்பிவிட்டான். இப்போது வெள்ளம் வீட்டின் கூரையைத் தொட்டது. அவன் சட்டெனத் தாவி அங்கிருந்த மரக்கிளையில் ஏறி, அதன் உச்சிக்குப் போய்விட்டான்.

இப்போது மற்றொரு படகு அவ்வழியே வந்தது. மரத்தின் மேலிருக்கும் பக்தன் இரக்கம் கொண்டு படகிலிருந்தவர்கள் அவனைத் தம்மிடம் வந்து விடும்படி அழைத்தனர்.

"இல்லை, நான் கண்டிப்பாக வரமாட்டேன். கூரையிலிருந்து என்னை மரம் இப்போது காப்பாற்றியது. இறைவன் என்னைக் காப்பாற்றியே தீருவார்" என்றான் பக்தன். இந்தப் படகும் அப்பால் சென்றது. அன்றைய தினம் இரவானது தண்ணீர் மளமளவென ஏறி அவன் கால்களைத் தொட அவன் திடுக்கிட்டு கால்களைச் சுருக்கி ஒரு குரங்கு போல கிளைமேல் உட்கார்ந்தான். இருட்டும் நேரத்தில் மற்றொரு படகும் அவ்வழியே வந்தது. அவன் நிலையைப் பார்த்து படகிலிருந்தவர்கள் அவனை அழைத்தனர். அவனோ " இது கடவுளின் சோதனைகளில் ஒன்று. நீங்கள் போங்கள். இந்த பரமபக்தனைக் கடவுள் மறக்கமாட்டார். நான் வரவில்லை" என்றான். படகு அங்கிருந்து மறைய நீர்மட்டம் அதிகரித்தது. பக்தன் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழுந்துபோனான். அவனுக்குள் ஆத்திரம். நான் எவ்வளவு தூரம் கடவுளை நம்பினேன். என்னை ஏமாற்றிவிட்டாரே" என்று பொருமினான். அவன் நேரே பரலோகத்தில் கடவுளிடம் சென்று நியாயம் கேட்டான்.

கடவுள் பெரிதாகச் சிரித்தார். "பக்தனே! நீ என் பக்தன் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. நீ என்னை நோக்கிப் பிரார்த்தனை செய்யும் போது முதல் தடவை ஒரு படகை உன்னைக் காப்பாற்ற அனுப்பினேன். அதில் ஏற மறுத்தாய். மீண்டும் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாய். மனம் பொறுக்காமல் அதன் பின்பும் இரண்டு முறை நீ தப்புவதற்கு படகுகளை அனுப்பினேன். ஆனால் உனக்கு தப்பிச் செல்வதற்கு மூன்று சந்தர்ப்பங்கள் கிடைத்தும் உன் அறிவினால் நன்கு யோசித்தே அவற்றை நிராகரித்தாய். ஒன்றைப் புரிந்துகொள். இவ்வுலகில் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு மனிதனுக்கு உதவக் கடவுள் நேரடியாக வருவதில்லை. இன்னொரு மனிதனையே தனக்குப் பதிலாக உபயோகப்படுத்துகிறார். ஆகவே, மனிதர்கள் ஒவ்வொருவரும் புத்திமான்களாக செயற்பட்டு சந்தர்ப்பங்களை நல்ல முறையில் பயன்படுத்துவது அவர்கள் கையில்தான் உள்ளது. பக்தன் திகைத்து நின்றான். உன் உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பர் என நீ சந்திக்கும் ஒவ்வொரு மனிதனிலும் கடவுளைக் காண். அப்போது மனிதன் தெய்வமாவான். கடவுளின் குரல் அவன் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

# பூகம்பத்துக்கு முன் ஏற்படும் மாற்றங்கள்

உலகெங்கிலும் அவ்வப்போது பூகம்பம், சுனாமி போன்ற இயற்கைப் பேரிடர்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்தப் பூகம்பம், சுனாமி பேரிடர்களின் தாக்குதலுக்குச் சில மணி நேரம் முன்பாக இருந்து சில நாள்கள் முன்பு வரை இயற்கை சூழலிலும் மிருகங்களின் குணாதிசயங்களிலும் சில மாறுதல்களை ஏற்பட்டதைப் பலர் அவதானித்துள்ளனர். இந்த மாறுதல்கள் பற்றி எல்லோரும் அறிந்திருந்தால் நாம் இவற்றை உணரும்போது அருகில் உள்ள காவல் நிலையங்களுக்கோ அல்லது வானிலை ஆய்வு மையங்களுக்கோ தகவல் வழங்கி மக்களைக் காப்பாற்றிட உதவலாம்.

**பாலூட்டிகள்:**- பயந்து ஓடி வெறுப்புணர்வுடனும் கலவரத்துடனும் காணப்படும்.
**மனிதர்கள்**:- தலைவலி, தும்மல், வாந்தி, மயக்கம், இதயக்கோளாறு, நரம்பு மண்டலம் பாதிப்பு, மோசமான வானிலை என்பவற்றை உணர்வார்கள்.
**நாய்கள்:**- அதிக சத்தத்துடன் குரைக்கும், புதிய மனிதர்களைப் பர்ர்த்ததுபோல நடந்து கொள்ளும். தமது எஜமான்களையே கடிக்கும்.
**பூனைகள்:**- கத்தும், மரத்தில் ஏறும், வீட்டை விட்டு வெளியே ஓடிவிடும்.
**தேரைகள், பாம்புகள், பனிக்கரடிகள்:** தமது இருப்பிடத்தை விட்டு நகரும்
**குதிரைகள்:**- தரையில் விழும், கால்களை அடித்துக் கொள்ளும்.
**மாடுகள்** :- கூட்டமாகச் சேர்ந்து கொள்ளும். வீதியில் ஓடும்.
**பன்றிகள்** :- ஒன்றை யொன்று கடித்துக் கொள்ளும். குழி பறிக்கும்.
**மான்கள்** :- புதர்களை விட்டும், காடுகளை விட்டும் வெளியே ஓடிவரும் மனிதர்களைக் கண்டு பயந்து ஓடாது. மாறாக மனிதனுக்கு அருகில் வரும். எந்த ஒரு குறிக்கோளும் இல்லாமல் ஓடும்.
**முயல்கள்**:- துள்ளிக்குதிக்கும், சுற்றிச் சுற்றிவரும்.
**கடல் சிங்கம்**:- வளைந்து வளைந்து நீந்தும். உணவு உண்ண மறுக்கும். கோபமாகக் காணப்படும்.
**டொல்பின்கள்:**- கட்டளைகளுக்கு கீழ்ப் படிய மறுக்கும். நீரைவிட்டு வெளியே வரும். பய உணர்வோடு காணப்படும்.
**வெளவால்:**- பகல் வேளையிலும் அங்கும் இங்கும் பறக்கும்.
**வாத்து:**- நீரில் இறங்காது. பயந்து குரல் எழுப்பும். மனிதர்கள்ளைக் கடிக்கும்.
**சேவல் கோழிகள்**:- இறகை அடித்துக் கொள்ளும், பயந்து காணப்படும். நள்ளிரவிலும் கூவும்.
**பெட்டைக்கோழி:**- முட்டை இடாது. இருகருவுள்ள முட்டைகளை இடும்.
**தேனீக்கள்**:- கூட்டைவிட்டு வேகமாக வெளியே வரும்.
**மண்புழுக்கள்:**- பூமியை விட்டு வெளியேறி, அங்கும் இங்கும் அசையும்.
**மீன்கள்:**- ஒரே திசையில் மிதக்கும் நீரை விட்டு வெளியே வரும். தலைகீழாக நீந்தும். ஆழ்கடல் மீன்கள் கரைக்கு வரும். உணவு உண்ணாது. கடல் மீன்கள் ஆற்றுக்கு வந்து விடும். மேலும் பல பிராணிகளின் மர்றுபட்ட நடத்தைகள் அவதானிக்கப்பட்டுள்ளன.



# ஆசிரியரும் மாணவனும்

*ஆசிரியர்*– 100 இல் ஒன்று போனால் மீதி எவ்வளவு?
*மாணவன்*– 00

*ஆசிரியர்*– உன்னை விட அவன் சின்னப்பையன். அவனை எதுக்கு அடிச்சாய்? கையை நீட்டு...!
*மாணவன்*– நீங்களும் அதே தப்பைத்தானே சேர் செய்யுறீங்கள்.

*ஆசிரியர்*– நீ படிச்சு முடிச்ச பின்பு, என்ன் செய்யலாம் என்று இருக்கிறாய்.
*மாணவன்*– புத்தகங்களை மூடி வைச்சிடலாமென இருக்கிறேன்.

*ஆசிரியர்*– ஏன் பக்கத்துப் பையனைப் பார்த்துப் பார்த்து பரீட்சை எழுதுகிறாய். படிக்கவில்லையோ?
*மாணவன்*– படித்தேன் சேர், ஆனால் .அப்பா தான் பரீட்சையை நன்றாக பார்த்துப் பார்த்து எழுது என்றார்.

*ஆசிரியர்*– சுத்தம் சோறு போடும்.
*மாணவன்*– அப்படியென்றால் எது சேர் குழம்பு ஊத்தும்.



நகைச்சுவை
உணர்ந்து
களிப்போம்




*ஆசிரியர்*– நாயின் படம் கீறச் சொன்னேன். அதில் வாய் மட்டும் கீறாமல் விட்டு விட்டாய்.
*மாணவன்*– அது வாயில்லா ஜீவன் சார்.

*ஆசிரியர்*– தேள் கொட்டி னால் முதலில் நீ என்ன செய்வாய்?
*மாணவன்*– உடனே பாடசாலைக்கு லீவு போடுவேன்.

# பின்புலக் கதிர்வீச்சு

## பிரபஞ்ச அசைவியக்கத்தில் தெளிவுபெறும் மின்காந்த அலைப்பொருள்



செ.தமிழ்நம்பி

'அர்னோ பென்சியாஸ்', 'ராபர்ட் வில்சன்' ஆகிய இருவரும் 'பெல்' ஆய்வகத்தில் பணிபுரிந்த ரேடியோ வானியல் வல்லுநர்கள். இவர்கள் 1964 ஆம் ஆண்டு ஆய்வில் பயன்படுத்திய தொலைத் தொடர்பு அண்டனா (மின் காந்த அலைகளை மின்னியல் சைகையாக மாற்றும் கருவி 'விண்ணலைக் கம்பி' எனப்படுகிறது.) சைகையுடன் தேவையற்ற இரைச்சலையும் உள்வாங்கிக்கொண்டிருந்தது. அதனால் ஆய்வை மேற்கொள்ள முடியாமல் தடுமாறினர். இரைச்சலை நீக்க ஒரு வருடமாக பல வழிகளில் முயன்றனர். மின் அமைப்புகளை சரிசெய்தனர். கருவிகளை மாற்றி அமைத்தனர். மின் சுற்றுகளை சரி பார்த்தனர். மின்கம்பிகளைப்பிரித்து மீண்டும் இணைத்தனர். அண்டனாவை சுத்தம் செய்து அனைத்து இணைப்புகளையும் கவனமாக அடைத்தனர். ஆனால் எந்த முயற்சியும் பலனளிக்கவில்லை. இரவு பகலாக, எல்லாப் பருவ காலத்திலும் நிரந்தரமாக மாறாமல் வானத்தின் அனைத்துத் திசைகளிலிருந்தும் அந்த இரைச்சல் வந்து கொண்டே இருந்தது.

### பெருவெடிப்பில் எஞ்சிய கதிர்வீச்சு

'பெல்' ஆய்வகத்தில் இருந்து 30 மைல் தொலைவில் உள்ள பிரின்ஸ்டன் பல்கலைகழகத்தில் இன்னொரு அறிவியலாளர்கள் குழு 'ராபர்ட் டிக்கி' என்பவர் தலைமையில் இயங்கிக் கொண்டிருந்தது. பெல் வானியல் வல்லுநர்கள் எந்த இரைச்சலை நீக்க முயன்றார்களோ, அதை அந்தக் குழு மிகக் கவனமாக தேடிக் கொண்டிருந்தது. 'எம்மை சூழந்துள்ள வெளியில் உண்மையில் பிரபஞ்சம் முழுவதும் பெருவெடிப்பில் எஞ்சிய கதிர்வீச்சை இப்போதும் நாம் காண முடியும்' என்று ரஷ்யாவில் பிறந்த 'ஜார்ஜ் கேமவ்' என்ற அறிவியலாளர் 1940 ஆம் ஆண்டு ஓர் ஊகத்தை முன்வைத்தார். அந்த ஊகத்தை பற்றியே பிரின்ஸ்டன் குழு ஆய்வு செய்து கொண்டிருந்தது. 'அந்த அலைகளை கண்டுபிடிக்க பெல் ஆய்வகத்தில் உள்ள அண்டனாவை ஏற்பியாகப் பயன்படுத்தலாம்' என்றும் தன் ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் பென்சியாஸ் மற்றும் வில்சன் அதை வாசித்திருக்கவில்லை.


### மின்காந்த அலைகளின் ஊகம்

உண்மையில் கேமவ் ஊகித்த அந்த மின்காந்த அலைகளைத்தான் பென்சியாஸ் மற்றும் வில்சனின் அண்டனா இரைச்சலாக ஏற்றுக்கொண்டிருந்தது. அவர்கள் பிரபஞ்சத்தின் எல்லையை அல்லது 90 பில்லியன் டிரில்லியன் மைல்களுக்கு அப்பால் அமைந்த, நாம் பார்க்க இயலும் பிரபஞ்சத்தின் எல்லையை அந்த இரைச்சல் மூலம் கண்டனர். அவர்கள் பார்த்தது பெருவெடிப்பின் போது உருவாகிய, பின் பிரபஞ்சம் முழுவதும் பரவியுள்ள ஆதி ஒளியையே.

பெல் வல்லுநர்களைச் சந்தித்து அவர்கள் கண்டறிந்த இரைச்சலின் மூலத்தையும் முக்கியத்துவத்தையும் 'ராபர்ட் டிக்கி' விளக்கினார். அதன் பிறகு, வானியற்பியல் ஆய்விதழ் இரு கட்டுரைகளை வெளியிட்டது. ஒன்றில் பென்சியாஸ் மற்றும் வில்சன் ஆண்டனா இரைச்சலைப் பற்றி விவரித்திருந்தனர். மற்றொன்றில் ராபர்ட் டிக்கி அதன் சிறப்பம்சத்தை விளக்கியிருந்தார். பெல் வல்லுநர்கள் பின்புல கதிர்வீச்சைப் பற்றி எதையும் அறிந்திருக்கவில்லை. ஆனால் பின்புலக் கதிர்வீச்சுக் கண்டுபிடிப்புக்காக, 1978 ஆம் ஆண்டின் இயற்பியல் நோபல் பரிசு அவர்களுக்கு கிடைத்தது. ராபர்ட் டிக்கி குழுவுக்கு ஆறுதல் மட்டும்தான் கிடைத்தது. "பென்சியாஸ் மற்றும் வில்சன் தங்களின் கண்டுபிடிப்பின் முக்கியத்துவத்தை நியூயார்க் டைம்ஸ் செய்தியை பார்க்கும் வரை உணரவில்லை" என்று 'டென்னீஸ் ஓவர்பை' என்பவர் தன் நூலில் குறிப்பிடுகிறார்.

### பின்புல கதிர்வீச்சு - எளிய விளக்கம்

பிரபஞ்சத்தின் குழந்தைப் பருவத்தில் நட்சத்திரங்களும், கோள்களும் உருவாகவில்லை. அது மிகுந்த அடர்த்தியும் வெப்பமும் கொண்ட தீப்பந்தாக (பிளாஸ்மா நிலையில்) இருந்தது. பிரபஞ்சம் விரிவடையத் தொடங்கியதும் குளிர ஆரம்பித்தது.



ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் அணுக்கருத் துகள்களும், எலக்ட் ரோன்களும் இணைந்து அணுக்கள் உருவாகின. அதன் பிறகு இந்தப் பிரபஞ்சம் ஒளி ஊடுருவிச் செல்லும் வெளியாக மாறியது. அதற்கு முன் ஒளி மீண்டும் மீண்டும் (பருப்பொருள்) துகள்களினால் சிதறகடிக்கப்பட்டது. அவை துகள்களுடன் பிணைக்கப்பட்டிருந்தது போன்ற ஒரு நிலையாக அமைந்திருந்தது.

பெருவெடிப்பில் இருந்து 3 இலட்சத்து 80 ஆயிரம் வருடங்கள் வரை பிரபஞ்சம் இந்த நிலையில் இருந்தது. எந்தப் புள்ளிகளிலிருந்து ஒளி வெளியைச் சுதந்திரமாக ஊடுருவ ஆரம்பித்ததோ, அந்தப் புள்ளிகளை இறுதி ஒளிச்சிதறல் பரப்பு என்று கூறலாம். இந்தப் பரப்பிலிருந்து வெளியை ஊடுருவ ஆரம்பித்த ஆதி ஒளித்துகள்கள்தான் இன்று வெளியெங்கும் பரவியுள்ளது. பிரபஞ்சம் தொடர்ந்து விரிவடைவதால் அதை ஊடுருவிச் செல்லும் அந்தத் துகள்களின் அலைநீளம் அதிகரித்தும், ஆற்றல் குறைந்தும் அதன் நிறமாலை நுண்ணலைப் பகுதியில் உச்சம் கொண்டுள்ளது.

பிரபஞ்ச நுண்ணலைக் கதிர்வீச்சை ஒரு முழுக்கரும்பொருள் (Black body) கதிர்வீச்சின் நிறமாலையுடன் ஒப்பிடலாம். முழுக்கரும்பொருள் என்பது ஓர் இயற்பியல் கருத்துருவாகும். அது தன் மீது விழுகின்ற மின்காந்த கதிர்வீச்சு அனைத்தையும் உட்கவர்கிறது. வெப்பச் சமநிலையில் உள்ள கரும்பொருள் அந்த வெப்பநிலைக்கு உரித்தான மின்காந்தக் கதிர்வீச்சை உமிழ்கிறது. பிரபஞ்ச நுண்ணலை கதிர்வீச்சின் கரும்பொருள் வெப்பநிலை '2.725 0.001' கெல்வின். இது தனிச் சுழி வெப்ப நிலையிலிருந்து ( பூச்சியம் கெல்வின் அல்லது 273 பாகை செல்சியஸ்) சற்று அதிகம். பின்புல கதிர்வீச்சின் உச்ச அலைநீளம் நுண்ணலைப் பகுதியில் உள்ளது. அதன் அலைநீளம் 1.9 மில்லி மீற்றர்.

### நுண்ணாய்வுகள்

பூமியின் மேற்பரப்பில் கருவிகளை அமைத்து பின்புலக் கதிர்வீச்சை அளவிடுவது கடினம். ஏனென்றல் வளிமண்டலமும் பிற தேவையற்ற கதிர்வீச்சும் அளவீட்டில் இடர்பாடுகளை ஏற்படுத்தும். துல்லியத்தை குறைக்கும். கருவிகளை விண்வெளியில் ஏவி இன்னும் துல்லியமாக அளக்கலாம்.

பின்புல கதிர்வீச்சை ஆராய மூன்று முக்கியமான செயற்கைக்கோள்கள் ஏவப்பட்டன. இவை கதிர்வீச்சை வானத்தின் அனைத்துத் திசைகளிலும் ஆராய்கிறது. எடுக்கப்படும் அளவீடுகள் கணினி மூலம் பிரபஞ்சத்தின் நுண்ணலை நிழற்படங்களாக வரையப்படுகின்றன.

(24ஆம் பக்கம் பார்க்க...)



## மரண அறிவித்தல்

### கோடீஸ்வரி (மணி அக்கா) கிருஷ்ணசாமி



தொல்புரம் மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கோடீஸ்வரி (மணிஅக்கா) கிருஷ்ணசாமி நேற்று (12.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - தங்கம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், வைத்திலிங்கம் மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ரவிச்சந்திரன் (சிரேஷ்ட பரிசுரகர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை), ராஜேந்திரன் (ஆய்வு கூட உதவியாளர், யா/யாழ்ரன் கல்லூரி, காரைநகர்), ரவேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மகாலட்சுமி (ஆங்கில ஆசிரியர், யா /தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை & யா/மூளாய் அ.மி.த.க. பாடசாலை), அமுதசுரபி, குயேந்தி (ஆசிரியர், தொல்புரம் சக்தி முன்பள்ளி) ஆகியோரின் அன்பு மாமியும் நிரோஜன் (முகாமைத்துவ மற்றும் வணிகபீடம், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில்), யா/சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி மாணவர்களான நிஷாந்தன், பிரணவன், இந்துமதி, யா/வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மாணவர்களான நிறஞ்சன், சிவகௌரி, தட்சாயினி, பிரியங்கா (யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), ஹவிதரன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2017) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் மத்தி.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை தம்பையா



கீரிமலை வீதி, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தம்பையா நேற்று (12.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மாணிக்கத்தின் அன்புக் கணவரும் சிவநேசன், தவறஞ்சினி, கேதீஸ்வரன், புவனேஸ்வரன், மனோறஞ்சினி, சிவரஞ்சினி ஆகியோரின் அன்புத்தந்தையும் மங்கையற்கரசி, குணசேகரம், றஜனி, சந்திரகலா, தவேந்திரம், நவேந்திரன் ஆகியோரின் மாமனாரும் சிவரஞ்சன், சிந்துஜா - நிஜந்தன், சிவாஞ்சலன் - யௌசிகா, நிறஞ்சலா - நிசாந்தன், நிலானி, குகந்தினி - லதீப், குணாஸ், குணேஸ், குபேராஜ், றஞ்சித், நிறோஜன், லஜித், மவிந்தனா, சதுர்சன், புவிராஜ், கபிராஜ், தர்சினி ஆகியோரின் பேரனும் விசாளினி, ஜிதுசனா, யோகிதா, சியானு, அனுந்திகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2017) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கீரிமலை வீதி, சித்தன்கேணி.** **தகவல்: குடும்பத்தினர் 077 3162 145**

### திருமதி இராஜேஸ்வரி கதிர்காமநாதன்



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி கதிர்காமநாதன் நேற்று (12.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கதிர்காமநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - உமையம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான கணேசலிங்கம், குமாரலிங்கம் மற்றும் நடேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிகேதனன், கீதா, கவிதா, வனிதா, தனஞ்சயன் (கனடா) ஆகியோரின் தாயாரும் தயாபரன், தர்சன், நீருஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் பவிந்திரன், பிரியா, பர்மிளா, கவிப்பிரியா, டிலக்சன், அக்சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2017) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பித்து மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மீசாலை மேற்கு, மீசாலை. 077 400 2740, 076 483 2278** **தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி கலாநிதிஅம்மா இராமகிருஷ்ணசர்மா



வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும் நுணாவில், மணங்குணாய் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாநிதிஅம்மா இராமகிருஷ்ண சர்மா நேற்று (12.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியஐயா - கமலாம்பிகை தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற இராமகிருஷ்ணசர்மாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குமாரசாமிஐயர் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கஜராஜக்குருக்கள் (மணங்குணாய் பிள்ளையார் கோவில், நுணாவில்), கஸ்தூரி, கஜந்தினி ஆகியோரின் பாசமிகு தாயும் சுபாசினி, மாதுளசர்மா (அரியாலை, வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்மன் கோவில்) ஆகியோரின் பாசமிகு மாமியும் சண்முகநாதசர்மா (வறுத்தலைவிளான்), முருகானந்தசர்மா (யாழ்ப்பாணம்), குகதாஸ்சர்மா (ஊரெழு), மகேஸ்வரக்குருக்கள் (கொழும்பு), இராஜேஸ்வரசர்மா (வறுத்தலைவிளான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிதம்பரேஸ்வரசர்மா (அச்செழு), தவளாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் பத்மாசினி, கஜவர்சன், சண்ஜினி, சாய்ஹரி, ஜாதனா, மதுஷயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நுணாவில், மணங்குணாய் பிள்ளையார் கோவிலடியில் அமைந்துள்ள இல்லத்தில் இன்று (13.11.2017) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி, நுணாவில், குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சாவகச்சேரி. 077 664 6691, 077 711 0874** **தகவல்: குடும்பத்தினர்.**

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 214
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 12.11.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 78,868,932/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
K 08 55 65 78
தொ.பே: 011 4062027 / 0114062062 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 74
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2017.11.12
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 50,278,020/-
வெற்றி இலக்கங்கள்
04 45 56 66 J
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

Galaxy Star
வெற்றி வாரம் 211
திகதி 2017.11.12
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
08 01 30 32 47
அடுத்த புதன்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 4, 262, 492/-
விசேட இல.
9900048 3775927 7653466 6184785 4381012
2017.11.15 ஆம் திகதி புதன்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 12.11.2017 வெற்றி வாரம் 2210 வர்ணம் ஊதா
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 17 36 58 60
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,160,800/=
2017.11.14 ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## விழிநீர் சொரிகின்றோம்

எமது குருகுல ஆசிரியரும் சர்வசாதகரும் நூலாசிரியருமான பிரம்மஸ்ரீ **சிவானந்தசர்மா** அவர்களின் அன்புத்தாயார்

**ஸ்ரீமதி இராசாத்தியம்மா பஞ்சாட்சரசர்மா**

காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அமரர் சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணியக்குருக்கள் குருகுல மாணவர்களும் பெற்றோர்களும், சிவஸ்ரீ நா. பாலஸ்கந்தரூபக்குருக்கள் (காரைநகர்) 48, 2ஆவது ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

**சிவானந்தசர்மா (கோப்பாய்சிவம்)** அவர்களின் அன்புத்தாயார்

**இராசாத்தியம்மா பஞ்சாட்சரசர்மா**

காலமான செய்தி கேட்டு துயரடைகின்றோம். அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**நீர்வேலி தெற்கு ஸ்ரீமுருகையன் ஆலய குரு, அடியார்கள்.**

## கண்ணீர் அஞ்சலி

**சிவானந்தசர்மா (கோப்பாய்சிவம்)** அவர்களின் அன்புத்தாயார்

**இராசாத்தியம்மா பஞ்சாட்சரசர்மா**

காலமான செய்தி கேட்டு மிகுந்த அதிர்ச்சியடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ மனோன்மணி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**நீர்வேலி தெற்கு ஸ்ரீமனோன்மணி ஆலய அறங்காவலர், அடியார்கள்.**

## ஹ்ருதயாஞ்சலி

**எமது குருகுல ஆசிரியர் ப்ரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா**
அவர்களின் அன்புத் தாயார்

**ஸ்ரீமதி இராசாத்தியம்மா பஞ்சாட்சரசர்மா**

அவர்கள் 10.11.2017 வெள்ளிக்கிழமை காலமான செய்திகேட்டு நெஞ்சம் துணுக்குற்றோம். தாயாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னையின் ஆத்மா சாந்திபெற கற்பக விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

अस्थिरं जीवितं लोके अस्थिरं धन यौवनम् ।
अस्थिरं दार पुत्रादि धर्म कीर्ति द्वयं स्थिरम् ॥

**ஸ்ரீ கற்பக விநாயகர் குருகுலம், வாரிவளவு காரைநகர்.**

# பின்புலக் கதிர்வீச்சு

(23ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**'கொப்' செயற்கைக் கோள்**

1989 ஆம் ஆண்டு நாசா 'கொப்' (COBE Cosmic Back ground Explorer) செயற்கைக்கோளை ஏவியது. நுண்ணலை மற்றும் அகச்சிவப்பு கதிர் அலைநீளங்களில் (1 மைக்ரோமீற்றரிலிருந்து 1 சென்றிமீற்றர் வரை) வானத்தின் அனைத்துத் திசைகளில் இருந்தும் வரும் கதிர்வீச்சின் நிறமாலையையும், சீரற்ற தன்மையையும் அளப்பது இதன் குறிக்கோள்.
உண்மையில் வெப்பநிலை சீரானதாக, ஒரே அளவில் இல்லை.
இடத்துக்கு இடம் மிக மிகச் சிறிய அளவில் (ஒரு இலட்சத்தில் ஒரு பகுதி). மாறுபடுகிறது.
இதன் முடிவுகள் பெரு வெடிப்புக் கொள்கையை உறுதிசெய்தது. மேலும் பெருவெடிப்பு கொள்கையில் உள்ள சில பிழையான கருத்தாக்கங்களை களைந்தது.

**'மப்' செயற்கைக் கோள்**

நாசா 'கொப்' (COBE) செயற்கைக் கோளைத் தொடர்ந்து 'மப்' (WMAP Wilkinson Microwave Anisotrophy Probe) செயற்கைகோளை 2001 ஆம் ஆண்டு அனுப்பியது. இதுவும் நுண்ணலைக் கதிர்வீச்சின் வெப்பநிலை வேறுபாடுகளை மேலும் துல்லியமாக அளவிட்டது.
இந்த அளவீடுகள் பிரபஞ்சத்தின் தொடக்கம், ஆக்கக் கூறுகள், வயது, வடிவம் போன்றவற்றை தீர்மானிக்க உதவின. உதாரணமாக, இது பிரபஞ்சத்தின் வயது 13.77 பில்லியன் வருடங்கள் என்று கணக்கிட்டது. அதாவது பெருவெடிப்பு நிகழ்ந்து தற்போது வரை 13.77 பில்லியன் வருடங்கள் ஆகிவிட்டன. எமது பிரபஞ்சம் யூக்ளிடிய வடிவவியல் விதிகளுடன் ஒத்துப்போகிறது என்றும் நிறுவியது. மேலும் பருப்பொருள், எதிர்ப் பருப்பொருள், அறியப்படாத பருப்பொருள், அறியப்படாத ஆற்றல் போன்றவற்றின் அளவை அறிய உதவியது.
'மப்' (WMAP) இனைத் தொடர்ந்து பிளாங்க் (Planck) செயற்கைக்கோளை ஐரோப்பிய விண்வெளி கழகம் 2009 ஆம் ஆண்டு அனுப்பியது. இது ஆகச்சாத்தியமான, துல்லியமான அளவீடு கருவிகளைக் கொண்டு பின்புல கதிர்வீச்சை ஆராய்கிறது. இதன் தரவுகள் பிரபஞ்சத்தின் மொத்த அணுக்களின் எண்ணிக்கை, அறியப்படாத ஆற்றலின் தன்மை போன்றவை பற்றி மேலும் அறிய உதவும். பிரபஞ்சத்தின் ஆரம்ப நிலையில் உள்ள சீரற்ற அடர்த்தி எப்படி பிரம்மாண்டமான விண்மீன் திரள்களையும், விண்மீன்திரள் கொத்துகளையும், வெற்றிடத்தையும் உருவாக்கின என்பதை தீர்மானிக்கப் பயன்படும். பிரபஞ்சக் கட்டமைப்பு, பரிமாணம் தொடர்பான கோட்பாடுகள் சோதனைக் குட்பட்டு நிரூபிக்கப்படும்.

**பிரபஞ்ச பிறப்பின் பொலிவு**

உண்மையில் பிரபஞ்ச நுண்ணலை பின்புல கதிர்வீச்சை நாம் நன்கு அறிவோம். நம் தொலைகாட்சிப் பெட்டியை ஒளிபரப்பப்படாத அலைவரிசையில் வைத்தால், நாம் காணும் நடனமிடும் வெண்கரும்புள்ளிகள் (Static) பெருவெடிப்பின் எச்சம் தான். இனித் தொலைகாட்சியில் ஒன்றும் தெரியவில்லை என்று கவலை கொள்ளவேண்டியதில்லை. நாம் பிரபஞ்சத்தின் பிறப்பின் பொலிவைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்துகொள்வோம்.

## எமது...

தவாறு மாற்றங்களை ஏற்படுத்தி எமக்குரிய சலுகைகளை, உரிமைகளை, உரித்துக்களை திருப்பித் தருவதாக இருந்தால் அதற்கு நாம் ஆட்சேபணை தெரிவிக்கவும் தேவையில்லை. அவற்றை ஏற்கின்றோம் என்று கூறவேண்டிய அவசியமும் எமக்கில்லை.

அரசு தனது பெரும்பான்மைப் பலத்தை உபயோகித்துத் தாம் இதுவரை காலமும் செய்த அரசியல் பிழைகளை மனதில் வைத்து சில மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும் என்று நினைத்தால் அதற்கு நாம் எதிர்ப்புமில்லை; ஏற்புமில்லை. எனினும் குறைவாகத் தருவனவற்றை நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்ற அடிப்படையில் மேலும் எதுவும் தரவேண்டிய அவசியம் தமக்கில்லை என்று அரசு நினைத்துவிடக்கூடாது.

சிங்கள மக்கள் தலைவர்கள் அரசியல் அதிகாரங்கள் அனைத்தையும் பிரதேசவாரியான தேர்தல்கள் மூலம் பெரும்பான்மையினர்களுக்குப் பெற்று தம்வசம் அதிகாரங்களைக் கையகப்படுத்தியதனாலேயே எமது அரசியல் பிரச்சினையானது உருவானது. தொடர்ந்தும் சர்வாதிகாரங்களும் தம் வசம் இருக்கவேண்டும் என்றும் அவற்றிலிருந்து எமக்கு சில அதிகாரங்களைப் பங்கிட்டுக்கொள்ள முன்வருவதாகவுமே அவர்களின் நடவடிக்கைகள் இன்று அமைந்துள்ளன.

தொடக்கத்தில் இருந்தே தமிழ் மக்கள் சுயநிர்ணய உரித்தைப் பெற்றிருந்தவர்கள் என்ற அடிப்படை உண்மையை அவர்கள் தட்டிக் கழிக்கப் பார்க்கின்றார்கள். அதிகாரப் பரவலாக்கம் என்பது பல்லினங்களின் ஒப்புதலோடு நடைபெறவேண்டுமே தவிர பெரும்பான்மையினரிடமிருந்து எமக்குத் தரப்படும் அவர்களின் கொடைச் சிந்தனையின் வெளிப்பாடாக இருக்கக்கூடாது. அவ்வாறு கொடைச் சிந்தனையின் வெளிப்பாடாகத் தருவனவற்றை நாங்கள் எதிர்க்கவும்கூடாது; ஏற்கவும் கூடாது. நடைமுறைச் சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்த அரசு முன்வந்தால் அவற்றுக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம். ஆனால் நாங்கள் எங்களுடைய அடிப்படைக் கோரிக்கைகளில் இருந்து சற்றேனும் இறங்கிவரவும் மாட்டோம். சிங்களப் பெரும்பான்மையினர் தர முன்வரும் அரசியல் சலுகைகள் எம்மிடமிருந்து அவர்கள் ஏற்கனவே பறித்துக் கொண்டவையே தவிர அவர்களுக்குரிய உரித்துக்கள் அல்ல. இந்த அடிப்படையிலேயே நாம் அரசு தர இருக்கும் எந்த அரசியல் சலுகைகளையும் எதிர்நோக்கவேண்டும். எமது தலைவர்கள் அரசு தருவதை முறையான தீர்வு அல்லது முற்றுமுழுதான தீர்வு என்று ஏற்றுக் கொண்டார்களானால் பின்னர் எம்மை அரசு குறை கூறும். நீங்கள் ஏற்றுக் கொண்டதைத்தான் நாம் ஏற்கனவே தந்துவிட்டோமே. பின் எதற்காக மேலும் உரித்துக்கள், உரிமைகளைக் கோருகின்றீர்கள் என்று எம்மிடம் கேட்பார்கள். இந்த நிலை வர இடமளிக்கக் கூடாது -என்றார். (உ-5.101)

## முஸ்லிம்களையும்...

வவுனியா, நவ. 13

அரசியல் தீர்வு விடயத்தில் நாம் முஸ்லிம்களையும் அரவணைத்து தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் ஓரணியிலேயே பயணிப்போம். புதிய அரசமைப்பில் தமிழ் பேசும் மக்கள் ஏற்காத எந்தத் தீர்வையும் நாம் ஏற்கமாட்டோம். வெளிவந்திருப்பது இடைக்கால அறிக்கையே தவிர இறுதி அரசமைப்பு அல்ல.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதுள்ள சந்தர்ப்பம் கடந்த காலங்களில் ஏற்பட்டிருக்கவில்லை. சந்தர்ப்பத்தை நாம் நழுவ விடக்கூடாது. சரியாகப் பயன்படுத்த வேண்டும். அதற்காகவே நாம் புதிய அரசமைப்புப் பணிகளுக்கான செயற்பாடுகளுக்கு ஆதரவளித்து வருகின்றோம்.

உயர் நீதிமன்றத்தில் எமது கட்சியின் கொள்கையைக் காரணம் காட்டி வழக்கு தொடரப்பட்டிருந்தது. மாவை சோ.சேனாதிராசா அப்போது செயலராக இருந்தமையால் அவருக்கு எதிராக வழக்கைத் தொடர்ந்தார்கள். தமிழ் அரசுக் கட்சியின் கூட்டாட்சிக் கொள்கை நாட்டைப் பிரிப்பதாக உள்ள, அதனை தடைசெய்ய வேண்டும் என்று அறிவிக்க வேண்டும் என்று கூறினார்கள். வழக்கில் முன்னிலையான சட்டத்தரணிகளான கனகஈஸ்வரன், சுமந்திரன் அகியோர் பன்னாடுகளில் உள்ள கூட்டாட்சி வடிவங்களை உதாரணமாகக் கூறினார்கள். பல்வேறு வாதங்களை முன்வைத்தார்கள். கூட்டாட்சி பிரிவினை அல்ல என்று நீதிபதிகள் தீர்ப்பை அறிவித்தார்கள். இந்த தீர்ப்பை அறிவித்தவர்கள் சிங்கள நீதிபதிகளே என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். நீதித்துறையின் சுயாதீனம் தொடர்பாகவும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

தற்போது வெளிவந்துள்ள புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் வார்த்தைகளை மையமாக வைத்து விமர்சனம் செய்கின்றார்கள். ஒருமித்த நாடு என்பது நாடு ஒருமித்து, பிளவுபடாதிருப்பதையே குறிக்கின்றது. அது ஆட்சி முறைமையைக் குறிக்கவில்லை. அதனைப் புரிந்துகொள்ளவேண்டும்.

எமது விடயங்களை நாமே கையாளக்கூடிய வகையில் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்பதையே கோருகின்றோம். வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெறப்பட்டு விடக்கூடாது என்பது உறுதியாக இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடும். இடைக்கால அறிக்கையில் அதிகாரப்பகிர்வு தொடர்பாக விடயங்கள் முன்னேற்றகரமாகக் காணப்படுகின்றன.

அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்பது தனியே தமிழ் மக்கள் சார்ந்தவொரு விடயம் அல்ல. அதிகாரங்களை சிங்கள மக்கள் உள்ளிட்ட அனைவரும் பயன்படுத்த வேண்டும். கொழும்பிடமிருந்து அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். அதிகாரப்பகிர்வு என்ற விடயத்தினை இனரீதியாகப் பார்க்கக்கூடாது. அது நாட்டின் அனைத்து மக்களுக்கும் உரியானதொன்றாகவே பார்க்கவேண்டும். இந்த மனநிலை அனைத்து மக்கள் தரப்பினரிடத்திலும் ஏற்பட வேண்டும்.

பௌத்த மதத்துக்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாகக் கூறுகின்றார்கள். பௌத்த மதத்துக்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ளமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று விமர்சிக்கின்றார். இடைக்கால அறிக்கையில் பௌத்த மதத்துக்கு முதலிடம் வழங்கப்பட்டுள்ள அதேநேரம் ஏனைய மதங்களுக்கும் சமத்துவம் அளிக்கப்படவேண்டும் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய மதங்களுக்கான உரிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு விடயம். இந்திய -இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்து இருந்தன. தொடர்ச்சியாக 18ஆண்டுகளாக இந்த மாகாணங்கள் இணைந்தே செயற்பட்டன. நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் இந்த இரண்டு மாகாணங்களும் தனித் தனியாக்கப்பட்டுள்ளன என்பதை வடக்கு -கிழக்கு தொடர்பாக கருத்து வெளியிடுபவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

வடக்கும் கிழக்கும் இணைக்கப்படவேண்டும். அவ்வாறு இணைக்கப்படுவதற்கு வடக்கு கிழக்கில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். பொது வாக்கெடுப்பு நடத்தப்படுகின்றபோது சகோதர முஸ்லிம் சமூகத்தினால் முன்வைக்கப்படும் நியாயமான கோரிக்கையை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அது கரையேர மாவட்டமாக இருக்கலாம். அல்லது நிலத்தொடர்பற்ற தனியலகாக இருக்கலாம். அவர்களின் நியாயமான கோரிக்கையை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் அதேநேரம் இரு சமூகங்களும் தமிழ் பேசும் சமூகங்களாக ஒன்றுபட்டு வாக்களிக்கும் கருமத்தில் பங்கேற்க வேண்டும்.

தற்போது இடைக்கால அறிக்கையொன்றே முன்வைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான விவாதங்கள் அரசமைப்புச் சபையிலே நடைபெற்று வருகின்றன. இதில் சில பல மாற்றங்கள் ஏற்படலாம். புதிய அரசமைப்புக்கான இறுதி வரைவுக்காக இன்னும் பயணிக்க வேண்டியுள்ளது. இறுதி வரைவு உருவாக்கப்பட்ட பின்னர் அந்த வரைவுடன் நாம் மக்களிடத்தில் செல்வோம். மக்கள் அதனை ஏற்கவில்லையென்றால் நாம் நிச்சயமாக அதனை ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

தற்போது ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தைக் குலைத்துவிடக்கூடாது. குழப்பி விடக்கூடாது. நாம் இறுதிவரையில் முயற்சிக்கவேண்டும். இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கருமங்களைத் துரிமாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. இடைக்கால அறிக்கை தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் மகிந்த அணியினர் தவறான பரப்புரைகளைச் செய்கின்றார்கள். எமது தரப்பில் உள்ளவர்களில் சிலர் இடைக்கால அறிக்கை தொடர்பில் விளங்கியும் விதண்டாவாதம் செய்கின்றார்கள். அதேபோன்று இன்னும் சிலர் இடைக்கால அறிக்கை தொடர்பாக விளங்காது விதண்டாவதம் செய்கின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைக் குழப்பாது அனைவரும் ஒன்றாக இந்தக் கருமங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியம் - என்றார். (உ-5.31)

## புதிய அரசமைப்பு...

இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அநுராதபுரம் அறிவிப்பில் நேற்றுத் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தாமரை மொட்டுச் சின்னத்திலேயே தமது அணி போட்டியிடும் என்பதையும் அவர் நேற்று உறுதிசெய்தார்.

2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான முதலாவது பரப்புரைக் கூட்டமும், புதிய அரசமைப்புக்கு எதிரான அநுராதபுரம் அறிக்கை வெளியீடும் நேற்று இடம்பெற்றன. ஆயிரக்கணக்கில் மக்கள் அணி திரண்டிருந்த னர். மகிந்த அணியில் உள்ள பங்காளிக் கட்சித் தலைவர்களும் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்ததாவது:

2018ஆம் ஆண்டுக்காக முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் எவ்வித மானியமும் வழங்கப்படவில்லை. மக்கள் மீது சுமையே திணிக்கப்பட்டுள்ளது. நிலமை இப்படியிருக்கும்போது பியருக்கான விலை குறைக்கப்பட்டுள்ளது. சாதாரண மக்கள் பயன்படுத்தும் மூக்குக் கண்ணாடிக்குக்கூட வரி விதிக்கப்பட்டுள்ளது. மக்கள் ஆணைக்குப் புறம்பாக தலைமை அமைச்சர் பதவியை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கியதாலேயே இந்த நிலமை ஏற்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஒரு மாதத்துக்குள்ளேயே கொள்ளை ஆரம்பித்துவிட்டது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். எனது ஆட்சியின் கீழ் 10 ஆண்டுகள் இருந்துவிட்டு வெளியேறிய பின்னர்தான் அவர் எம்மை திருடன் என்றார். ஆனால், ஈராண்டுகளுக்குள்ளேயே கூட்டு அரசு அவருக்கு புளித்துப் போயுள்ளது. இனியும் இந்த அரசால் மக்களை ஏமாற்றமுடியாது. மக்கள் விழிப்படைந்துவிட்டனர்.

முதலீட்டாளர்கள் பயந்தோடுகின்றனர். பொருளாதாரம் பின்னடைவைச் சந்தித்துள்ளது. 10 வருடத்தில் நாங்கள் பெற்றுக்கொண்டிருந்த கடனை போர் இல்லாத சூழலில் 3 வருடங்களில் பெற்றுள்ளனர். ஆனால், நாட்டில் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலைக்கூட போராடிதான் பெறவேண்டியுள்ளது. இந்த அரசுக்கு மக்கள் தக்க பாடம் புகட்டவேண்டும். நல்லிணக்கம் என்ற போர்வையில் நாட்டைக் கூறுபோட முயற்சிக்கின்றனர். எம்பக்கமே மக்கள் வெள்ளம் திரண்டுள்ளது. கோவணத்துடன் ஓடுவதற்கு அரசு தயாராக இருக்கவேண்டும். மக்கள் உரிய பாடத்தைப் புகட்டுவார்கள் - என்றார். (உ-5)

## கட்சி...

சிந்தனைகள் அந்தக் கட்சிகளைத் தனித்துப் போட்டியிட உந்துகின்றன போலத் தெரிகின்றது. இவற்றுள் எமக்கு (தமிழ் மக்கள் பேரவை) அனுசரணை வழங்கும் கட்சிகள் சிலவும் உள்ளடங்குகின்றன.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். தமிழ் மக்கள் பேரவையின் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டு ஆரம்பத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டமைப்பில் இருந்து வெளியேறி புதிய முன்னணி அமைத்துத் தேர்தலில் போட்டியிடப்போவதாக ஈபிஆர்எல்எவ் கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிவித்திருக்கும் நிலையில் முதலமைச்சர் இவ்வாறு உரையாற்றியிருக்கிறார். எனவே ஈபிஆர்எல்எவ் கட்சியை முன்னிட்டே முதலமைச்சர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

முதலமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

கட்சி அரசியல் எனும்போது குறுகிய ஒரு வட்டத்தினுள் கட்சியின் நலன் கருதி உரிய நடவடிக்கைகளை முக்கியமாகத் தேர்தலின்போது எடுப்பதையே அது குறிக்கும். நாம் கட்சி அரசியலுக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் கட்சிகளின் எதிர்பார்ப்புக்களும் நடவடிக்கைகளும் குறுகிய வட்டத்தினுள் அடங்குவன என்பதைத் தான் நான் இங்கு கூறவருகின்றேன். எம்மோடு இயைந்து நடந்துவரும் இந்தக் கட்சிகளுடன் எதிர்காலத்தில் மற்றைய கட்சிகளையும் எமது இயக்கமானது உள்ளடக்கலாம் என்ற எதிர்பார்ப்பு எம்மத்தியில் உண்டு.

### கட்சி முரண்பாடுகளை ஒதுக்குங்கள்

கட்சிகள் பொதுவாகவே கட்சிச் சிந்தனைகளின் நிமித்தம், தமது தனித்துவத்தைப் பேண வேண்டியதன் நிமித்தம் மற்றைய கட்சிகளுடன் முரண்படக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. என்றாலும் தமிழ் மக்களின் விடிவுகாலத்தை எதிர்நோக்கிச் செல்லும்போது கட்சிகளாவன தற்காலிகமாகவேனும் கட்சி முரண்பாடுகளை ஒதுக்கி வைக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

இப்பொழுதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இணைப்புக் கட்சிகளாக இருக்கும் சில கட்சிகள் தம்மிடையே போட்டி போடக் கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கின்றன. ஆரம்பத்திலிருந்தே ஐந்து கட்சிகள் சேர்ந்தே என்னை முதலமைச்சர் பதவிக்கு பரிந்துரை செய்ததன் அடிப்படையில் கட்சி ரீதியாக முரண்பட நான் முன்வரவில்லை, இசையவில்லை.

அரசும், சிங்கள மக்கள் தலைவர்களும், முஸ்லிம் மக்கள் தலைவர்களும் திடமான கொள்கைளை வகுத்து அவற்றின் அடிப்படையில் நகர்ந்து கொண்டிருக்கும் வேளையில், தமிழ் மக்கள் தலைவர்கள் உட்பூசல்களுக்கு இடங்கொடுத்து, தன்நல சிந்தனைகளுக்கு இடம் கொடுத்து, தம்முள் போட்டி மனப்பான்மையுடன் நடக்கவே எத்தனித்துள்ளார்கள். இது ஒட்டுமொத்தத் தமிழ் இனத்தையும் அழிவுப் பாதையில் செல்ல வழிவகுக்கும் என்பது எமது க்கருத்து.

### ஆயுதங்களால் ஒற்றுமையாக இருந்தனர்

பொது நலன் கருதி, எமது சுயநலங்களையும் முரண்பாடுகளையும் ஒதுக்கி வைக்க வேண்டிய ஒரு கால கட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். இவ்வாறான ஒரு முரண் நிலையை ஆயுதங்கள் ஏந்தியவர்கள் காலத்தில் ஆயுதங்களே தடுத்து நிறுத்தின. இன்று ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட நிலையில் நாங்கள் ஒவ்வொருவருமே எம்முடைய கடமை யாது என்று ஆய்ந்து அறிந்து உணர்ந்து செயற்பட வேண்டிய நிலையில் உள்ளோம்.

எங்களுடைய தனிப்பட்ட கட்சி பேதங்களும், அதிகாரப் பேராசையும், தனிப்பட்ட விரோதங்களும் ஏகோபித்த தமிழ் மக்களுடைய அரசியல் நல உரித்துக்களைப் பாதிக்க நாம் அனுமதிக்கக் கூடாது என்பதை தமிழ் மக்கள் பேரவை எல்லாக் கட்சிகளிடமும் வலியுறுத்திக் கோருகின்றது.

### தறுதலைகளை நியமிக்கும் தலைமைகள்

உள்ளூராட்சிச் சட்டத்துக்கு அமைவாக சபைகளின் தவிசாளர்கள் மீது சில பொறுப்புக்கள் உள்ளன. அவ்வாறான பொறுப்புக்களைச் செய்து முடிக்கக் கூடியவர்களையே தவிசாளர்களாக நியமிக்க முன்வரவேண்டும். மாறாக கட்சித் தலைமைகள் தம்மைத் தலைமைத்துவத்தில் தக்கவைக்கத்தக்க தறுதலைகள் மீதே கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர்.

ஊழல்கள் ஏற்படவும், முரண்பாடுகள் பிரதேச சபைகளில் உருவாகவும் காரணகர்த்தாக்கள் கட்சித் தலைமைகளே என்றால் அது பிழையாகாது. அந்தப் பதவிகளில் சிறக்கப் பணிபுரிவோரை ஏற்க முன்வராது கையாள்களையும் கட்சி ஆதரவாளர்களையுமே இணைத்துவிடப் பார்க்கின்றார்கள். இந்த நிலைமாறவேண்டும். வெறுமனே கட்சியின் விசுவாசத்திற்குப் பாத்திரமானவர்கள் என்ற அடிப்படையில் உறுப்பினர்களைச் சேர்க்காது அவர்களின் தரம் பார்த்து, தகைமை பார்த்து உரியவர்களை நியமிக்க கட்சிகள் முன்வர வேண்டும். படித்த இளைஞர் சமுதாயம் அடிமட்ட உள்ளூராட்சி சபைகளில் இடம்பெற நாங்கள் வழி அமைக்க வேண்டும்.

### அடுத்த தலைமுறை தலைமைத்துவம்

பெரும்பாலான எமது கட்சித் தலைமைகள் 60 வயதைத் தாண்டியவர்கள். அடுத்த கட்டத் தலைமை இப்பொழுதிருந்தே அடையாளப்படுத்தப்பட்டு அதிகாரத்தில் இருத்தப்பட்டு போதிய அரசியல் அறிவு மற்றும் அனுபவத்தைப் பெற நாம் இடமளிக்க வேண்டும். மாறாக நாம் கா[illegible] பது தலைமைத்துவங்கள் தம்மைப் பதவிகளி[illegible] நீடிக்கப் பல வழிகளிலும் பாடுபடுவதையே. இன்றைய தலைவர்கள் காமராஜர் போல பி[illegible] னிருந்து தமிழர் அரசியல் இயந்திரத்[illegible] இயக்க முன்வரவேண்டும். வருங்காலத்தி[illegible] தமிழ்த் தலைமைகள் எவ்வாறு நடந்து கொ[illegible] ளவேண்டும் என்பதை சிரத்தையுடன் ஆராய்[illegible] செயற்படுவது இன்றைய தலைமைத்துவங்[illegible] ளின் தலையாய கடன் என்று கூறி வரப்போகும் உள்ளூராட்சித் தேர்தல்களில் தகுந்த தகைமை மிக்க இளையோரை உள்ளடக்க முன்வாருங்கள்-என்றார். (உ-5.101)

# எதற்காக நீங்கள் எங்களைத் தெரிவு செய்ய வேண்டும்?

உயர்தரம் அடையாளம் நம்பிக்கை




## கலண்டர்களின் உதயம்

புதுவருடத்தினை நவீன வடிவமைப்புக் கலண்டர்களுடன் புன்னகைத்து வரவேற்போம்...

உயர்தரம் மற்றும் நம்பிக்கைக்குப் பெயர் பெற்ற **கரிகணன்** கலண்டர்களினை கொள்வனவு செய்து புதுவருடத்தினை சுபமாக ஆரம்பியுங்கள்...!

உங்களால் நாங்கள்... உங்களுக்காகவே நாங்கள்....

## புதுவருட சிறப்புச் சலுகைகள் உங்களுக்காக...

### கலண்டர்களின் கொண்டாட்டம் மீண்டும்

# கரிகணனில்





நந்தவனப் பூக்களைப்போல் எண்ணிலடங்கா வடிவமைப்புக்கள்

**எதை எடுப்பது? எதை விடுப்பது?**

**இவ்வளவு குறைந்த விலையில் வேறு யார் கொடுப்பது?**




**முதற்கட்டப் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.**

# கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்

**Offset | Digital | Screen | Design**

இல.681, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**+94 21 222 2717 | 8**

# வேல்ஸை வென்றது பிரான்ஸ்

கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிச்சுற்று ஆட்டங்கள் பரவலாக நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான ஆட்டமொன்றில் வேல்ஸை வென்றது பிரான்ஸ்.

ரஷ்யாவில் அடுத்த வருடம் உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடர் நடைபெறவுள்ளது. இதற்கான தகுதிச்சுற்று ஆட்டங்கள் உலகின் பல பாகங்களிலும் பரவலாக நடைபெற்று வந்தன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பிரான்ஸ் 2:0 என்ற கோல் கணக்கில் வேல்ஸை வென்றது.

ஏனைய ஆட்டங்களில் சேர்பியா 2:0 என்ற கோல் கணக்கில் சீனாவையும், தென்கொரியா 2:1 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவையும், போர்த்துக்கல் 3:0 என்ற கோல் கணக்கில் சவூதி அரேபியாவையும் வீழ்த்தின.

பெல்ஜியம்-மெக்சிக்கோ, இங்கிலாந்து - ஜேர்மனி, போலந்து - உருகுவே அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம)





# மானிப்பாய் ஏஞ்சல் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், நவ. 13

இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திவரும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கான தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கொழும்பு சகிராக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் அண்மையில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணியை எதிர்த்து மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி அணி மோதியது. இந்த ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி 62:60 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

(ம-23-422)

## கிளி. சைவ சிறுவர் இல்ல மாணவர்களுக்கு கராத்தே தொடரில் கணிசமான பதக்கங்கள்

இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திய தேசியமட்ட கராத்தே தொடரில், கிளிநொச்சி சைவ சிறுவர் இல்ல மாணவர்கள் ஒரு தங்கப்பதக்கம், மூன்று வெண்கலப்பதக்கங்களைக் கைப்பற்றினர்.


கொழும்பு சுகததாச உள்ளரங்கில் இடம்பெற்றுவரும் தேசிய காரத்தே போட்டியில் 17 வயது பெண்களுக்கான குமித்தே போட்டியில் சண்சயா தங்கப் பதக்கத்தையும், காட்டாப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், 16 வயதுப்பிரிவு பெண்களுக்கான குமித்தே போட்டியில் தனுசிகா வெண்கலப் பதக்கத்தையும், 17 வயது ஆண்களுக்கான குமித்தே போட்டியில் சங்கீதன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)

## சென். ஜோன்ஸ் மாணவன் வென்றார் தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், நவ. 13

இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திய தேசியமட்டத் தொடரில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் தமிழ்நிலவன் இரண்டு தங்கப் பதக்கங்களைத் தனதாக்கினார்.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் இந்தப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. 10 வயதுப்பிரிவு ஆண்களுக்கான காட்டாப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் தமிழ்நிலவன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். குமித்தேப் போட்டியிலும் அவர் தங்கப்பதக்கம் வென்றார். (ம-23)



## கிளி. மகாதேவா ஆச்சிரமத்தின் மாணவர்களுக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், நவ. 13

இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்தும் தேசிய கராத்தேத் தொடரில் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம மாணவர்கள் இருவர் வெண்கலப்பதக்கங்களைக் கைப்பற்றினர்.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் இடம்பெற்று வரும் தேசிய காரத்தே தொடரில் 14 வயதுப்பிரிவு பெண்களுக்கான குமித்தே போட்டியில் சரண்ஜா, 14 வயதுப்பிரிவு ஆண்களுக்கா குமித்தே போட்டியில் சுதர்சன் ஆகியோரே இவ்வாறு வெண்கலப் பதக்கங்களைக் கைப்பற்றினர். (ம-23)

## ஆட்டம் சமநிலை

இலங்கை அணிக்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவரின் பதினொருவர் அணிக்கும் இடையிலான இரண்டு நாள்களைக் கொண்ட பயிற்சி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

கொல்கத்தாவில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 9 இலக்குகளை இழந்து 411 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சாமர விக்கிரம 74 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவரின் பதினொருவர் அணி 5 இலக்குகளை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டம் சமநிலையானது. (ம)




## பொறாமை பிடித்தவர்களே டோனியை எதிர்க்கின்றனர்

### *ரவி சாஸ்திரி காட்டம்*

“இந்திய அணியின் முன்னாள் தலைவரான டோனி, ஓய்வு பெறவேண்டும் என்று வலியுறுத்துவோர் அவரது பெறுபேறுகள் தொடர்பில் பொறாமையில் உள்ளோரே” என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி.

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்தது. இந்த ஆட்டத்தில் டோனி பெரியளவில் பிரகாசிக்கவில்லை. இதை அடுத்தே டோனிக்கு எதிராக பரவலாகக் கருத்துக்கள் வைக்கப்படுகின்றன. இதையடுத்து டோனி ஓய்வுபெற வேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருந்தார் முன்னாள் வீரர் லக்ஷ்மன். அகர்கர்,லக்ஷ்மன் கருத்தை ஆமோதித்தார். கங்குலி “டோனிக்குப் பதிலாக மாற்று வீரர் ஒருவரைத் தெரிவுசெய்ய வேண்டும்” என்று தெரிவித்தார். இத்தகைய பின்னணியில் டோனிக்கு ஆதரவு தெரிவித்தார் ரவிசாஸ்திரி.

“பொறாமை பிடித்த சிலர் டோனி இன்னும் ஒன்றிரண்டு ஆட்டங்களில் மோசமாக விளையாட வேண்டும் என்று விரும்புகிறார்கள். சிலர் டோனியின் ஓய்வு முடிவை பார்க்க, காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், டோனியைப் போன்ற தலைசிறந்த வீரர்கள் அவர்களுடைய முடிவை அவர்களாகவே முடிவு செய்வார்கள். டோனி குறித்த விமர்சனம் எனக்குள் வேறுபாட்டை உண்டாக்காது. எங்களுடைய மனநிலை எங்களுக்குத் தெரியும். டோனி அணியுடன் இருக்க வேண்டும். டோனி மிகச்சிறந்த வீரர்” என ரவிசாஸ்திரி மேலும் தெரிவித்தார். (ம)

## ரகானே முக்கிய அடைவு

இரண்டு 500ஆவது டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடிய வீரர் என்ற முக்கிய அடைவை எட்டினார் இந்திய அணியின் துடுப்பாட்ட வீரரான ரகானே.

இந்திய மாநிலங்களுக்கு இடையிலான ரஞ்சித் தொடரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான ஆட்டமொன்றில் பரோடா - மும்பை அணிகள் மோதின. இந்த ஆட்டம் மும்பை அணியின் 500 ஆவது ஆட்டமாகும். கடந்த வருடம் நடைபெற்ற இந்திய அணியின் 500 ஆவது டெஸ்ட் ஆட்டத்திலும் ரகானே இடம்பிடித்திருந்தார். இதன்மூலம் இரண்டு 500ஆவது ஆட்டங்களில் விளையாடிய வீரர் என்ற முக்கிய அடைவை ரகானே எட்டினார். (ம)



# அஸ்வின், ஜடேயாவை எதிர்கொள்ளத் தயார்

## கருணாரத்ன அறிவிப்பு

இந்திய அணியின் சுழல்பந்துவீச்சாளர்களான அஸ்வின், ஜடேயாவை எதிர்கொள்ளத் தயார் என்று தெரிவித்தார் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் கருணாரத்ன.



இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் தலா மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட், ஒரு நாள், ரி-20 தொடர்கள் நடைபெறவுள்ளன. டெஸ்ட் தொடர் முதலாவதாக நடைபெறவுள்ளது. இதன்படி முதலாவது ஆட்டம் கொல்கத்தாவில் எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது. தொடர் தொடர்பாக முன்னாள், இன்னாள் வீரர்கள் பலரும் பல்வேறு விதமான கருத்துக்களை வெளிப்படுத்தி வரும் நிலையில் அஸ்வின், ஜடேயாவை எதிர்கொள்ளத் தயார் என்று தெரிவித்தார் கருணாரத்ன.

“ஜடேயா, அஸ்வின் இருவரும் விக்கெட் வேட்டை நடத்தக் காத்திருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஒவ்வொரு முறையும் அவர்கள் மிகச் சிறந்த முறையில் பந்து வீசுவார்கள். நாம் அவர்களுக்கு எந்த வாய்ப்பும் கொடுக்கவில்லை என்றால், அவர்கள் வேறு ஏதாவது செய்ய முயற்சிப்பார்கள். அவர்களின் பந்துவீச்சை எவ்வித பதற்றமும் இன்றி சாதாரணமாக எதிர்கொள்ள வேண்டும். இதுதான் எனது திட்டம். தளர்வான பந்துகளுக்காக காத்திருப்பேன், அவை கிடைக்கும் பட்சத்தில் சரியாகப் பயன்படுத்திக் கொள்வேன். இந்தத் திட்டம் சரியாக வேலை செய்யவில்லை என்றால் ஆடுகளத்தில் இருந்து வெளியேவந்து விளையாடி பந்து வீச்சாளர்களுக்கு கூடுதல் அழுத்தம்கொடுப்பது குறித்து சிந்திப்பேன். இந்தியாவுக்கு எதிராக கொழும்பு டெஸ்ட்டில் அடித்த சதம்தான் பாகிஸ்தான் தொடரில் சிறப்பாக செயற்படுவதற்கான தன்னம்பிக்கையைக் கொடுத்தது. பாகிஸ்தானை எதிர்கொண்ட நம்பிக்கையுடன் தற்போது இந்தியாவைஎதிர்கொள்ளவுள்ளேன்” என கருணாரத்ன மேலும் தெரிவித்தார். (ம)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
இல.101, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931362
follow us : cnrworldwideexpress

VACANCY
Assistant Accountant
We are the leading Business Company.
We have a Vacancy for the above position.
With the following Requirements
- Male or Female
- Intermediate Professional Accounting Qualification.
- Fluency in English
- Atleast 2 years Experience.
- Ability to Deal with Bank.
- Ability to Prepare monthly Accounts and Reports
- Ability to have Knowledge in Import.
Apply to:-
jaffnavacancy@gmail.com

அமெரிக்க லொத்தர் இலவச விசா
உடனடியாக பதிவு செய்யுங்கள்
யாரும் இலவசமாக அமெரிக்கா போகலாம்
ஓரிரு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
0768226243
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240
சாவகச்சேரி 0768226242 | நெல்லியடி 0776699892
பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

மரண அறிவித்தல்
விஸ்வப்பிரம்மஸ்ரீ தம்பையா சிவராசா
(ஆச்சாரி)



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 3ஆம் வட்டாரம், முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வப்பிரம்மஸ்ரீ தம்பையா சிவராசா (ஆச்சாரி) நேற்று (12.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிஅம்மை தம்பதியரின் மருமகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் தேவராசன், வளர்மதி ஆகியோரின் சகோதரனும் சிவசெல்வன், சிவறாஜி, சிவசிறீசண் (பிரதேச செயலகம், கரைத்துறைப்பற்று, முல்லைத்தீவு), சிவபாலன், சிவறாஜறூபினி, சிவஜீவன், சிவஜித்திரகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தமயந்தி, தேவதாசன், சாம்பவி, யோகேஸ்வரன், தேனுஜா ஆகியோரின் மாமனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2017) திங்கட்கிழமை ஐயனார் குடியிருப்பு, முதலாம் வட்டாரம், முள்ளியவளை இல்லத்தில் நடைபெற்று பி.ப. 12.30 மணியளவில் கற்பூரபுல இந்து மயானத்தில் பூதவுடல் தகனம்செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
077 692 4423
தகவல்: குடும்பத்தினர்

1200/-
ஹாம்சன் ஆசிரியரின்
ஆங்கிலம்
16 ஆங்கில பாடப்புத்தகங்கள்
மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்புரிவோர், அனைவருக்குமானது
ஆங்கிலத்தின் அனைத்து வசன அமைப்புகள் மற்றும் பிரயோகங்கள் முழு தமிழ் விளக்கத்துடன்.
ஹாம்சன் ஆங்கிலப் பயிற்சி மையம்
403, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
077 1570 486, 021 320 3313



# பாக். செல்வதை பிற்போடும் தீவுகள்

பாதுகாப்பு அச்சம் காரணமாக மேற்கிந்தியத் தீவுகள் அணி பாகிஸ்தான் செல்வதை பிற்போட்டுள்ளது. இதையடுத்து இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஆட்டம் அடுத்த வருடத்துக்குப் பிற்போடப்பட்டது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்த ஆண்டின் இறுதியில் பாகிஸ்தானுக்கு சென்று 3 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடத் திட்டமிட்டிருந்தது. மூன்று ஆட்டங்களையும் லாகூரில் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆர்வம் காட்டியது. இந்த நிலையில் பாதுகாப்பு அச்சம் காரணமாக பெரும்பாலான மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர்கள் பாகிஸ்தானுக்குச் செல்லத் தயங்குகிறார்கள். இதையடுத்து இந்தத் தொடர் அடுத்த ஆண்டுக்குத் தள்ளிவைக்கப்பட்டது. (ம)



# ஜப்பானை வீழ்த்தியது பிரேசில் அணி

நட்பு ரீதியிலான ஆட்டமொன்றில் நெய்மர் தலைமையிலான பிரேசில் அணி ஜப்பானை 3:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. இந்த ஆட்டம் பிரான்சில் நேற்று முன்தினம் நடைபெற்றது. பலம் வாய்ந்த பிரேசில் அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் பிரேசிலின் முதல் கோலைப் பதிவுசெய்தார் நெய்மர். 17ஆவது நிமிடத்தில் மார்செலோ மற்றொரு கோலைப் பதிவு செய்தார். ஜீசஸ் 36ஆவது நிமிடத்தில் பிரேசிலின் மூன்றாவது கோலைப் பதிவு செய்ய முதல் பாதியின் முடிவில் 3:0 என்று ஆதிக்கம் செலுத்தியது பிரேசில். இரண்டாவது பாதியின் 63ஆவது நிமிடத்தில் ஜப்பானின் டொமோயாகி மகினோ ஒரு கோலைப் பதிவு செய்த போதிலும் முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் பிரேசில் வெற்றி பெற்றது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.